# வரலாற்று வடிவங்கள்

புலவர் சு. குப்புசாமி



# வரலாற்று வடிவங்கள்

பாவலர்

புலவர் சு. குப்புசாமி

சேகர் பதிப்பகம்

புத்தகம் வெளியிடுவோர் - விற்பனையாளர்

66, பெரியார் தெரு

எம்.ஜி.ஆர். நகர் : : சென்னை-600083

முதற் பதிப்பு : ஜூலை, 1976.
உரிமை பெற்றது.

விலை ரூ. ஏழு

உள்ளே...

ஒன்பது படங்கள்

அச்சிட்டோர் :

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014

# அணிந்துரை

**பேராசிரியர் டாக்டர்**
**திரு. கே. வி. இராமன்** எம். ஏ., எம். லிட்., பிஎச்.டி.,
தொன்மை வரலாறு & தொல்லியல்துறைத் தலைவர்
*சென்னைப் பல்கலைக் கழகம்.*

நமது நாட்டில் பழமையான ஊர்கள் எண்ணற்றவை. அவற்றுள் சில காலப் போக்கில் சிறப்புக் குன்றி, இன்று சிற்றூர்களாய்க் காட்சியளிக்கின்றன. ஆனல் ஒரு காலத்தில் நிலவளமும் குடிவளமும் பெற்று வளமிக்க வாழ்க்கைக்கு உறைவிடமாய் அவை திகழ்ந்தன.

அக் காலத்தில் மக்கள் பெரும்பாலும் கிராமங்களிலேயே வாழ்ந்தனர். அவர்களது அரசியல் பொருளாதார சமூக வாழ்க்கை, கிராமங்களை மையமாகக்கொண்டே இயங்கியது. ஆகையால் நமது நாட்டின் உண்மை வரலாற்றை உணர்வதற்கு நமது கிராமங்களின் வரலாற்றை ஆராய்வது இன்றியமையாத தாகிறது. அவ்வூர்களிலுள்ள பண்டைய கோயில்களே அவ்வரலாற்றின் கருவூலங்களாய்த் திகழ்கின்றன.

அக்காலத்து அரண்மனைகளோ அல்லது தனியார் கட்டடங்களோ காலப் போக்கில் அடிச்சுவடின்றி மறைந்துவிட்டன. ஆனல் நமது திருக்கோயில்கள் மட்டும்காலத்தைக் கடந்து நம்மிடையே தலைமுறை தலைமுறைகளாக வரலற்று கலங்கரை விளக்கங்களாக நிலைத்து வருகின்றன.

அவை அனைத்திலும் பல நூற்றாண்டுகளின் கதையைக் கூறவல்ல கல்வெட்டுகள், கட்டிட வேலைப்பாடுகள், சிற்பங்கள், பூசைக்கிரமங்கள், மற்றும் பழைய மரபுகள் மலிந்து கிடக்கின்றன. அவற்றை ஆராய்ந்து, வரலாற்று உண்மைகளை வெளியிடுவது நமது கடமையாகும். இக்கடமையை **"வரலாற்று வடிவங்கள்"** என்னும் இந்நூலில் **புலவர் சு. குப்புசாமி** சிறப்பாக ஆற்றியுள்ளார்.

தென் ஆர்க்காடு மாவட்டம் உளுந்தூர்ப்பேட்டை வட்டத்திலுள்ள **எலவானாசூர்** என்னும் ஊரைப்பற்றிய ஏனைய வரலாற்றுக் குறிப்புகளையும் ஒன்று சேர்த்து இந்

நூலில் தந்துள்ளார். இவர் கல்வெட்டுகளை நேரே படித்து ஆராய்வதில் நல்ல ஆர்வமும் தேர்ச்சியுமுடையவர். ஆகையால் இவர் இதுகாறும் வெளிவராத கல்வெட்டுகளை யும் இந்நூலில் வெளியிட்டுள்ளார். அவற்றைத் துணையாகக் கொண்டு கி.பி.10 ஆம் நூற்றுண்டு தொடங்கி கி.பி. 18ஆம் நூற்றுண்டு வரை இவ்வூர் பற்றிய சிறப்புச் செய்திகளை வரலாற்று நோக்குடன் ஆராய்ந்துள்ளார்.

கட்டிடக்கலையிலும் எலவானசூர்க் கோயில் சிறப் புடையது. ஏறத்தாழ 4 மீட்டர் உயரமுள்ள பீடத்தின்மீது கருவறை அமைக்கப்பட்டுள்ளது. அதை மலைமீதுள்ள கோயி லாகவே கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளதை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எலவானசூர்க் கோவிலில் எழில் மிக்க சிற்பங்கள் பல உள்ளன. அவற்றுள் மான்வாகனத்துடன் நிற்கும் துர்க்கை யும், சுப்பிரமணியரின் சிற்பமும் அரிய படைப்புகளாகும்.

இவ்வாறாக பல அரிய வரலாற்றுச் செய்திகளை கோர் வையாகவும் ஆராய்ச்சி நோக்குடனும் அளித்துள்ள இந் நூலாசிரியர் பாராட்டுதலுக்குரியவர்.

இவ்வூரிலுள்ள சாசனங்களனைத்தும் இந் நூலின் பின்னால் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது, சிறப்பான முயற்சியாகும். தவிர கோவிலின் தோற்றமும் அங்குள்ள எழில் மிக்க சிற்பங்களின் தோற்றங்களும் புகைப்படங் களாக வெளியிட்டிருப்பது வாசகர்களுக்கு மன நிறைவு அளிக்கின்றது.

ஆசிரியர் புலவர் சு.குப்புசாமி அவர்களின் ஆராய்ச்சித் துடிப்பும் பயனுள்ள உழைப்பும் இந்நூலில் நன்கு பிரதி பலிக்கின்றன. வரலாற்று மாணவர்களுக்கும் ஆராய்ச்சி யாளர்களுக்கும் ஏன், அனைவருக்குமே இந்நூல் இனிய விருந்தாகும் என்பதில் ஐயமில்லை.

சென்னை
27-6-76

**கே. வி. இராமன்**

## நூலாசிரியரின்

# நன்றியுரை

தென்னார்க்காடு மாவட்டம், உளுந்தூர்ப் பேட்டை வட்டத்தில் உள்ளது எலவானாசூர். அங்குள்ள சிவன் கோயில் மிகப் பழமையானது. கல்வெட்டுகள் நிறைந்துள்ள அச் சிவன் கோயில், சிறுகச் சிறுகச் சிதைந்து சீரழிந்து வருகிறது. கல்வெட்டுகளும் சிதைந்தும் சிதைக்கப்பட்டும் மறைகின்றன. இந்நிலையில் அவற்றை விரைந்து வெளியிடவேண்டியது நமது கடமையாகிறது.

தமிழ் நாட்டின் பண்டைய அரசியல் சமூக பொருளாதார கலை மொழி இலக்கிய வரலாறுகளை அறிந்துகொள்ள, இத்தகைய கல்வெட்டுகள் பெரிதும் பயன்படத் தக்கவை. ஆதலின், அங்குள்ள கல்வெட்டுகளை நேரிற் படித்து, அவற்றின் முழுமையான வாசகங்களை இந்நூலில் இணைத்துள்ளேன். கல்வெட்டுகள் அனைத்தும் முற்காலத் தமிழ் எழுத்துகளில் வரையப்பட்டுள்ளன. இடையிடையே சிற்சில சொற்கள் கிரந்த எழுத்துக்களைக் கொண்டுள்ளன. கிரந்த எழுத்துகளுக்கு மாற்றாக நான் தமிழ் எழுத்துகளைச் சேர்த்துள்ளேன். எனினும் வாசகங்களில் மாற்றமில்லை. கல்வெட்டுகளால் அறியப்பெறும் செய்திகளையும் ஊர்களையும் பற்றி, இயன்றவரை விரிவாக ஆராய்ந்துள்ளேன்.

கல்வெட்டுத் துறையில் என்னை வளர்த்து ஆளாக்கி அருளிய மதிப்பிற்குரிய என் ஆசிரியப் பெருந்தகை, ஆராய்ச்சிக் கலைஞர். **வித்துவான் திரு வை. சுந்தரேச வாண்டையார்** அவர்களின் திருவடிகளை, என் நெஞ்சில் நிறுத்தி வணங்குகிறேன்...

தமது எண்ணற்ற பல்வேறு அலுவல்களுக்கிடையே இந்நூலைப் படித்து, தக்கதொரு அணிந்துரை நல்கி, இதற்குப் பெருமை சேர்த்துள்ள தொல்பொருள் ஆராய்ச்சி அறிஞர் பேராசிரியர் டாக்டர் **திரு. K. V. இராமன் M. A, M. Litt, Ph.d.,** அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வெட்டுகளின் வாசகங்களை வெளியிடுதற்கு இசைவு நல்கிய இந்திய அரசின் முதன்மைக் கல்வெட்டறிஞர் (Chief Epigraphist of India-Mysore-5) அவர்களுக்கும், இந்நூலுக்கு வேண்டும் விளக்கப் படங்கள் தந்துதவிய பிரஞ்சு இந்திய இயற் கழகத்தார்க்கும் (Freneh Institute of Indology, Pondicherry) என் நன்றி உரியது.

எலவானசூர்க் கல்வெட்டுகளை நான் படி எடுக்கும் பொழுது உடனிருந்து உதவிய பிடாகம் ஊராட்சித் தலைவர் திரு ஆ. கேசவன் அவர்களுக்கும், சிவன் கோயில் முன்னாள் அறங்காவற் குழுத் தலைவர் திரு மா. கலிய பெருமாள் அவர்களுக்கும் நன்றி.

சிறந்த எழுத்தாளரும் கவிஞரும் கல்வெட்டில் பெரிதும் நாட்டம் கொண்டவருமான என் இனிய நண்பர் **வெள்ளையாம்பட்டு சுந்தரம்** அவர்கள், இந்நூலினை வெளியிடுவதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். அவர் தந்த ஊக்கத்தின் விளைவாகவே, இந்நூல் முழுமையாக உருப்பெற்றது எனின் அது மிகையாகாது. அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

அனைத்துக்கும் மேலாக என்னையும் ஒரு பொருட்டாக மதித்து இத்துறையில் என்னை ஈடுபடுத்தி அருளுகின்ற எல்லாம் வல்ல தில்லைநாதனை மனமொழி மெய்களான் வந்திக்கின்றேன்.

தமிழகம் இந்நூலினை ஏற்று இத்துறையில் எனது ஆர்வத்தை வளர்க்கும் என்று நம்புகிறேன்.

திருமுறை இல்லம்,
10/5 E கிழக்கு மாடவீதி
பாகூர் அஞ்சல்
புதுவை மாநிலம்—607402

அன்பன்
சு. குப்புசாமி

# பதிப்புரை

கல்வெட்டுகளுக்கும் எனக்கும் எப்படியோ ஒரு நெருக்கம், உறவு வளர்ந்தபடியே உள்ளது. நினைத்துப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது. பெரிய புத்தக நிலையத்தார் யாரும் இதுவரை திரும்பாத திசை;விரும்பாத நிலை. ஆர்வம் ஒன்றே துணையாக, அடுத்தடுத்து பல கல்வெட்டு நூல்கள் வெளியிட்டுள்ளேன். நம்ப முடியவில்லையா? இதோ வெளியிட்ட நூல்கள்:

1. பல்லவனும் பராந்தகனும்
2. காலச் சுவடுகள்
3. கல் சொல்லும் கதைகள்
4. முத்தரையர்
5. வரலாற்று வடிவங்கள்

பொறுப்புடையோர் குறிப்பு எழுதுவர். நீதி நிலைக்க எழுதுவர்.

பிறப்பும் சிறப்பும் அதிலே விளங்கும்! உறுப்புகளின் தொகுப்பு முழு உடல். குறிப்புகளின் தொகுப்பு முழு வாழ்வு–வரலாறு.

விருப்பும் வெறுப்பும் அவரவர் மனத்தைப்பொறுத்தது. பருப்பும் நெய்யும் பந்தியில் முந்தும்! சாசனச் செய்திகள் சரித்திரம் உரைக்கும்! சரித்திரம் மறந்தால் சரிந்திட நேரும்.

ஊக்கம் பெறவும் ஆக்கம் பெறவும் உறுதுணை புரிவது வரலாற்றறிவு! அதனைப் பெறுவோம்; அதிகம் பெறுவோம். நெருப்புபோல் சுரீர் எனப் பற்றிப் பாயும் ஆர்வம் கொண்டவர் புலவர் சு. குப்புசாமி. நெருப்போ சிவப்பு; இவர் நிறமோ கருப்பு! நெஞ்சில் சுறுசுறுப்பு! சேரன் அம்புபோல்

சீறிப்பாய்பவர்; செயல்வீரர். ஏவுகணை வானில் பாயும்! இவரோ கால வெளியில் கடுகிப் பாய்வார்; உண்மை ஆய்வார்; மீள்வார்!

கல்வெட்டு ஆய்வுப் பணியைத் துப்புத் துலக்கும் கலை எனலாம். தோழர் குப்புசாமி துப்புத் துலக்குபவர் அன்றோ? எனவே அவரைத் **துப்புசாமி** என்றும் அழைக்கலாம்.

முன்னர் இவர், தாம் பிறந்த பாகூர் கல்வெட்டுகளை ஆய்ந்து வெளியிட்டார். அதுவே **பல்லவனும் பராந்தகனும்** எனும் நூல்.

பின்னர் புதுவை மாநிலக் கல்வெட்டுகளைப் பரவவிட்டார். அது **'கல்வெட்டுகளில் புதுவைப்பகுதிகள்'** எனும் நூல்.

ஆசிரியப் பணி புரிந்திட எலவானூர் சென்று தங்கினார். அங்குள்ள தமிழ் பேசும் கற்களுடன் அவர் உறவு கொண்டார். அவற்றின் ஆயிரமாண்டு வாழ்வைத் தெரிந்து கொண்டார். அதனை நாட்டுக்கும் தெரிவிக்கின்றார். அதுவே இந்தப் புத்தகம்!

வல்லவர் குப்புசாமி பழங்காலக் கல்லிலே மோதிக் கொள்பவர். கல்லும் அவருமாகச் சேர்ந்து என்மீதுமோதுகின்றனர். நான் விழுவதா? எழுவதா? எனக்குத் தங்கள் ஆதரவு துணை நிற்குமாக!

ஆசிரியப் பெரியோர்களும் மாணவர்களும் வரலாற்று நூல்களை வாங்கி உதவிட வேண்டுகிறேன்.

**வெள்ளையாம்பட்டு சுந்தரம்**

# காணிக்கை



கல்வெட்டுத் துறையில் எனது ஆர்வத்தினை வளர்த்திடும் வகையில், அவ்வப்பொழுது எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துவருகின்ற, புதுவை வரலாற்றுச் சங்கத் தலைவர் உயர்திரு. திருமுடி ந. சேதுராமன் Ex.M.P. அவர்களுக்கு, இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

ஆசிரியன்

## இந்நூலாசிரியரின் பிற நூல்கள்

1. பல்லவனும் பராந்தகனும்
அசோகன் பதிப்பகம், சென்னை—17.

2. கல்வெட்டுகளில் புதுவைப்பகுதிகள்
வரலாற்றுச்சங்கம். புதுவை.

3. புதுவை மாநிலக் கல்வெட்டுகள்—[அச்சில்] ,,
(முதற் பகுதி)

4. புதுவை மாநிலக் கல்வெட்டுகள்—[அச்சில்] ,,
(இரண்டாம் பகுதி)

# பொருளடக்கம்


1. தோற்றுவாய் *17*

கல்வெட்டுகள் 18
அரசர்கள் 20
மலையமான் நாடு 21

2. ஊரும் பேரும் *22*

இறையானரையூர் 22
இறைசை 23
சோழகேரளச் சதுர்வேதிமங்கலம் 24
பிடாகம் 25
மீர்உசைன்கான்சாகிப் 27
தொத்தேய் படையெடுப்பு 28

3. சுவைதரும் நிகழ்ச்சிகள் *33*

ஓடிய கரணத்தார் 33
சிறையிட்டசெய்தி 34
அரசியல் ஒப்பந்தம் 35
வேளக்காரப்படை 36
திருமதி தேவப் பெருமாள் 37
பன்றி வேட்டை 38
மாடூர் விபத்து 39

4. சிவன் கோயில் *40*

ஊர்பாகங்கொண்டார் 40
வழிபாடுகள் 41
திருவாசகத் திருப்பதிகம் 42
விழாக்கள் 43
இறைசைப் புராணம் 44
அம்மன் கோயில் 45
கூத்தாடு தேவர் 46
வீதிவிடங்கப் பெருமான் 47
பிடாரியார் 47
போகீசுர முடையார் 48

5. வைணவத்தளிகள் *49*

வானவன்மாதேவி விண்ணகர் 49
இராசநாராயண விண்ணகர் 49
முற்றமும் மேற்கோயிலும் 50
நரசிங்கமுடையார் 51

6. கோயிற் பணியாளர் 52
தேவகன்மிகள் 52
ஸ்ரீகாரியம் ஆராய்வார் 52
வெட்டி முட்டையாள் 53
தேவரடியார் 54
பிடாரர் 55

7. கொடை நிலங்கள் 57
நந்தவனங்கள் 57
தேவதான நிலங்கள் 58
வரி வகைகள் 59

8. தேவதான ஊர்கள் 60
நல்லரைசூர் 60
செம்பியன் மாதேவி 61
குஞ்சரம் 63
அரும்புலிப்பாடி 63
பரிந்தல் 64
மலையனூர் 66
புத்தூர் 67
சீயமங்கலம் 67
விக்கரச்சி மங்கலம் 68
நெடுமானூர் 69
மாம்பட்டு 69
அதகூர் 70
சீதேவி 70

9. குறுநில மன்னர்கள் 72
உத்தம சோழ மிலாடுடையார் 72
இராசேந்திர சோழமலைய குலராயன் 74
இராச ராச மலைய குலராயன் 74
சோழேந்திர சிங்க மலையகுலராயன் 75
குலோத்துங்க சோழக் காடவராயன் 75

10. கட்டடக் கலை 77
மாடக்கோயில் 77
முகமண்டம்-மண்டபங்கள் 79
மாளிகைகள் 80
இராசகோபுரம் 80
திருப்பணிகள் 80
சிற்பங்கள் 81
எலவனாசூர்க் கல்வெட்டுகள் 85-188

## இந்நூலில் உள்ள கல்வெட்டுகளால் அறியப்பெறும் அரசர்களும் அவர்களின் ஆட்சி ஆண்டுகளும்

| | அரசன் | ஆட்சி ஆண்டு | கி.பி. ஆண்டு | வெளியீடு |
|---|---|---|---|---|
| 1 | இராசராச சோழன் I | 7 | 992 | 176 of 1906 |
| 2 | ,, | 24 | 1009 | 143 of 1906 |
| 3 | சோழகேரள தேவர் | 3 | 1015 | 133 of 1906 |
| 4 | இராசேந்திர சோழன் I | 5 | 1017 | 141 of 1906 |
| 5 | ,, | 13 | 1025 | 135 of 1906 |
| 6 | இராச மகேந்திரன் | 2 | ? | 473 of 1937-38 |
| 7 | ,, | — | 11ஆம் நூற் | புதிய பதிவு |
| 8 | குலோத்துங்கசோழன் I | 2 | 1072 | 145 of 1906 |
| 9 | ,, | ,, | ,, | 151 of 1906 |
| 10 | ,, | ,, | ,, | புதிய பதிவு |
| 11 | ,, | ,, | ,, | 147 of 1906 |
| 12 | ,, | 10 | 1080 | 478 of 1937-38 |
| 13 | ,, | 11 | 1081 | 132 of 1906 |
| 14 | ,, | 12 | 1082 | 153 of 1906 |
| 15 | ,, | 35 | 1105 | 167 of 1906 |
| 16 | ,, | 48 | 1118 | 164 of 1906 |
| 17 | விக்கிரம சோழன் | 4 | 1122 | 168 of 1906 |
| 18 | ,, | 9 | 1127 | 177 of 1906 |
| 19 | ,, | 12 | 1130 | 171 of 1906 |
| 20 | ,, | 13 | 1131 | 169 of 1906 |

| | அரசன் | ஆட்சி ஆண்டு | கி.பி. ஆண்டு | வெளியீடு |
|---|---|---|---|---|
| 21 | விக்கிரம சோழன் | 17 | 1135 | 165 of 1906 |
| 22 | குலோத்துங்கசோழன் II | 9 | 1142 | 128 of 1906 |
| 23 | ,, | 11 | 1144 | 477 of 1937-38 |
| 24 | இராஜராஜ சோழன் II | 6 | 1152 | 166 of 1906 |
| 25 | ,, | ,, | ,, | 170 of 1906 |
| 26 | ,, | 7 | 1153 | 364 of 1937-38 |
| 27 | ,, | 8 | 1154 | 474 of 1937-38 |
| 28 | ,, | 13 | 1159 | 163 of 1906 |
| 29 | ,, | ,, | ,, | 367 of 1937-38 |
| 30 | ,, | 14 | 1160 | 134 of 1906 |
| 31 | ,, | 15 | 1161 | 140 of 1906 |
| 32 | ,, | ,, | ,, | 137 of 1906 |
| 33 | ,, | 17 | 1163 | 129 of 1906 |
| 34 | ,, | 18 | 1164 | 131 of 1906 |
| 35 | ,, | 19 | 1165 | 144 of 1906 |
| 36 | ,, | ,, | ,, | 146 of 1906 |
| 37 | இராசாதிராச சோழன் II | 10 | 1173 | 139 of 1906 |
| 38 | ,, | ,, | ,, | 148 of 1906 |
| 39 | ,, | 13 | 1176 | 476 of 1937-38 |
| 40 | ,, | ,, | ,, | புதிய பதிவு |
| 41 | குலோத்துங்க சோழன் III | 5 | 1183 | 157 of 1906 |
| 42,, | [வீரராசேந்திரசோழன்] | 6 | 1184 | 178 of 1906 |
| 43 | ,, | ,, | ,, | 172 of 1906 |
| 44 | ,, | ,, | ,, | 158 of 1906 |

| | அரசன் | ஆட்சி ஆண்டு | கி.பி. ஆண்டு | வெளியீடு |
|---|---|---|---|---|
| 45 | வீரராசேந்திர சோழன் | 7 | 1185 | 130 of 1906 |
| 46 | ,, | 13 | 1191 | 502 of 1937-38 |
| 47 | ,, | 30 | 1208 | 489 of 1937-38 |
| 48 | ,, | — | — | 150 of 1906 |
| 49 | ,, | — | — | 498 of 1937-38 |
| 50 | — | — | — | 500 of 1937-38 |
| 51 | — | — | — | 501 of 1937-38 |
| 52 | — | — | — | புதிய பதிவு |
| 53 | — | — | — | புதிய பதிவு |
| 54 | குலோத்துங்க சோழன்III | — | — | 156 of 1937-38 |
| 55 | — | — | — | 484 of 1937-38 |
| 56 | இராஜராஜசோழன் III | 10 | 1226 | 138 of 1906 |
| 57 | கோப்பெருஞ் சிங்கன் | 30 | 1273 | S.I.I. Vol.XII, No. 234 |
| 58 | ,, | ,, | ,, | S.I.I. Vol. XII No. 235 |
| 59 | — | — | — | 155 of 1906 |
| 60 | சடையவர்மன் வீரபாண்டியன் | 8 | 1261 | புதிய பதிவு |
| 61 | சுந்தர பாண்டியன் | 13+1 | 1265+1 | 482 of 1937-38 |
| 62 | விக்கிரமபாண்டியன் | 4 | 1272 | புதிய பதிவு |
| 63 | மாறவர்மன்வீரபாண்டியன் | 7 | 13ஆம் நூற், | 160 of 1906 |
| 64 | ,, | 14 | ,, | புதிய பதிவு |

| | அரசன் | ஆட்சி ஆண்டு | கி.பி. ஆண்டு | வெளியீடு |
|---|---|---|---|---|
| 65 | பாண்டியன் ஸ்ரீவல்லபன்? | 5 | 1137? | 136 of 1906 |
| 66 | — | — | 14ஆம் நூற். | 508 of 1937-38 |
| 67 | விசய நகரர் காலம் | சகம் 1284 | 1362 | 480 of 1937-38 |
| 68 | கம்பண உடையார் | — | 1371-1374 | 162 of 1906 |
| 69 | விசயராய மகாராயர் | சகம் 1368 | 1446 | 161 of 1906 |
| 70 | — | சகம் 1432 | 1510 | 48[illegible] of 1906 |
| 71 | கிருஷ்ணதேவராயர் | சகம் 1442 | 1520 | 494 of 1937-38 |
| 72 | ,, | சகம் 1449 | 1527 | 495 of 1937-38 |
| 73 | அச்சுத தேவமகாராயர் | சகம் 1453 | 1531 | புதிய பதிவு |
| 74 | ,, | சகம் 1457 | 1535 | ,, |
| 75 | சதாசிவ தேவமகாராயர் | சகம் 1478 | 1556 | ,, |
| 76 | ,, | சகம் 1495 | 1573 | 493 of 1937-38 |
| 77 | கொப்பண உடையார் | — | — | 481 of 1937-38 |
| 78 | — | — | — | 482 of 1937-38 |
| 79 | — | — | — | 497 of 1937-38 |
| 80 | — | சித்ரபானு வருஷம் பங்குனிமீ 13உ | | 358 of 1937-38 |

# தோற்றுவாய்

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி"

என்று தமிழர் தம் தொன்மையையும் வீரத்தையும் சிறப்பித்துக் கூறுகிறது புறப்பொருள் வெண்பாமாலை.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"

என்று அக்காலத்திய தமிழ்நாட்டுப் பேரெல்லையைத் தொல்காப்பியத்தின் பாயிரம், திட்ட வட்டமாகக் குறிப்பிடுகிறது. இவ்வாறு பரந்து விரிந்து கிடந்த தமிழ்ப் பெருநாட்டின் தொன்மையான வரலாறுகளை அறிந்துகொள்ளப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. சங்க இலக்கியங்கள் மட்டுமே அவற்றிற்கு ஓரளவு துணையாகின்றன. தமிழகத்தின் ஒட்டுமொத்தமான உண்மை வரலாற்றை அறிய வேண்டுமாயின், சங்க இலக்கியங்கள், பிறநாட்டார்க் குறிப்புகள், தொல்பொருட்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகிய அனைத்தையும் ஒருசேர இணைத்துக் காண வேண்டும்.

## கல்வெட்டுகள்

கல்வெட்டுகள் உலகெங்கும் பரவலாக உள்ளன. எனினும், நமது இந்தியப் பெரு நாட்டிலேதான் அவை மிகுதியாக அமைந்துள்ளன. இங்கும் தமிழ்நாட்டிலேதான் பெருமளவு காணப்படுகின்றன.

இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையினரால், ஏறத்தாழ ஐந்து இலட்சம் கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டன. அவற்றுள் சில ஆயிரம் கல்வெட்டுகள் மட்டுமே வெளியிடப்பட்டன. ஏனையவை படி எடுக்கப்பட்ட அளவிலேயே நின்று விட்டன.

அவற்றின் வாசகங்கள் முற்றும் வெளிவருமாயின், அவை தமிழக வரலாற்றுக்குப் பெரும் பயன் விளைக்கும்.

இதுகாறும் வெளிவந்துள்ள கல்வெட்டுகள் செப்பேடுகள் ஆகியவற்றின் துணையைக் கொண்டு, முடியுடை வேந்தரான சேர சோழ பாண்டிய பல்லவ விசய நகர வேந்தர்களின் வரலாறுகள் ஒருவாறு வெளிவந்துள்ளன. எனினும், இவை மட்டுமே தமிழ்நாட்டின் முழுமையான வரலாறு ஆகாது. இவற்றோடு மொழி, கலை, இலக்கியம், பொருளாதாரம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் வரலாறுகளும் வெளிவருதல் வேண்டும். இவற்றிற்குத் தொல்பொருள் ஆய்வுகள் துணையாகும். அது மிகையன்று.

## எலவானாசூர்க் கல்வெட்டுகள்

மாமல்லபுரம், காஞ்சி, மதுரை, தஞ்சை, புகார், பழையாறை முதலான ஊர்களின் தொன்மையான வரலாறுகள் வெளிவந்துள்ளன. கலவெட்டுகளையும் இலக்கியங்களையும் மையமாக வைத்து இவற்றை ஆராய்ந்தனர்.

அவ்வூர்களை ஒத்த பழமையும் சிறப்பும் உடைய ஊர்கள், நமது தமிழகத்தில் எண்ணற்றவை உள்ளன. அவையெல்லாம் காலப் போக்கில் சீரும் சிறப்பும் குன்றி, இன்று சிற்றூர்களாய்க் காட்சியளிக்கின்றன. அவை அனைத்தும் ஆயிரம் ஆயிரம் ஆண்டு கதையைக் கூறவல்ல, அருமையான கல்வெட்டுகளைத் தம்பாற் கொண்டுள்ளன. அத்தகைய ஊர்களில் **எலவானாசூர்** என்பது ஒன்று.

இச்சிற்றூர் தென்னார்க்காடு மாவட்டம், உளுந்தூர்ப் பேட்டை வட்டத்தில் உள்ள ஊராகும். இங்குள்ள கல்வெட்டுகள் அரசினரால் படிஎடுக்கப்பட்டு, தென்னிந்திய கல்வெட்டுகளின் ஆண்டறிக்கைகளிலும் இடம் பெற்றன[1] அவற்றுள் ஒன்றிரண்டைத் தவிர ஏனைய கல்வெட்டுகளின் முழுமையான வாசகங்கள் இதுகாறும் வெளிவரவில்லை.

அவை பெருமதிப்புடைய சாசனங்களாக இருத்தலின், அவற்றைப் படித்தறிந்து இந்நூலின் பின் இணைப்பாகத் தந்துள்ளேன்.

சில கல்வெட்டுகள் முற்றிலுமாக அழிந்துவிட்டன.

வேறு சில இடையிடையே சிதைந்துள்ளன.

இன்னும் சில புதிய கட்டடங்களால் மறைக்கப்பட்டுள்ளன.

இவ்வூர் பற்றிக் குறிப்பிடும் வேற்றூர்ச் சாசனங்கள் சிலவும், இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

---

1. Annual Reports on South Indian Epigraphy for the years 1906, Nos. 128 - 179 & 1937 - 38, Nos 471–508. ஆண்டறிக்கைகளில் இடம் பெறாத சில கல்வெட்டுகளையும், இதன் பின் இணைப்பில் காணலாம்.

**அரசர்கள்**

எலவானூரில் காணப்படும் பெரும்பான்மையான கல்வெட்டுகள், அவ்வூர்ச் சிவன் கோயிலிலும், ஓட்டைக் குளத்திற்கு அருகில் உள்ள குன்றுகளிலும் வரையப்பட்டுள்ளன. அவற்றைச் சோழர் காலம், பாண்டியர் காலம், விசயநகர வேந்தர் காலம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவை கி.பி. 10 ஆம் நூற்றாண்டு தொடங்கி, கி.பி. 16 ஆம் நூற்றாண்டு முடிய உள்ள கால கட்டத்தைச் சார்ந்தவை. இப் பகுதியின் தொன்மையான வரலாறுகளும், மக்களின் பழக்க வழக்கங்களும் இவற்றால் பெரிதும் வெளிப்படுகின்றன.

எனவே, இக்கல்வெட்டுகளைத் துணையாகக்கொண்டு இவ்வூர் பற்றிய சிறப்புச் செய்திகளையும், தமிழக வரலாற்றுக்குப் பயன்படும் பொதுச் செய்திகளையும் இயன்றவரை அறிய முற்படுவோம்.

**செயங்கொண்ட சோழ மண்டலம்**

இன்றுள்ள தென்னார்க்காடு மாவட்டம், வட ஆர்க்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களும்; ஆந்திர மாநிலத்தில் உள்ள சித்தூர் மாவட்டமும் ஒருங்கிணைந்த பெருநிலப் பரப்பு, அக்காலத்தில் **தொண்டை மண்டலம்** எனப் பெயர் பெற்றிருந்தது.

விசயாலயச் சோழனின் வழிவந்த முதலாம் இராசராசன், இத்தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றி, அதற்குத் தன் சிறப்புப் பெயர்களுள் ஒன்றான **'செயங்கொண்ட சோழன்'** என்னும் பெயரை இட்டு வழங்கினான். அது முதல் இது **'செயங்கொண்ட சோழ மண்டலம்'** என்று பெயர் பெற்றது. எலவானூர், அக்காலத்தில்

இம்மண்டலத்தைச் சார்ந்திருந்த ஊர் என்று சாசனங்கள் குறிப்பிடுகின்றன.

## மலையமான் நாடு

தென்னார்க்காடு மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதி, **மலையமான் நாடு** என்று பெயர் பெற்று விளங்கியது. தென் பெண்ணை ஆற்றின் தென்கரையில் உள்ள **திருக்கோவலூர்**, அதன் தலைநகராக இருந்தது. மலையமான் நாடு என்னும் பெயர், '**மலாடு**' என்று மருவி வழங்குவதும் உண்டு. பிற்காலத்தில் இந்நாடு '**சேதிநாடு**' என்றும் அழைக்கப்பட்டது. இது மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றால் அறியக் கிடைக்கும் செய்தியாகும்[1].

முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக்காலத்தில், இம் மலையமான் நாடு தனி நாடாகப் பிரிக்கப்பட்டு, அம் மன்னனின் சிறப்புப் பெயரால் **ஜநநாத வளநாடு** என்று அழைக்கப்பட்டது. அச்செய்தியை இங்குள்ள சாசனங்கள் தெளிவாக உணர்த்துகின்றன. இப்பெயர் கி. பி. 16 ஆம் நூற்றாண்டு வரை நிலைத்திருந்தது.

## பரனூர்க் கூற்றம்

நாடு அல்லது கூற்றம் என்பது ஒரு வளநாட்டின் உட்பிரிவாகும். மலையமான் நாடு எனப்படும் ஜநநாத வளநாடு பல கூற்றங்களாகப் பிரிக்கப்பட்டது. அவற்றுள் பரனூர்க் கூற்றம், குறுக்கைக் கூற்றம், கிழாற்றுக் கூற்றம், நரையூர்க் கூற்றம், ஆற்றூர்க் கூற்றம் ஆகிய கூற்றங்களின் பெயர்களைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இவற்றுள் எலவானசூர், பரனூர்க் கூற்றத்தைச் சார்ந்த ஊர் என்று சாசனங்கள் சுட்டுகின்றன.

---

1. திருத்தொண்டர் புராணம், மெய்ப்பொருள், செய்யுள்,

# ஊரும் பேரும்

## இறையானரையூர்

எலவானாசூர், திருக்கோவிலூரிலிருந்து ஆசனூர்ச் செல்லும் பெருவழியில், 30 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. உளுந்தூர்ப் பேட்டையிலிருந்து கள்ளக்குறிச்சி செல்லும் பெரு வழியில், மேற்கே 11 கி.மீ. தொலைவு சென்றாலும் இவ்வூரை அடையலாம். இன்றைய நிலையில், அது ஒரு சிற்றூராகக் காட்சியளித்தாலும், கி.பி. 10 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 18ஆம் நூற்றாண்டு வரை, அது பெருஞ் சிறப்புக்கும் பெரு மதிப்புக்கும் உரியஊராக இருந்துள்ளது. இங்குள்ள கல்வெட்டுகள் அனைத்தும் இதன் பழமையான பெயரை இறையானரையூர் என்றே குறிக்கின்றன.

தென்னார்க்காடு மாவட்டம், கடலூர் வட்டம், தீர்த்தனகிரி சிவாங்குரீசுவரர் ஆலயத்தில், கிருஷ்ண தேவராயர் காலத்துச் சாசனம் ஒன்று உள்ளது.[1] சோழ மண்டலத்து இரண்டாற்றுப் பற்றுக்குள் அடங்கியுள்ள சைவ வைணவத் தலங்களைக் கூறுகின்ற அக்கல்வெட்டில், இறையானரையூரும் சிறந்ததொரு சிவத்தலமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

1. South Indian Inscriptions, vol, XVII, No. 145.

எனவே, இத்தலம் எத்துணைப் பெருமை வாய்ந்தது என்பதை இதனால் உணரலாம்.

**இறைசை**

இறையானரையூர் என்னும் பெயர், முற்காலத்தில் இறைசை என்று சுருக்கமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

"சிவப்பிராமணரில் கௌசிகன் நாரணக் கரியான் **இறைசை** நாயகனை சோழ கோன் பட்டன்"

"இந்நாயனார் கோயில் காணியுடைய சிவப்பிராமணன் கௌசிகன் நாரணக் கரியான் **இறைசை** நாயகமான தோழன்"

"இவ்வூர் சிவப்பிராமணரில் கௌசிகன் **இறைசை** நாயகன் ஊர்பாகங் கொண்டானை சோழ கேரள பிரமமாராயன்"

எனவரும் கல்வெட்டுத் தொடர்களால், இவ்வூர் **இறைசை** என்று வழங்கப்பட்டதை அறிகிறோம். அன்றியும், இவ்வூருக்குரிய தலபுராணம் **இறைசைப் புராணம்** என்று பெயர் பெற்றதைக் கொண்டும் இதனை நன்கு உணரலாம். இறைசை என்னும் பெயர், இரண்டாம் இராசராச சோழன் காலத்துக் கல்வெட்டுகளில் மட்டுமே தொடர்ந்து வந்துள்ளது. ஏனைய சோழ பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளில் இப்பெயர் இல்லை. விசயநகர வேந்தர் காலத்துச் சாசனம் ஒன்றில் மட்டும் இறைசை என்று குறிக்கப்பட்டுள்ளது.

**பிரமதேயம்**

முற்காலத்தில் அந்தணர்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட ஊருக்குப் பிரமதேயம் என்று பெயர். இது சதுர்

வேதி மங்கலம் என்ற பெயராலும் குறிக்கப்படுவது உண்டு. சதுர்வேதம் என்பதற்கு, நான்கு வேதங்கள் என்று பொருள்.

தனியொரு அந்தணருக்கோ அல்லது பலருக்கோ இவ்வாறு பிரமதேய உரிமை வழங்கப்படுவது உண்டு. அவ்வூரின் வருவாய் முழுவதும் அவ்வந்தணர்களையே சாரும். நாற்பதினாயிரம் அந்தணர்களுக்குப் பிரமதேய உரிமை வழங்கப்பட்ட செய்தியொன்று, வீர ராசேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றால் புலனாகிறது.[1]

தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுவல்லவராய்த் திகழ்ந்த தமிழ் அறிஞர்களுக்கு, இவ்வாறு பிரமதேய உரிமை வழங்கப்பட்டதாகக்கல்வெட்டு ஆதாரம் ஏதுமில்லை. விரல் விட்டு எண்ணுகின்ற அளவில் ஒரு சில தமிழறிஞர்கள், தாம் இயற்றிய தலபுராணங்களுக்காக நிலம், வீட்டு மனை முதலானவற்றை மானியங்களாகப் பெற்ற செய்திகள் சிற்சில கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

அந்தணர்களுக்குக் கொடுக்கப்பட்ட பிரமதேய உரிமையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இவை மிகச்சிறிய அளவினதாகும். எனவே, பல்லவர் காலம் முதல் விசயநகர வேந்தர் காலம் வரையும், வேதம் வல்ல அந்தணர்கள் போற்றப்பட்டதைப் போல தமிழ் அறிஞர்கள் போற்றப்படவில்லை.

### சோழ கேரளச் சதுர்வேதி மங்கலம்

இறையானரையூர் முற்காலத்தில் அந்தணர்களுக்குப் பிரமதேய உரிமையாகக் கொடுக்கப்பட்ட ஊராகும். ஆத

---

1. Travancore Archeological Series, vol. III, No. 34,

வின், முதலாம் இராசராச சோழன், அவன் மகன் இரா சேந்திர சோழன் ஆகியோரின் சாசனங்கள் "**பிரமதேயம் இறையானரையூர்**," என்று குறிக்கின்றன.

இவ்வூருக்குச் **சோழ கேரளச் சதுர்வேதி மங்கலம்** என்னும் புதிய பெயர், இராச மகேந்திர சோழனின் கல் வெட்டில்தான் முதன்முதலாகக் குறிக்கப்பட்டுள்ளது.

இவன் காலத்துக்குப் பிறகு வரையப்பட்ட எல்லாக் கல்வெட்டுகளிலும், சோழ கேரளச் சதுர்வேதி மங்கலம் என்னும் இப்புதிய பெயர் தொடர்ந்து காணப்படு கிறது.

**சோழ கேரளன்** என்பது முதலாம் இராசேந்திர சோழனுக்குரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்று. ஆதலின் அம்மன்னனின் மகன் இராசமகேந்திர சோழன், இவ்வூ ருக்குச் சோழ கேரளச் சதுர்வேதிமங்கலம் என்று பெயரிட் டுள்ளான். விக்கிரம சோழனின் கல்வெட்டு ஒன்று இதனைச் சோழ கேரள நல்லூர் என்று கூறுகிறது.

**பிடாகம்**

மாறவர்மன் வீரபாண்டியனின் கல்வெட்டு ஒன்றில் கீழ்க்கண்ட பகுதி காணப்படுகிறது.

"இப்பணம் நாற்பதுக்கும் உடலாகக் கொண்டு குடுத்த இவ்வூர் சபையாரில் 'எடுத்த முகியா'ரான சோமதேவ பட்டர் **பிடாகை** கடமையாற்ற மாட்டாமல் ஓடிப் போகையில்"

இங்குப்பிடாகை என்னும் சொல், இறையானரையூரின் ஒரு பகுதியை உணர்த்துகிறது. விக்கிரம பாண்டியன் கல்வெட்டு ஒன்றிலும்,

"இவ்வூர்ப் **பிடாகைப்** பற்றிலும்"

என்று பிடாகை குறிக்கப்படுகிறது. எலவானாசூர்ப் பகுதியைப் 'பிடாகைப் பற்று' என்று குறிக்கும் கல்வெட்டுகள், இப்பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளே ஆகும். பாண்டியரைத் தொடர்ந்து ஆட்சி செலுத்திய விசயநகர வேந்தர்களின் கல்வெட்டுகளிலும், இப்பெயர் தொடர்ந்து காணப்படுகிறது. இப்பெயரே பிடாகம் என்று மருவி, இக்காலத்தில் எலவானாசூரின் ஒரு பகுதிக்குப் பெயராக நிலைத்துள்ளது.

**எலவானாசூர்**

பல்வேறு கால கட்டங்களில் இறையானரையூர், சோழ கேரளச் சதுர்வேதி மங்கலம், சோழ கேரள நல்லூர், பிடாகம் எனப் பலவகையான பெயர்களைப் பெற்றிருந்த இவ்வூர். இன்று எலவானாசூர் என்று அழைக்கப்படுகிறது. இப்பெயர், இறையானரையூர் என்ற பெயரின் மருவிய வழக்காகும்.

இராம ராவணப்போர் முடிந்து, இராமன் இவ்வூரின் வழியாக வந்தபோது, இங்கிருந்த அனுமனைக் கண்டு "**எலே!வானர சூரா!**" என்று அழைத்ததாகவும், அவ் விளிப் பெயரே, இப்போது **எலவானாசூர்** என்று மருவி வழங்குவதாகவும் செவிவழிச் செய்தியொன்று கூறுகிறது.[1]

---

1. Madras District Gazetteers, South Arcot (1906) PP. 373 [W. Francis].

இத்தகைய செவிவழிச் செய்திகளில் பல, வரலாற்று ஆராய்ச்சிக்குத் துணை நிற்பதில்லை. ஆதலின், அதுபற்றி இங்கு ஆராயப் புகவில்லை.

## கர்நாடகப் போர்

கி.பி. 18ஆம் நூற்றாண்டு வாக்கில் தென்னிந்தியாவில் இருந்த ஐரோப்பிய வணிகக் குழுக்களில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியும், பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

அந்தக் கால கட்டங்களில் தென்னிந்திய அரசியலில், ஐதராபாத்து நிஜாம் பதவிக்கும், கர்நாடக நவாப்பு பதவிக்கும் போட்டிகள் நிலவின. இவற்றின் விளைவாக நடைபெற்ற போர்களை, வரலாற்று ஆசிரியர்கள் கர்நாடகப் போர்கள் என்பர்.

கர்நாடக நவாபான **அன்வருதீன்** என்பவருக்கும், அவர் மகன் **முகம்மது அலி** என்பவருக்கும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் துணையாக நின்றனர். **சந்தா சாகிப்பு** என்பவருக்குப் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியார் துணையாக நின்றனர்.

இவ்விரு திறத்தார்க்கும் ஏற்பட்ட பகைமை காரணமாகத் தென்னிந்தியாவின் பல இடங்களில், புதிய கோட்டைகள் தோன்றின. அக்காலத்தில் எலவானசூரிலும் கோட்டை ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. அன்றிலிருந்து இவ்வூர், **எலவானசூர்க் கோட்டை** என்ற புதிய பெயரையும் பெற்றது.

## மீர்உசைன் கான் சாகிப்பு

எலவானசூர்க் கோட்டையையும், அதனைச் சார்ந்த இடங்களையும் கண்காணிக்கும் பொறுப்பை மேற்கொண்

டிருந்தவன், மீர்உசைன்கான் சாகிப்பு என்னும் துணிவாண்மை மிக்க தலைவன் ஆவான். இவன் வீரம் மிக்க படையொன்றையும் வைத்திருந்தான். அன்றியும், கர்நாடக நவாபான முகம்மது அலியின் பிரதிநிதியாகவும் விளங்கினான். ஆதலின் இவன் ஆங்கிலேயருக்கு நண்பன்! பிரெஞ்சுக்காரர்களுக்குப் பகைவன்!

செஞ்சிக்கோட்டை அப்போது பிரெஞ்சுக்காரர்களுக்கு உரியதாக இருந்தது. அக் கம்பெனியின் போர்த் தளவாடங்களும், படைகளும் அங்கே நிறைந்திருந்தன.

பிரெஞ்சுக்காரர்கள் மீர்உசைன்கான் சாகிப்பையும், அவன் பொறுப்பில் இருந்த எலவானசூர்க் கோட்டையையும் அழிக்கத் திட்டமிட்டிருந்தனர். பிரெஞ்சுக் கம்பெனிக்கு ஆளுநராக இருந்த தூய்ப்ளே என்பவரின் கீழ், நான்கு சிறந்த படைத்தலைவர்கள் பணியாற்றினர். அவர்களுள் **புய்சி** என்பவரும், **தொத்தேய்** என்பவரும் குறிப்பிடத் தக்க சிறப்புடையவர்கள்.

## தொத்தேய் படையெடுப்பு

10-12-1756 இல், தொத்தேய் தலைமையில், 200 ஐரோப்பியர்களும், 1000 சிப்பாய்களும், பீரங்கி முதலான இன்னபிற போர்த் தளவாடங்களும் கொண்ட பிரெஞ்சுப் படையொன்று எலவானசூர்க் கோட்டையை நோக்கி வந்தது.

இந்நிலையில், மீர்உசைன்கான் பிரெஞ்சுப் படையை எதிர்க்கத் தயாரானான். இரு திறத்துப் படைகளும்

எலவானூர்ப் பகுதியில் மிகக் கடுமையாக மோதிக் கொண்டன.

இப்போரில் பிரெஞ்சுப் படை முற்றிலுமாக அழிக்கப் பட்டது. எனினும், எதிரியின் குண்டு ஒன்றினால், மீர்உசைன்கான் படுகாயம் அடைந்தான். ஆதலின், அவன் வலிமை வாய்ந்த தனது கோட்டைக்குள் சென்று ஒளிந்து கொண்டான். ஆயினும், கோட்டை வீழ்ச்சியடையவில்லை.

### கோட்டை வீழ்ச்சி

எஞ்சியிருந்த வீரர்களை வைத்துக்கொண்டு கோட்டையைக் கைப்பற்ற இயலாது என்பதை உணர்ந்த தொத்தேய் புதிய படை அனுப்புமாறு செஞ்சிக்குத் தூது அனுப்பினான். 250 ஐரோப்பியர்களையும், 1000 சிப்பாய்களையும் பீரங்கிகளையும் கொண்ட மற்றொரு படை தொத்தேய்க்கு உதவியாக வந்தது.

இப்படை கோட்டையை அணுகிய போது முதற் போரில் விழுப்புண் பட்டிருந்த மீர்உசைன்கான் இறந்து போன செய்தி கிட்டியது. ஆதலின், பிரெஞ்சுக்காரர்கள் எளிதாக எலவானூர்க் கோட்டையைக் கைப்பற்றினர்[1].

இக்காலத்தில் இவ்வட்டாரம் முழுதும் முஸ்லிம்கள் நிறைந்திருப்பதற்குக் காரணம், மீர்உசைன்கான் இப் பகுதியில் கர்நாடக நவாப்பின் பிரதிநிதியாக இருந் தமையே ஆகும்.

---

1. J.H. Garstin's 'South Arcot District'; Page. 109.

## 1826—ஆம் ஆண்டில்

தென்னிந்தியாவில் நடைபெற்ற பல்வேறு அரசியல் மாற்றங்களுக்குப் பிறகு, ஆங்கிலேயரின் நண்பரான முகம்மது அலி, கர்நாடக நவாபாக ஏற்றுக்கொள்ளப் பட்டார். கி. பி. 1795-இல் முகம்மது அலி இறந்துவிடவே அவர் மகன் **உம்தத்-உல்-உமாரா** பட்டத்துக்கு வந்தார்

வெல்லெஸ்லி [கி. பி. 1798—1805] ஆங்கிலக் கம்பெனிக்கு ஆளுநராக வந்த போது, தனது துணைப் படைத் திட்டத்தின் மூலம், சென்னை இராசதானியை உரு வாக்கினார். கி. பி. 1801-ஆம் ஆண்டு சூலைத் திங்களில், எலவானாசூர் உள்ளிட்ட பகுதிகள் அனைத்தும், ஆங்கிலக் கம்பெனிக்கு வழங்கப்பட்டன.

ஆர்க்காட்டுப் பகுதிக்கு **காப்டன் கிரகாம்** என்னும் ஆங்கிலேயர் ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். அக் காலத்தில் பாலாற்றுக்கும் வெள்ளாற்றுக்கும் இடைப் பட்ட பகுதியை, நிர்வாகத்தின் பொருட்டு **இராவென்ஷா** என்னும் ஆங்கிலேயர், 21 கோட்டங்களாகப் பிரித்தார். அவற்றுள் எலவானாசூர்க் கோட்டமும் ஒன்று.

**புரூக்குன்லேஃப்** என்னும் ஆங்கிலேயர், ஆர்க்காட்டின் ஆட்சித் தலைவராக இருந்தபோது, கி. பி. 1826-27 ஆம் ஆண்டில் இக்கோட்டங்களைச் சட்ட பூர்வமாக நடைமுறைப் படுத்தினார்[1].

---

1. Madras District Gazetteers, South Arcot District. (1906), Pages. 201 & 212 [W. Francis]

## கொள்ளை நிகழ்ச்சி

கர்நாடக இராஜாக்கள் சரிதம் என்னும் பழைய நூல் ஒன்றில், கீழ்க்கண்ட பகுதி காணப்படுகிறது.[2]

"பாய்தல் ரெண்டாயிரம் குதிரை சேலத்து வழியாக வந்து உளுந்தூர் மங்கலம் பேட்டை கொள்ளையிட்டு யஉ பறங்கிப்பேட்டை போயி வளைத்துக்கொண்டு மோகர-மெயா முதல் வர்த்தகர் வீட்டில் தங்கப் பாளம் சன்னல் முதல் கொள்ளையிட்டார்கள்."

இக்கொள்ளை நிகழ்ச்சி ஐதர் அலி காலத்தில் நடை பெற்றதாக அறிகிறோம். சேலத்து வழியாக வந்த குதிரைப்படை உளுந்தூர்ப் பேட்டை, மங்கலம்பேட்டை, பரங்கிப்பேட்டை முதலான ஊர்களைக் கொள்ளையிட்ட தாகத் தெரிகிறது.

உளுந்தூர்ப் பேட்டைக்கு அண்மையில் உள்ள எலவானூர், அக்காலத்தில் பெருஞ் சிறப்புக்கு உரிய ஊராக இருந்தமையின், இதுவும் அக்கொள்ளைக்கு இலக் காகி இருத்தல் கூடும்.

இதுகாறும் கூறியவற்றால், எலவானூர் பல்வேறு கால கட்டங்களில் பெற்றிருந்த பெயர்களைக் கீழ்க்காணும் பட்டியலால் உணரலாம்.

---

2. Madras Government Oriental Series, Vol. 138, Page. 117

| அரசன் & ஆண்டு | ஊரின் பெயர் |
|---|---|
| இராசராசன் I [கி பி 985–1014]<br>இராசேந்திரன் I [கி.பி. 1012-1044] | இறையானரையூர் |
| இராசமகேந்திரன் [கி.பி. 1051-1063] | இறையானரையூர் சோழ கேரளச் சதுர்வேதிமங்கலம் |
| குலோத்துங்கன் I [கி.பி. 1070-1120] முதல்<br>இராசராசன் III [கி.பி. 1216-1256] முடிய | இறையானரையூர் சோழ கேரளச் சதுர்வேதிமங்கலம் சோழ கேரள நல்லூர் |
| கோப்பெருஞ்சிங்கன் [கி.பி. 1243-1279] | இறையானரையூர். சோழ கேரளச் சதுர்வேதி மங்கலம். |
| பாண்டியர் காலம் [கி.பி. 1261 முதல்] | இறையானரையூர். சோழ கேரளச் சதுர்வேதி மங்கலம். பிடாகை. |
| விசயநகர வேந்தர் காலம் [கி.பி. 1284-1495] | ,,<br>,, |
| ஆங்கிலேயர் காலம் [கி.பி. 18ஆம் நூற்றாண்டு முதல்] | கோட்டை |

# சுவைதரும் நிகழ்ச்சிகள்

## ஓடிய கரணத்தார்

முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில், **இளமை வேங்கடமான பண்டிதப்பிரியன்** என்பவனும், **இளமைக் கருமாணிக்கமான பட்டப்பிரியன்** என்பவனும் எலவானூரில் ஊர்க் கணக்கராகப் பணியாற்றினர். கி. பி. 1116ஆம் ஆண்டில் அவர்கள் வசூலித்த வரித்தொகையை ஊர்ச் சபையாரிடம் ஒப்படைக்காமல் ஊரைவிட்டு ஓடி விட்டனர்.

ஊர்ச்சபையார் அவர்களின் சொத்துகளை விற்று, அத் தொகைக்கு ஈடுகட்ட முற்பட்டனர்.

எலவானூருக்கு அண்மையில் **செம்பியன் மாதேவி** என்னும் பெயருடைய சிற்றூர் ஒன்று உள்ளது. அங்குள்ள ஏரி, அக்காலத்தில் **வானவன் மாதேவிப் பேரேரி** எனப் பெயர் பெற்று விளங்கியது. அவ்வேரிக்குக் கிழக்கே உள்ள முதற்கண்ணாறு என்னும் இடத்தில், இரண்டு தடி காலே அரைமா அளவுள்ள நஞ்சை நிலமும், அங்கிருந்த கிணறும் மேற்கூறிய கணக்கர் இருவர்க்கும் உரிய சொந்த உடைமைகளாகும்.

அந்நஞ்சை நிலம் **வீதி விடங்கன்** என்னும் கோலால் 20 குழி பரப்புடையது. ஊர் நத்தத்தில் கணக்கக்காணி

என்னும் இடத்தில் இவர்களுக்கு வீட்டு மனைகளும் இருந்தன.

ஊர்ச் சபையினர் கி. பி. 1118ஆம் ஆண்டில் இந்நிலம், கிணறு, வீட்டுமனை ஆகிய அனைத்தையும் பதின்மூன்றே நாலுமா முக்காணிக் காசுக்கும், மூன்று கழஞ்சு பொன்னுக்கும் விற்றுவிட்டனர். **தொண்டைமான்** என்னும் அறவோன் இவற்றை விலைக்கு வாங்கி, எலவானாசூர்ச் சிவன் கோயிலுக்குத் தானமாக வழங்கினான்.

ஊர்க் கரணத்தாரின் இவ்விழி செயலையும், ஊர்ச்சபையாரின் செயலையும் விளக்கும் கல்வெட்டு, சிவன் கோயில் கோபுரத்தில் வரையப்பட்டுள்ளது. [எண். 16] சோழர் காலத்து நிருவாக அமைப்பிலும், ஆங்காங்கே இத்தகைய குறைகள் காணப்படுகின்றன. [கல்வெட்டு எண். 16]

## சிறையிட்ட செய்தி

எலவானாசூருக்குத் தென் கிழக்கே **மலையனூர்** என்னும் சிற்றூர் உள்ளது. கல்வெட்டில் அவ்வூர், "குடி நீங்கா தேவதானம்" என்று குறிக்கப்படுகிறது.

குடி நீங்கா தேவதான ஊர்களிலிருந்து அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரித்தொகை அனைத்தும் கோயிற் காரியங்களுக்குச் செலவிடப்படுவது அக்கால வழக்கம். அங்குள்ள பொது மக்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரித் தொகைகளை, தமக்குள்ள பங்கு வீதப்படி கோயிலுக்குச் செலுத்துவர். அதுபோலவே, மலையனூர் மக்கள் தங்களது வரிகளை எலவானாசூர்ச் சிவன் கோயிலுக்குச் செலுத்தினர்.

வீரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் மலையனூர் மக்கள் கோயிலுக்குச் செலுத்தி வந்த வரிகளைச் சில ஆண்டுகளாக

நிறுத்திவிட்டனர். அவ்வாறு அவர்கள் செலுத்தத் தவறிய தொகை 3100 பணம் என்று கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

இத்தொகையை உரிய காலத்தில் வசூலிக்காத காரணத்தால், கோயில் தானத்தார்கள் கைது செய்யப்பட்டு, எலவானூசூர்ச் சிவன் கோயிலில் சிறையிடப்பட்டனர்.

மலையனூரில் உள்ள விளை நிலங்களை அனுபவித்து வந்தவர்கள் பட்டர்கள். எனவே, வரித் தொகைகளைச் செலுத்தி தானத்தார்களை மீட்க வேண்டியவர்களும் அவர்களே.

ஆயினும், செலுத்தத் தவறிய பெருந் தொகையை இவர்களால் ஒட்டு மொத்தமாகச் செலுத்த இயலவில்லை. அதனால், தாங்கள் அனுபவித்து வந்த மலையனூர் நிலங்களை எலவானூசூர்ச் சிவன் கோயிலுக்கு விற்று, அத்தொகையைச் செலுத்தித் தானத்தார்களைச் சிறை மீட்டனர்.

[கல்வெட்டு எண் 60]

### அரசியல் ஒப்பந்தம்

மூன்றும் குலோத்துங்க சோழனின் ஆட்சிக்காலத்தில், அவனுக்கு அடங்கி ஒழுகிய குறுநில மன்னர்கள் பலராவர். அவர்களில் சிலர், தங்களுக்குள் அரசியல் ஒப்பந்தங்களும் செய்து கொண்டனர்.[1]

அக்காலத்தில் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு, மலையமான் நாட்டை ஆண்டு வந்தவன் சூரிய

1. I. South Indian Inscriptions, Vol. VIII, No. 1062 Vol. VII, Nos. 119 & 127.

   II. Annual Reports on South Indian Epigraphy for the year 1902, No. 516 & 1900, Nos. 115 & 117.

**தேவன் நிரேற்றன்** என்னும் குறுநில மன்னன். அதே காலத்தில் சேலம் மாவட்டத்து ஆறகளூரைத் தலைநகராகக் கொண்டு, வாணகப்பாடி நாட்டை ஆண்டு வந்தவன் **குலோத்துங்க சோழ வாணகோவரையன்** என்னும் குறுநில மன்னன்.

இவ்விருவரும் தங்களுக்குள் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டதை இங்குள்ள கல்வெட்டு (எண் : 46) ஒன்றால் அறிகிறோம்.

போதிய அளவு பாதுகாப்பும் கவனிப்பும் இல்லாமையால், அக்கல்வெட்டின் பெரும்பகுதி சிதைந்துவிட்டது. ஆதலின், பெருமதிப்புடைய சாசனம் ஒன்றை நாம் இழந்து விட்டோம்.

**வேளக்காரப் படை**

அக்காலத்தில் முடியுடைய வேந்தர்களும்.குறுநில மன்னர்களும் தமக்கென்று வேளக்காரப்படையொன்றை வைத்திருந்தனர். இப்படையினர் அரசனின் நம்பிக்கைக்கு உரியவர்கள். அவன்பால் அன்பு கொண்டவர்கள். அரசனைத் தமது உயிராகக் கருதுபவர்கள். அவனுக்கு மெய்க்காப்பாளராக விளங்குபவர்கள். இப்படையில் ஆண் பெண் ஆகிய இருதிறத்தாரும் இருந்தனர்.

மலையமான் நாட்டுக்கு மன்னனாக விளங்கிய **எதிரிகள் நாயனுக்கும்** வேளக்காரப்படையினர் இருந்தனர். அவர்களுள் **திரிகை உடையான், தேவப்பிள்ளை, ஆளுடையான் சூரியன்** முதலானோர், "தமது அரசனுக்குப் பின்பு தாம் உயிர் வாழ்வதில்லை" என்று கூறிய உறுதி மொழிகள் எலவானாசூர்ச் சிவாலயத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

(எண்கள் : 50 to 53)

அக்காலத்து மொழி நடையையும், மக்களின் பேச்சு வழக்கையும் இச் சாசனங்கள் நமக்குத் தெளிவுபடுத்து கின்றன. வேளக்காரப் படையினரின் இத்தகைய உறுதி மொழிகள் பல, திருக்கோவலூருக்கு அண்மையில் உள்ள அறையணி நல்லூரிலும் உள்ளன[1].

## திருமதி தேவப் பெருமாள்

எதிரிகள் நாயனின் வேளக்காரப் படையில், தேவப் பெருமாள் என்னும் பெயருடைய பெண் ஒருத்தியும் இருந் தனள். அவள் தன் கணவன் இறந்த பின்னும், தன் அரசன் இறந்த பின்னும் தான் உயிர் வாழ்வதில்லை என்று உறுதி கொண்டிருந்தாள்.

> "எதிரிகள் நாயனின் வேளக்காரியான நான் அவ்வரசனுக்குப் பிறகும் உயிர் வாழ்வேனாயின், என் மாடுகளை மேய்ப்பார்க்குச் சோறிட்டு, நீர் கொடுத்து, அவர்கள் வைக்கும் மீதமுள்ள சோற்றையும் நீரையும் உண்கின்றவள் ஆவேன். என் மணாளன் இறக்கும்போது, அவனோடு நானும் இறந்து போவேன்! அவ்வாறு இறவாது உயிரோடு இருப்பேனாயின், என்னைக் காண்பவர்கள் நெருப்பில் இட்டுக் கொல்வார்களாக! அவ்வாறு என்னைக் கண்டும் கொல்லாதவன், என் கணவன் ஏறுகிற குதிரைக்குப் புல்கொண்டு வந்து தருகின்ற காமிசன் என்பவனுக்குத் தன் மனைவியைக் கொடுத்தவன் ஆவான்"

---

1. Annual Report on South Indian Epigraphy for the year 1934-35, Nos. 124 to 126, 136 to 150, 154 to 160 & 162.

வீரமகள் தேவப்பெருமாள் கூறிய மேற்கண்ட உறுதி மொழியைக் (எண்: 64) கல்வெட்டில் காண்கிறோம். இத்தகைய சாசனங்கள அக்கால சமுதாய அமைப்பை நாம் அறிந்து கொள்ளத் துணை நிற்பனவாகும்.

**பன்றி வேட்டை**

எலவானூருக்குக் கிழக்கே 4 கி.மீ. தொலைவில், **வண்ணகப்பாடி** என்றொரு சிற்றூர் உள்ளது. முற்காலத்தில் அதற்கு **வாண பிராட்டி** என்பது பெயர்.

அவ்வூரில் **வீரபாலன்** என்றொருவன் இருந்தான். அவனை 'ஆறிக்குளத்தூருடையான் முடிகொண்டான் காரி' என்றும் அழைப்பார்கள். ஒருநாள் இரவு வேளையில் அவன் பன்றி வேட்டைக்குச் சென்றான். காட்டுப் பன்றியை நோக்கி அவன் விடுத்த அம்பு, குறி தவறி **தில்லை ஆருயிரப் போயன்** என்பவன் மீது பாய்ந்தது. இதன் விளைவால் போயன் இறந்து போனான்.

எனவே, வீரபாலன் அவன் இறந்தமைக்குக் கழுவாயாக, எலவானூர்ச் சிவபெருமானுக்கு நந்தா விளக்கு ஒன்று அமைத்து, அதற்கு முதற்பொருளாக 32 பசுக்களைத் தானமாக வழங்கினான்.[1] (கல்வெட்டு எண்: 56)

இந்நிகழ்ச்சி மூன்றும் இராசராச சோழன் காலத்தில் நிகழ்ந்ததாகச் சாசனம் குறிப்பிடுகிறது. (எண் : 56) அக்காலத்தில் வேட்டையாடுங்கால், இத்தகைய எதிர்பாராத விபத்துகள் பரவலாக நிகழ்ந்துள்ளன. அக்குற்றத்தினின்றும் நீங்குதற்குக் கோயில்களில் நந்தா விளக்கு

1. இவ்வேட்டை நிகழ்ச்சி பற்றிய எனது உரை புதுவை வானொலி நிலையத்திலிருந்து, 9-7-'74 அன்று இரவு 8 மணிக்கு ஒலி பரப்பப்பட்டது.

அமைக்கின்ற வழக்கம் உண்டு என்பதற்குப் பல கல்வெட்டுகள் சான்றாக உள்ளன[1].

## மாடூர் விபத்து

எலவானாசூருக்கு மேற்கே 18 கி.மீ. தொலைவில் மாடூர் என்னும் சிற்றூர் ஒன்று உள்ளது. இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் (கி.பி. 1173) அங்கு நிகழ்ந்த விபத்து ஒன்று பற்றிய செய்தியைக் கல்வெட்டு உணர்த்துகிறது.

(எண் : 38)

மாடூரிலிருந்து **கோச்சாத்தன் காமன்** என்பவனின் மனைவி, ஏதோ ஒரு காரணம் பற்றித் தன் மகனைக் கோவிலால் அடித்தாள். அந்த அடி, அருகில் நின்று கொண்டிருந்த **மிண்டன் காமன்** என்பவனின் மகள் மீது விழுந்தது. இதன் விளைவாக அப்பெண் உடல் நலம் குன்றி, அடிபட்ட இருபதாவது நாளில் இறந்து போனாள்.

இதற்குக் கழுவாயாக எலவானாசூர்ச் சிவபெருமானுக்கு நந்தா விளக்கு ஒன்று வைத்தல் வேண்டுமென்று ஊர்ச் சபையினர் பணித்தனர். எனவே, கோச்சாத்தன் காமன், தன் மனைவியின் பொருட்டு, விளக்குத் தானமாக 32 பசுக்களைக் கோவிலுக்கு வழங்கினான்.

1. South Indian Inscriptions, Vol. VII, No. 165 (95 A of 1900).

# சிவன் கோயில்

எலவானாசூரின் நடுவிடத்தே மேற்கு நோக்கியவாறு சிவன் கோயில் அமைந்துள்ளது. அக்கோயிலின் இரண்டாம் பிரகாரத்தில் கிழக்கு நோக்கிவாறு அம்மன் கோயில் அமைந்துள்ளது.

மூலவரை நோக்கியவாறு அமைக்கப்பட வேண்டிய நந்தி, அதற்கு மாறாக, மூலவரைப் போலவே மேற்கு நோக்கி அமைந்துள்ளது. மூலவராக விளங்கும் இலிங்கம், குன்றின் மீது நிறுவப்பட்டுள்ளது. குன்றின் மீதுள்ள கோயில், பல கட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தல விருட்சம் பலா மரம்.

### அமரபுயங்கரர்

முதலாம் இராசராச சோழனின் சாசனம் ஒன்றில், இறைவனின் பெயர் 'அமரபுயங்கர தேவர்' என்று குறிக்கப் பட்டுள்ளது.

இதுவே இவ்விறைவனின் மிகப் பழமையான பெயராகும்.

### ஊர்பாகங்கொண்டார்

முதலாம் இராசராசனுக்குப் பிறகு வரையப்பட்ட சோழர் தம் சாசனங்களில், இறைவனின் பெயர் ஊர்பாகங்

கொண்டருளிய மகாதேவர்' என்றும், ஊர்பாகங்கொண் டருளிய நாயனார்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

பாண்டிய விசயநகர வேந்தர்தம் கல்வெட்டுகளில்; 'ஊர்பாகங்கொண்டருளிய நாயனார்' என்றும், 'ஊர்பாகங் கொண்டருளிய தம்பிரானார்' என்றும் காணப்படுகிறது. இறைவனுக்கு உரித்தான இத்தமிழ்ப்பெயர்கள், பிற்காலத் தில் கிராம அர்த்தநாரீஸ்வரர்' என்று வடமொழி யாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வட்டாரத்தில் உள்ள ஊர்களின் வருவாயில் சரி பாதி, இவ்விறைவனுக்கு மானியமாக விளங்கிய காரணத் தால் இவர் ஊர்பாகங்கொண்டார் என்று அழைக்கப் பட்டார்.

## வழிபாடுகள்

அக்காலத்தில் ஊர்பாகங்கொண்டாருக்கு முக்காலப் பூசைகள் நிகழ்ந்தன. காலைப் போதில் திருப்பள்ளி எழுச்சி பாடப்பட்டது. திருமஞ்சன நீராட்டு நடந்தது. நாள்தோறும்

சிறு காலைச் சந்தி
உச்சியம் போகை
இரவு சந்தி

ஆகிய மூன்று வேளைகளிலும் திருவமுது படைக்கப் பட்டது. முரசு முதலான பன்னியங்கள் இசைக்கப்பட்டன. நந்தா விளக்குகளும், நிலைவிளக்குகளும் எந்நேரமும் ஒளி தந்து பொலிவூட்டின. அவ்வப்போது சந்தி விளக்குகளும் எரிந்தன.

அன்றலர்ந்த மலர் மாலைகளாலும், பனிநீர் விரவிய சந்தனக் கலவையாலும், அழகிய புத்தாடைகளாலும் இறைவர் அலங்கரிக்கப்பட்டார். செங்கழுநீர் மலர் மாலைகள் நாள்தோறும் சூட்டப்பட்டன. சந்தனக் கட்டைகள், சீதாரி முதலானவற்றிலிருந்து வெளிவந்த புகை கோயிலெங்கும் நறுமணம் பரப்பியது.

பட்டர்கள் மகேசுவரர்கள் கோயில் பணியாளர்கள், நிருவாகத்தினர், அறவோர், அரசியல் தலைவர்கள், உயர் அதிகாரிகள், அன்பர்கள் ஆகியோர் இக்கோயிலெங்கும் நிறைந்திருந்தனர். சுருங்கச் சொன்னால் இக்கோயில் நாள் தோறும் விழாக்கோலம் பூண்டிருந்தது.

**திருவாசகத் திருப்பதிகம்**

விக்கிரம சோழன் காலம் முதல் இக்கோயிலில் ஞாயிற்றுக்கிழமை தோறும், மாணிக்கவாசகர் அருளிய **திருச்சாழல்** என்னும் திருப்பதிகம் பாடப்பட்டது.

**இராசாக்கள் நாயன் சந்தி**

விக்கிரம பாண்டியன் காலத்தில், அம்மன்னன் பிறந்த நாளான அத்த (அஸ்த நட்சத்திர) நாளில் இராசாக்கள் நாயன் சந்தி என்னும் பெயரில் சிறப்பு வழிபாடு ஒன்று நிகழ்த்தப்பட்டது.

திங்கள் தோறும் அமாவாசை நாளில் **உத்தமாக்கிரம்** எனப்படும் சிறப்பமுது படைக்கப்பட்டது.

விக்கிரம பாண்டியன் காலத்திலும் வீரபாண்டியன் காலத்திலும் **வீதிவிடங்கப் பெருமான்** திருஉலாப் புறப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

**விழாக்கள்**

ஆண்டுதோறும் இக்கோயிலில் பல்வேறு விழாக்கள் நிகழ்த்தப்பட்டன.

இரண்டாம் இராசராச சோழன் காலத்தில் ஒவ்வொரு புரட்டாசி, மார்கழி மாதங்களில், **திருவோண** நாளில் திருநாள் நடைபெற்றது.

பங்குனித் திருநாளன்று கோயிலில் உள்ள **முடிகொண்டசோழன் திருமண்டபத்தில்** இறைவனுக்குப் பல்வேறு சாத்துப்படிகள் நிகழ்த்தப்பட்டன.

இறைவன் உலாப் போங்காலத்து வழியில் இடையூறாக இருந்த குன்று ஒன்றினை நீக்கி வழியைச் செப்பம் செய்தவன் **மீனன்** என்று கல்வெட்டுக் கூறுகிறது.[1] அவன் **திருமாலிருஞ்சோலை நின்ருனை மாலவராயன்** என்பவனின் மகன். பாண்டி நாட்டு **நாளக்குரிச்சி** என்னும் ஊரினன்.

ஆண்டுதோறும் நடைபெற்று வந்த தேர்த் திருவிழாவிற்காக, விசயநகர வேந்தரின் பிரதிநிதியான **ஆனந்த** தாண்டவ தொண்டைமாஞர் என்பவரால் கி.பி 1539 ஆம் ஆண்டில் **வீரமங்கலம்** என்னும் சிற்றூர் தேவதானமாக வழங்கப்பட்டது.[2]

6ஆம் நாள் விழாவுக்கென்று வேலூர் பொம்முநாயக்கர் என்பவரால்,

**பிச்சாண்டன் குறிச்சித்தாங்கல்**
**செட்டி யெந்தல் தாங்கல்**

1. A.R.E. 1937—38, No, 505
2, A.R.E, 1937—38, No. 483,

என்னும் இரண்டு சிற்றூர்கள் தானமாக வழங்கப் பட்டன.[1]

கோபுரங்களின் திருப்பணிக்கும், மகரபூசை நிகழ்த்து தற்கும் கிருஷ்ணதேவர் ஆட்சிக் காலத்தில் (கி. பி. 1527), **குற்றியன் குறிச்சி** என்னும் ஊரும், **செம்பியன் மாதேவி** என்னும் ஊரும் மானியமாக வழங்கப்பட்டன.[2]

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் முத்துராய ஈசுவரப்ப ஐயன் என்பவரால் இவ்வூர்த் தறிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த வரிகள் அனைத்தும், கொண்டம நாயக்கர், கிருஷ்ணம நாயக்கர் ஆகியோர் பெயரால் இறைவனுக்குத் தானமாக வழங்கப்பட்டன.

இச்செய்தி எலவானூர்ப் புஞ்சை வெளிப் பாறையில் காணப்படும் கல்வெட்டில் உள்ளது.[3]

## இறைசைப் புராணம்

அக்காலத்தில் எலவானூர்ச் சிவத்தலத்தின் பெருமையை விளக்கவல்ல தலபுராணம் ஒன்றும் வழக்கத்தில் இருந்துள்ளது. **'இறைசைப் புராணம்'** என்பது அதன் பெயர். அதனை இயற்றியவர் திருமலைநயினார் சந்திர சேகரர். அவர் மெய்கண்டார் சந்தானத்துத் திருவண்ணாமலை சத்தியஞான தெரிசினிகளின் மாணாக்கர்.

இறைசைப் புராணம் இயற்றிய இவ்வடியாருக்கு, எலவானூர் ஆனந்ததாண்டவன் வீதி தென்கிழக்கில் வீட்டுமனை ஒன்றும், நல்லரைசூரில் நன்செய் நிலமும், கிணறும் மானியமாக வழங்கப்பட்டன. சகம் 1432ஆம் ஆண்டு

1. A.R.E. 1937-38, No. 487 & 488.
2. A.R.E. 1937-38, No. 494 (காண்க எண் : 72)
3. A.R.E. 1937-38, No. 507.

பிரமோதூத வருடம் புரட்டாசி மாதம் 25 ஆம் தேதி (கி. பி. 1510) மேற்கூறிய மானியங்கள் வழங்கப்பட்டதாகச் சாசனம் (எண் : 70) குறிப்பிடுகிறது. சக ஆண்டினை நோக்க இப்புராணம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் இயற்றப்பட்டதாக அறிகிறோம்.

## அம்மன் கோயில்

எலவானாசூரிலுள்ள சோழ மன்னர் மூவரின் கல்வெட்டு களில், அம்மனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள்ளும் பழமையான கல்வெட்டு, முதலாம் குலோத் துங்க சோழனின் 48ஆவது ஆண்டில் (கி. பி. 1118) வரை யப்பட்டதாகும். அதில் அம்மையின் பெயர் **திருப்பள்ளி யறை 'நம்பிராட்டியார்'** என்று குறிக்கப்படுகிறது. (எண் : 16).

> "செயங்கொண்ட சோழ மண்டலத்து மணை யிற்கோட்டத்து மணவில் அரும்பக்கிழான் அரை யன் பொன்னம்பலக்கூத்தனை தொண்டைமானை் எழுந்தருளுவித்த **திருப்பள்ளி அறை நம்பிராட்டி யார்க்கு** நாங்கள் விற்றுக் குடுத்த நிலமாவது"

என்னும் கல்வெட்டுப் பகுதியால், பிராட்டியாரை எழுந்தருளிவித்தவன் தொண்டைமான் என்று அறிகிறோம். அவன் அரும்பக்கிழான் அரையன் பொன்னம்பலக் கூத்தன் என்றும் அழைக்கப்பட்டான். இவன் முதற்குலோத்துங் கன் காலத்திலும், அவன் மகன் விக்கிரமன் காலத்திலும் சிறந்த படைத் தலைவனாக விளங்கியவன்.

விக்கிரம சோழன் கல்வெட்டு ஒன்றில், பிராட்டியார், **'திருப்பள்ளியறை ஆளுடையார்'** என்று குறிக்கப்படு

கிறுர். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் பிராட்டியாரை நன்கு அலங்கரித்து உலாவாக எழுந்தருளச் செய்தனர். (எண் . 21)

**கிளியூர் மலையமான் பெரிய உடையான் சூரிய தேவன்** என்னும் குறுநில மன்னன், பங்குனி மாதத் திருநாளில், ஆளுடைய நாச்சியார் உலாவாக எழுந்தருளும் போது, திருக்காப்பு நாண் சாத்தியருள அரைக்கால் பொன் தானமாக வழங்கினான். இச்செய்தி இங்குள்ள கல்வெட்டு (எண் : 32), ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளது.

முதலாம் குலோத்துங்க சோழனுக்கு முற்பட்ட சோழ மன்னர்களின் கல்வெட்டுகளில், பிராட்டியாரைப் பற்றிய குறிப்பேதும் காணப்படவில்லை. பிராட்டியார் கோயிலில் மூன்றும் குலோத்துங்க சோழன் காலத்திய (கி.பி. 1208) கல்வெட்டு ஒன்றும் அவனுக்குப் பிற்பட்ட தேவராய மகாராயர் (கி.பி. 1427) பொக்கன உடையார் (கி.பி. 1404) ஆகியோர் காலத்திய கல்வெட்டுகளும் உள்ளன. இவற்றுள் மூன்றும் குலோத்துங்கன் கல்வெட்டே பழமையானதாய் இருத்தலின் அம்மன்கோயில் அம்மன்னனின் காலத்தில் கட்டப்பட்டதாக முடிவு செய்யலாம். அக்கோயிலின் வெளி மண்டபத்தை விசயநகரர் காலத்துத் (கி.பி. 16ஆம் நூற்றுண்டு) தூண்கள் தாங்கி நிற்கின்றன.

**கூத்தாடு தேவர்**

கூத்தாடு தேவரான நடராசப் பெருமான், சிறுகாலைச் சந்தியில் திருவமுது செய்தருள, நாள்தோறும் நாநாழி அரிசி செலவிடப்பட்டது. விக்கிரம சோழன் கல்வெட்டு (எண் : 20) ஒன்றில் இச்செய்தி காணக்கிடக்கிறது.

கூத்தாடுதேவர் சிற்பமா அன்றி உலோகத் திரு மேனியா என்பதைக் கல்வெட்டு விளக்கவில்லை. கூத்தாடு தேவரின் சிற்பமெதுவும் இக்கோயிலில் இப்போது காணப் படவில்லை.

**வீதிவிடங்கப் பெருமான்**

விழாக் காலங்களில் எழுந்தருளச் செய்ய இக்கோயி லில் **வீதிவிடங்கப் பெருமான்** என்ற பெயரில் உலோகத் திருமேனி ஒன்று இருந்துள்ளது. முதற் குலோத்துங்கன் காலத்தில், நிலம் முதலானவற்றை அளக்கப்பயன்படுத்திய **கோல் வீதிவிடங்கன் கோல்** என்று இப்பெருமானின் பெயரால் கூறிக்கப்பட்டது. (எண்: 16)

**பிடாரியார்**

விக்கிரம சோழன் கல்வெட்டு ஒன்றில், **இராசேந்திர சோழ மலையகுலராயன்** என்னும் குறுநில மன்னன், குடி மக்கள் தனக்குச் செலுத்த வேண்டிய வரித் தொகையில் ஒரு பகுதியைப் பிடாரியாருக்குத் தானமாக வழங்கிய செய்தி காணப்படுகிறது. (எண் : 18)

எலவானசூரின் பழமையான அமைப்புடைய இரண்டு துர்க்கையாரின் சிற்பங்கள் இப்போது உள்ளன. அவற்றுள் ஒன்று கடை வீதியிலும், மற்றொன்று மருத்துவமனைக்கு மேற்குத் திசையில் உள்ள புஞ்சை நிலத்திலும் காணப்படு கின்றது. சிவன் கோயிலிலும் ஒரு சிற்பம் உள்ளது. இவை அனைத்தும் புடைப்புச் சிற்பங்களாகும். எல்லாச் சிற்பங் களும் இடம்பெயர்ந்துள்ளன. இவற்றுள் கல்வெட்டுக் குறிப்பிடும் சிற்பம் எது என்று அறிந்து கொள்ள இயல வில்லை.

எலவானாசூரிலிருந்து வடக்கே 4 கி.மீ. தொலைவில் உள்ள **புகைப்பட்டி** என்னும் சிற்றூரிலும், இத்தகைய பழமை வாய்ந்த பிடாரியாரின் சிற்பம் ஒன்று உள்ளது. அண்ணாமலை நாயகர் ஐயனுக்கு நன்மை உண்டாகுமாறு, செப்பிலி எல்லப்ப நாயக்கர் குமாரர் இராம நாயக்கர், இப்பிடாரியாருக்குத் திருநாள், சந்தி நிவேதனங்கள் ஆகியவற்றுக்கு நிலக்கொடை வழங்கியுள்ளார். (எண் :80)

## போகீசுரமுடையார்

சிவன் கோயிலின் முதற் பிரகாரத்தில் உள்ள திருச்சுற்று மாளிகையில், கிழக்கு நோக்கியவாறு **'போகீசுர முடைய தம்பிரானார்'** என்னும் பெயரில் இலிங்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

எலவானாசூருக்குத் தென்மேற்கே 8 கி. மீ. தொலைவில் உள்ள **சீயமங்கலம்** என்னும் சிற்றூர், இப் போகீசுர முடையாருக்குத் தேவதானமாக வழங்கப்பட்டுள்ளது.

அச்சுத தேவராயருக்கு நன்மை உண்டாகுமாறு சலக்கைய தேவ மகாராயர் மகன் திருமலை தேவ மகாராயர் இவ்வாறு தானம் செய்ததாகக் கல்வெட்டுக் (எண்:74) கூறுகிறது.

# வைணவத் தளிகள்

எலவானூரில் சிவன் கோயிலை ஒத்த பழமையும் பெருமையும் சிறப்பும் உடைய வைணவக் கோயில்கள் பல இருந்தன. அவற்றுள் வானவன் மாதேவி விண்ணகர், இராசநாராயண விண்ணகர் ஆகிய இரண்டு திருமாற் கோயில்கள் சிறப்புக்குரியனவாகத் திகழ்ந்தன.

## வானவன் மாதேவி விண்ணகர்

இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழனின் பட்டத்தரசியும், மலையமன் நாட்டுக் குறுநில மன்னனின் மகளுமாகிய வானவன் மாதேவியின் பெயரால் இவ்விண்ணகர் நிறுவப்பட்டுள்ளது. எனவே, இக்கற்றளி கி. பி. 957 முதல் 970 முடிய உள்ள காலகட்டத்தில் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## இராசநாராயண விண்ணகர்

முதலாம் குலோத்துங்க சோழனுக்கு எண்ணற்ற சிறப்புப் பெயர்கள் உள்ளன. அப்பெயர்களுள் இராசநாராயணன் என்பதும் ஒன்று[1]. எலவானூரில் இருந்த நாராயண விண்ணகர் எனப்படும் திருமாற் கோயில், இம்

1. South Indian Inscriptions, Vol. I, page 59.

மன்னன் காலத்தில் அவன் பெயரால் நிறுவப்பட்டிருத்தல் வேண்டும்.

**சூரியன் இராமன்** என்னும் மலையமான் நாட்டுக் குறுநில மன்னன், குடிமக்கள் தனக்குச் செலுத்த வேண்டிய வரித் தொகைகளில் ஒரு பகுதியை, மேற்கூறிய இரண்டு திருமாற் கோயில்களுக்குத் தானமாக வழங்கியுள்ளான். விக்கிரம சோழன் காலத்துக் கல்வெட்டால் (எண் : 10) இச்செய்தியை அறிகிறோம்.

இராச நாராயண விண்ணகராழ்வார்க்குப் பிற்காலத்தில் வேங்கடபதி ராயரால் நிலக் கொடையும் வழங்கப்பட்டுள்ளது.[1] ஆதலின், வேங்கடபதியார் காலமான கி. பி. 16ஆம் நூற்றாண்டு வரையில் இக்கோயில் வழிபாட்டுக்குரியதாக விளங்கியது.

## முற்றமும் மேற்கோயிலும்

வீரராசேந்திர சோழனின் (மூன்றாம் குலோத்துங்கன்) கல்வெட்டு ஒன்றில், திருமுற்றத்தாழ்வார், திருமேற்கோயிலாழ்வார் என்னும் வேறு இரண்டு வைணவக் கடவுளரின் பெயர்கள் காணப்படுகின்றன. (எண். 42)

இவற்றுள் திருமுற்றத்தாழ்வார்க் கோயில் எங்கிருந்ததென்று விளங்கவில்லை. திருமேற்கோயிலாழ்வாரின் ஆலயம், ஊரின் மேற்குத் திசையில் அமைந்திருந்தது. இக்கோயில்களில் நாள்தோறும் நடைபெறும் நிவேதனங்களுக்கும் திருப்பணிகளுக்கும் இக்கோயில் நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

முற்காலத்தில் சிறப்புடன் விளங்கிய மேற்கூறிய வைணவக் கோயில்கள் அனைத்தும் இக்காலத்தில் அழிந்து

---

1. A.R.E, 1937-38, No. 506.

விட்டன. எனினும், அவற்றின் சுவடுகளை இன்றும் காண லாம். இக்கோயில்களில் இருந்த விஷ்ணுவின் சிற்பங் களும், நாச்சியாரின் சிற்பங்களும் சிதைந்த நிலையில் ஆங் காங்கே கிடக்கின்றன.

**நரசிங்கமுடையார்**

திருக்கோவலூரிலிருக்கும் நரசிங்கமுடையாரை ஆண்டு தோறும் எலவானசூருக்கு எழுந்தருளச் செய்து, பூசை திருப்பணி முதலானவை நிகழ்த்தினர். பழங்கூர்ப்பற்றைச் சேர்ந்த சேர சோழ பாண்டிய புரத்தில் உள்ள நிலங்கள் மீது விதிக்கப்பட்ட வரிகளில் சில இதற்காகச் செலவிடப் பட்டது.

திம்மையராசாவின் மகன் போகையதேவர் முன்பாகப் பன்னிரண்டு பற்று நாட்டவரும், இதற்காக வரியின் ஒரு பகுதியை வழங்குவதாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

(எண்: 73)

# கோயிற் பணியாளர்

எலவானாசூர்ச் சிவன் கோயிலிலும், மற்றைய வைணவக் கோயில்களிலும் எண்ணற்ற பணியாளர்கள் இருந்தனர். அவர்களுள் சிலரைப் பற்றிய செய்திகள் அங்குள்ள கல் வெட்டுகளில் காணப்படுகின்றன.

## தேவகன்மிகள்

கோயில்களில் உள்ள திருமேனிகளுக்குத் திருமஞ்சன நீராட்டு நிகழ்த்தல், திருப்பரிச்சட்டம் அணிவித்தல், மலர் மாலை சூட்டல், திருவமுது படைத்தல் உள்ளிட்ட காரியங் களைச் செய்பவர்கள் அக்காலத்தில் தேவகன்மிகள் என்று பெயர் பெற்றிருந்தனர்.

சிவன் கோயிலில் இத்தகைய பணிகளுக்குப் பட்டர் கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் **அறுபது வட்டத்துச் சிவப்பிராமணர்கள்** என்று சாசனங்களில் குறிக்கப்படு கின்றனர்.

## ஸ்ரீகாரியம் ஆராய்வார்

கோயிற் காரியங்களை மேற்பார்வை செய்யும் அறங்கா வலர்கள், அக்காலத்தில் ஸ்ரீகாரியப் பெருமக்கள் அல்லது ஸ்ரீகாரியம் ஆராய்வார் என்று அழைக்கப்பட்டனர். கோயி லுக்கு ஆண்டுதோறும் வரவேண்டிய பல்வேறு வருவாய் களை வசூலிப்பது இவர்கள் கடமையாகும்.

விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆகியோர் காலத்திய இரண்டு கல்வெட்டுகள் இக்கோயி

வில் பணியாற்றிய ஸ்ரீகாரியப் பெருமக்களைப் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன. விசயநகர வேந்தர் காலத்தில் வாழ்ந்த அறங்காவலர் ஒருவரின் பெயர் கூத்தனூர் அப்பன் பொற் கோயில் நம்பி என்று ஒரு சாசனம் கூறுகிறது.

## வெட்டிமுட்டையாள்

ஊர்ப் பொது நலத்தைக் கருத்தில் கொண்டு, கூலியின்றிச் செய்யப்படும் வேலைக்கு வெட்டி (வெட்டி வேலை) என்றுபெயர். இதனைச் செய்தோர் பிற்காலத்தில் **வெட்டியான்** என்று அழைக்கப்பட்டனர்.

ஊதியம் இன்றி உழைக்கும் பொருட்டு அறவோர்களாலும், அதிகாரிகளாலும், அரசர்களாலும் கோயில்களுக்கு வழங்கப்படும் பணியாளர்கள் 'வெட்டி முட்டையாள்' என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுவது வழக்கம்.

எலவானாசூர்ச் சிவன் கோயிலிலும் இத்தகைய வெட்டி முட்டையாட்கள் இருந்துள்ளனர். இராசராச மலையகுல ராயன் என்னும் சிற்றரசன் இக்கோயிலுக்கு வெட்டிமுட்டையாட்களை வழங்கிய செய்தி இங்குள்ள கல்வெட்டில் வரையப்பட்டுள்ளது. (எண் : 43)

கூடலூர் முனையதரையன் அசலகுலோத்துங்கனை **இராசராசக் காடவராயன்** என்னும் சிற்றரசன் ஒருவனும் இவ்வாறு வெட்டி முட்டையாட்களை வழங்கிய செய்தி கல்வெட்டில் (எண் : 55) காணப்படுகிறது. இங்குள்ள சுந்தரபாண்டியன், விக்கிரம பாண்டியன் ஆகியோரின் கல்வெட்டுகளிலும் (எண் : 61&62) இப்பணியாளர்கள் குறிக்கப்படுகின்றனர்.

## தேவரடியார்

முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் திருவரங்கன் என்பான், சிவன் கோயிலுக்குத் தேவரடியாள் ஒருத்தியை வழங்கியுள்ளான். (எண் : 4)

இக்கோயிலில் பணியாற்றிய **துர்க்கை நிரேற்றுளான விக்கிரம சோழ மாணிக்கம்** என்னும் தேவரடியாள்,விளக்குத் தானமாக 15 பொற்காசுகளை மூலதனமாக வழங்கியுள்ளாள். இது குலோத்துங்கன் கல்வெட்டு(எண் : 8) ஒன்றில் வரையப்பட்டுள்ளது.

குலோத்துங்கனின் மற்றொரு சாசனத்தில், **இராச சுந்தரி** என்னும் தேவரடியாள் ஒருத்தி,எலவானூசூர் இறைவனுக்குத் திருவமுதுக்காக நிலக்கொடை வழங்கிய செய்தி காணப்படுகிறது. இவள் சண்டை என்னும் ஊரில் உள்ள சிவன் கோயிலிலும் பணியாற்றியவள். (எண் : 14)

சண்டை என்னும் இச்சிற்றூர் திருக்கோவலூரிலிருந்து மேற்கே 15 கி.மீ. தொலைவில் உள்ளது.[1]

எலவானூசூர்க் கோயிலில் ஆடல் பாடல் உள்ளிட்ட சேவகங்கள் செய்துவந்த தேவரடியார்களுக்கு, **அரும்புலிப்பாடி** என்னும் சிற்றூர் சீவிதமாக வழங்கப்பட்டது (எண் 47). எண்ணற்ற தேவரடியார்கள் இங்குப் பணியாற்றியமையை மேற்கூறிய கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன.

---

1. சண்டைத் தான்தோன்றீசுரமுடையார்க் கோயிலில் 'புவனேக வீரன் சந்தி' என்னும் சிறப்பு வழிபாட்டுக்காக, எலவானூசூரில் வாழ்ந்த இருவரால் 'சீபாத நல்லூர்' என்னும் சிற்றூர் தேவதானமாக விடப்பட்டது. [See also A.R.E. 1906, No, 76.]

### பிடாரர்

கோயில்களில் தேவாரம் திருவாசகம் முதலான திருப் பதிகங்களை ஓதுகின்றவர்கள், முற்காலத்தில் பிடாரர் என்று அழைக்கப்பட்டனர். இவ்வூர்ச் சிவன் கோயிலில் **கங்கராயன்** என்னும் கைக்கோளன் ஒருவன், இத்திருப் பணியைச் செய்து வந்தான். ஆதலின், அவன் வரி இன்றி தறி ஒன்று வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டான். சதா சிவதேவரின் சாசனம் இதனைத் தெளிவாக்குகிறது.[2]

சிவன் கோயிலில் நாள்தோறும் திருப்பள்ளி எழுச்சி பாடப்பட்டது. விக்கிரம சோழன் காலத்தில் ஞாயிற்றுக் கிழமை தோறும் திருச்சாழல் பாடப்பட்டது. இது மாணிக்க வாசகர் அருளிச் செய்த திருவாசகத்தில் உள்ள ஒரு பதிகமாகும். இவற்றை யெல்லாம் இங்கு முறையாகப் பாடியவர்கள் பிடாரர்களே.

### தேவர் பண்டாரம்

கோயிலுக்கென்று அறவோர்களால் அவ்வப்போது வழங்கப்பெறும் விலையுயர்ந்த பொருள்கள், அணிகலன்கள், ஆடைகள், பொற்காசுகள், நவமணிகள் முதலானவற்றைப் பாதுகாப்பாக வைத்துப் போற்றப்படும் இடம் தேவர் பண்டாரம் எனப் பெயர் பெறும். பிற்காலத்தில் கோயிலுக்குச் சொந்தமான நெல் முதலானவற்றையும் பண்டாரத்தில் சேர்த்தனர்.

கூடலூர் அரச நாராயணன் ஏழிசை மோகன் என்னும் சிற்றரசனும், கிளியூர் மலையமான் இராசராச மலையகுல ராயன் என்னும் சிற்றரசனும் முறையே தனக்கு வர வேண்டிய வரிப்பொருள்களையும், நெல் தொகுதியையும் தேவர்

2. A.R.E. 1937—38, No. 486.

பண்டாரத்தில் சேர்க்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளனர்.

விளக்குத் தானமாக வழங்கப்பட்ட 32 பசுக்கள் தேவர் பண்டாரத்தில் ஒடுக்கப்பட்டதாக, மூன்றும் இராசராச சோழனின் கல்வெட்டுக் கூறுகிறது.

செம்பியன் மாதேவி என்னும் ஊரைச் சார்ந்த நிலங்களுக்கு விதிக்கப்பட்ட வரித் தொகைகள் அனைத்தும் ஸ்ரீபண்டாரத்தில் ஒடுக்கப்படவேண்டுமென்று கிருஷ்ண தேவராயரின் சாசனம் ஆணையிடுகிறது.

அச்சுததேவராயர் கல்வெட்டு ஒன்றும் தேவர் பண்டாரத்தைக் குறிப்பிடுகிறது. முற்காலத்தில் இவ்வட்டாரத்தில் இருந்த மரக்கால், இறைவனின் பெயரால் **ஊர்பாகங் கொண்டான் மரக்கால்** என்று அழைக்கப்பட்டது.

# கொடை நிலங்கள்

## நந்தவனங்கள்

முதலாம் இராசேந்திரனின் 5ஆவது ஆண்டில் (கி. பி. 1017) ஊர்ச் சபையினரால், சிவன் கோயிலுக்கு நந்தவனம் அமைப்பதற்காக நிலம் ஒதுக்கப்பட்டது. அந்நிலத்தில் 5 கிணறுகள் இருந்தன.

கல்வெட்டில் நிலத்தின் எல்லைகள் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கருத்திற் கொண்டு ஆராயின், எலவானூரிலுள்ள நம்பி குளத்திற்குக் கிழக்கிலும், வடக்கிலும் அமைந்துள்ள நன்செய் நிலப்பகுதிகள் அக்காலத்தில் நந்தவனமாக இருந்த செய்தி புலனாகிறது. (எண் : 4)

## சிந்தாமணி நந்தவனம்

கரம்பியன்கிழான் பட்டாலகன் சிந்தாமணியான நரேந்திர சிகாமணி மூவேந்த வேளான் என்பவன், இரண்டாம் இராசேந்திர சோழனின் (கி.பி. 1051–1063) இளவலான இராசமகேந்திரன் காலத்தில், இவ்வூரில் அரசு அதிகாரியாக விளங்கினான்.

இவ்வதிகாரி காசியபன் சதாசிவன் திருவெண்காட்டடிகள் பட்டன், ஆரிதன் திவாகரன் ஆகிய இருவரிடமும், ஊர்ச்சபையாரிடமும் சில நிலங்களை விலைக்கு வாங்கி,

அவற்றை நந்தவனம் அமைக்கும் பொருட்டுச் சிவன் கோயிலுக்குக் கொடையாக வழங்கினன். அது அவன் பெயராலேயே 'சிந்தாமணி நந்தவனம்' என்று அழைக்கப்பட்டது.

அந்த நந்தவனத்துள் இரண்டு கிணறுகள் இருந்தன. பூமரங்களும் பயன் மரங்களும் வளர்க்கப்பட்டன. தோட்டக்கால் பயிர் செய்யப்பட்டது.

திருமாற் கோயிலுக்குரிய நந்தவனம் இதற்குத் தெற்கில் அமைந்திருந்தது. இவற்றை அவ்வப்போது திருத்திப் பயிரிடுதற்குப் பணியாளர்கள் இருந்தனர். அவர்கள் நந்தவனத்தில் ஒரு பகுதியில் பயிரிட்டு. அதன் பயனை அனுபவித்து வந்தனர். அப்பகுதிக்கு '**நந்தவனப்புறம்**' என்பது பெயர். (எண் : 6)

## தேவதான நிலங்கள்

சிவன் கோயிலுக்கும், மறைந்துபோன திருமாற் கோயில்களுக்கும் சொந்தமாக இருந்த நிலங்கள் பொதுவாக தேவதானங்கள் என்று பெயர் பெற்றிருந்தன. அவற்றுள்ளும் சிவன் கோயிலுக்குரியவை **திருநாமத்துக்காணி** என்றும், திருமாற் கோயிற்குரியவை **திருவிடையாட்டம்** என்றும் அழைக்கப்பட்டன.

நன்செய் நிலம் **நீர்நிலம்** எனப்பட்டது. நிலங்களின் பெயர்கள் காரணப் பெயர்களாகவே உள்ளன. இவை அனைத்தும் **வீதிவிடங்கன் கோல், பொத்தகக் கோல்** ஆகியவற்றால் அளந்து கணக்கிடப்பட்டன. வேலி, மா, தடி எனப் பலவாறு பிரிக்கப்பட்டன. வாய்க்கால்களும், வழிகளும் சோழ மன்னர்களின் பெயர்களையும், அதிகாரிகளின் பெயர்களையும், இறைவனின் பெயர்களையும் பெற்றிருந்தன.

## வரி வகைகள்

நிலம், தொழில் ஆகியவற்றுக்கு வரிகள் விதிக்கப்பட்டன. அவ்வரிகளுள் நிலவரி என்பது கடமை, தற்கடமை எனப்பட்டது. அவையே, காணிக்கடன் ஆகும். பிற வரிகள் குடிமை என்று குறிக்கப்பட்டன.

## வரிப் பெயர்கள்

அந்தராயம், இடங்கைவரி, இனவரி, உள்வரி, ஏரிமீன் பாட்டம், கருவிப்பணம், காசாயம், கீழிறை, குதிரைக் காணிக்கை, குற்றத்தெண்டம், கூற்றிலக்கை, சாற்கல்லாயம், சில்வரி, சிறுபாடிக்காவல், செக்காயம், செக்கிறை, செக்கோட்டுப் போகம், செட்டிறை, தட்டாரப்பாட்டம், தட்டொலிப்பாட்டம், தரவிநியோகம், தலையாரிக்கம், தறியிறை, திரிகை ஆயம், நல்லெருது, நற்பசு, பட்டித்தெண்டம், பெருபாடிக்காவல், பெருவரி, பொன்வரி எனப் பல்வேறு வரிகளின் பெயர்களை இங்குள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இவற்றுள் சில வரிகள் சோழர் காலத்திலும், வேறு சில விசயநகர வேந்தர் காலத்திலும் விதிக்கப்பட்டன.

நாணயங்கள் பொன், மாடை, காசு, பணம் எனச் சுட்டப்படுகின்றன.

அக்காலத்தில் வட்டி விகிதம் மிக அதிகமாக இருந்துள்ளது.

# தேவதான ஊர்கள்

சிவன் கோயிலின் தேவைக்கென்று, பல்வேறு காலங்களில் அரசர்களாலும், அரசு அலுவலர்களாலும் நிலங்களேயன்றிச் சிற்றூர்கள் சிலவும் தேவதானங்களாக விடப்பட்டன. அவற்றுள் சிலவற்றைப் பற்றி இப்பகுதியிற் காண்போம்.

## நல்லரைசூர்

இது எலவானாசூருக்குக் கிழக்கே 1.5 கி.மீ. தொலைவில் உள்ளது. இப்போது அங்குக் குடியிருப்பு எதுவும் இல்லையாயினும், அங்குள்ள நிலங்கள் இன்றும் நல்லரைசூர் என்றே குறிக்கப்படுகின்றன. முற்காலத்தில் இச்சிற்றூர் எலவானாசூரின் உட்கிடையூராக இருந்தது.

நல்லரைசூர்க் குளத்துக்குக் கிழக்கே அமைந்த நன்செய், புன்செய் நிலங்கள் பொத்தகக் கோலால் 9818½ குழி அளவுடையன இவை அனைத்தும் ஆரிதன் திருவரங்கன் என்பவனுக்குச் சொந்தமாகும். இவற்றை ஊர்ச் சபையார் 120 பொற்காசுகளுக்கு விலைக்கு வாங்கி, எலவானாசூர்ச் சிவன் கோயிலுக்கு வழங்கினர். முதலாம் இராசேந்திர சோழன் காலத்துச் (கி.பி 1015) சாசனம் இதனைக் குறிப்பிடுகிறது. (எண் · 3)

'உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்துக் கைக்கோளன் கூத்தன் வீமனை **செயங் கொண்ட சோழமாராயன்'** என்னும் அதிகாரி, நல்லரைசூர் ஏரிக்கு உள்ளேயும் இருந்த நிலங்களில் ¾ தடி அளவுடைய நிலத்தினை இறைவனுக்குத் தானமாக வழங்கியுள்ளான். குலோத்துங்க சோழன் கல்வெட்டில் இச்செய்தி காணப் படுகிறது. (எண் : 11)

**இராச சுந்தரி** என்னும் தேவரடியாள், திருவமுதுக் காக நல்லரைசூரில் தனக்குச் சொந்தமாக இருந்த நிலங்களை மானியமாகக் கொடுத்த செய்தியைக் குலோத்துங்கனின் மற்றொரு சாசனம் உணர்த்துகிறது. (எண் : 14)

நல்லரைசூர் தேவதான நிலங்களுக்கு இரண்டாம் இராசராச சோழன், விக்கிரம பாண்டியன் ஆகியோர் காலத்தில் வரிவிலக்கு அளிக்கப்பட்டது. (எண்கள் : 28&62) இறைசைப் புராணம் இயற்றிய திருமலைநயினார் சந்திரசேகரருக்கு இங்கு நிலக்கொடை வழங்கப்பட்ட செய்தி முன்னரே விளக்கப்பட்டது. (எண் : 70)

**செம்பியன் மாதேவி**

இச்சிற்றூர் எலவானாசூருக்கு மேற்கே 4. கி. மீ. தொலைவில் உள்ளது. முதலாம் இராசராச சோழனின் 7ஆவது ஆண்டுக் (கி. பி. 992) கல்வெட்டு ஒன்றில், இது **செம்பியன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம்** எனக் குறிக் கப்படுகிறது. செம்பியன் மாதேவி என்பாள் கண்டராதித்த சோழன் (கி.பி. 50—957) மனைவி. மாநாட்டுக் குறுநில மன்னனின் மகள்[1] சிறந்த சிவபக்தி உள்ளவள். இவள்

1. South Indian Inscriptions, Vol. III, No. 141.

சிவத்தலங்கள் பலவற்றிற்கு எண்ணற்ற அறங்களைச் செய்துள்ளாள்,

இவ்வம்மையாரின் பெயரால் இவ்வூர் வேதம்வல்ல அந்தணர்களுக்குப் பிரமதேய உரிமையாக வழங்கப்பட்டமையால், இது செம்பியன்மாதேவிச் சதுர்வேதிமங்கலம் என்று பெயர் பெற்றது.

முதலாம் குலோத்துங்க சோழன்காலத்தில், எலவானுசூரில் ஊர்க் கணக்கராகப் பணியாற்றி ஓடிவிட்ட பட்டர்களுக்கு, இவ்வூரில் சொந்தமாக நிலங்களும், வீட்டுமனைகளும் இருந்தன. அவற்றை ஊர்ச் சபையாரிடம் விலைக்கு வாங்கிய மணவில் கூத்தன், எலவானுசூர்ச் சிவன்கோயிலுக்குத் தானமாக வழங்கியுள்ளான். இச்செய்தி முன்னரே விளக்கப்பட்டது. (எண் : 16)

இங்குள்ள ஏரி அக்காலத்தில் '**வானவன் மாதேவிப் பேரேரி**' என்று பெயர் பெற்றிருந்தது. வானவன் மாதேவி என்பாள், சுந்தரசோழனின் பட்டத்தரசி. ஆதலின், அவள் பெயரால் இவ்வேரி (கி. பி. 957—970) உருவாக்கப்பட்டதாகமுடிவு செய்யலாம். எலவானுசூரில் அக்காலத்தில் இருந்த வானவன்மாதேவி விண்ணகர் என்னும் விஷ்ணு கோயிலும் இவ்வரசியின் பெயரால் நிறுவப்பட்டதென்பது உளங்கொளத் தக்கது.

கிருஷ்ணதேவராயனின் சாசனம் ஒன்றில், இச்சிற்றூர் 'பிடாகைப்பற்று செம்பியன் மாதேவி பூர்வ தேவதானம்' என்று குறிக்கப்பட்டுள்ளது. எனவே, கி. பி 16ஆம் நூற்றாண்டு வரை, இவ்வூர் எலவானுசூர்ச் சிவன்கோயிலுக்குச் சொந்தமாகவே இருந்துள்ளது. (எண் : 71)

**குஞ்சரம்**

இவ்வூர் எலவானூருக்கு வடமேற்கே 7 கி. மீ. தொலைவில் உள்ளது. இதன் பழைய பெயர் குஞ்சர மங்கலம் என்று சாசனங்கள் கூறுகின்றன. இவ்வூர் ஸ்ரீசைலேசுவரர் ஆலயத்தில் உள்ள மாறவர்மன் வீரபாண்டி யனின் கல்வெட்டில், இதன் பெயர் குஞ்சிரம் என்று காணப் படுகிறது (எண்: 64) சிவபெருமான் **'திருக்குன்றமுடைய நாயனூர்** என்றும், பிராட்டியார் **தாயினும் நல்ல நாச்சி யார்** என்றும் குறிக்கப்படுகின்றனர்.

குஞ்சரத்தில் உள்ள ஏரியின் பெயர் **கேரளாந்தகப் பேரேரி** என்று கல்வெட்டுக் கூறுகிறது. கேரளாந்தகன் என்பது, முதலாம் இராசேந்திர சோழனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று. ஆதலின், இவ்வேரி அம்மன்னனின் காலத்தில் உருவாகியதாகக் கருதலாம்.

இனி, இவ்வேரிக்குக் கிழக்குப் பக்கத்தில் அமைந் துள்ள நன்செய் நிலங்கள், அக்காலத்தில் பத்துச்செய் என்று பெயர் பெற்றிருந்தது. அவை அனைத்தும் கௌசிகன் சங்கரநாராயணன் என்பவனுக்குச் சொந்தமாக இருந்தன. அவன் குஞ்சிரமங்கலத்து வடசேரியில் இருந்தவன். இவனுக்குச் சொந்தமாக இருந்த நிலங்கள், கிணறுகள், வீட்டுமனை, தோட்டம் முதலானவற்றைத் **திருவரங்கன்** என்பவன் விலைக்கு வாங்கி, அவற்றை எலவானூர்ச் சிவன் கோயிலுக்கு நிவந்தமாக வழங்கினன்.

முதலாம் இராசராச சோழன் காலத்துக் (கி.பி.1009) கல்வெட்டில் இச்செய்தி காணப்படுகிறது. (எண். 2)

**அரும்புலிப்பாடி**

இச்சிற்றூர் எலவானூருக்கு வடகிழக்கே 5 கி. மீ. தொலைவில், **அரும்பலவாடி** என்ற பெயருடன் உள்ளது.

இது **அரும்புலிப்பாடி** என்றும் **புலியுணிபாடி** என்றும் பழைய கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது.

சோழர் காலத்திலும் பாண்டியர் காலத்திலும் இதற்கு **இராச ராச மங்கலம்** என்ற வேறொரு பெயரும் இருந்தது. சோழர் காலத்துச் சிதைந்த கல்வெட்டால், இதற்கு நரசிங்க மங்கலம் என்ற பிறிதொரு பெயர் இருந்ததையும் அறிகிறோம். இவ்வூர்ப் பாதை ஒன்று **தக்ஷணன் கௌரியர் தேவன் பாதை** என்று அழைக்கப்பட்டது.

இங்குள்ள நிலங்கள், கிணறுகள், மரங்கள், நத்தம் உள்ளிட்ட அனைத்தும் எலவானூர்ச் சிவன் கோயிலுக்கு ஊர்ச் சபையினரால் விற்கப்பட்டன. இரண்டாம் இராச ராச சோழன் காலத்தில் இங்குள்ள நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

மூன்றும் குலோத்துங்கனின் 30ஆவது ஆண்டில் (கி பி. 1208) எலவானூர்ச் சிவன் கோயிலில் பணியாற்றிய தேவரடியார்களுக்கு இச்சிற்றூர் சீவிதமாக வழங்கப் பட்டுள்ளது. விக்கிரம பாண்டியன் காலத்தில் இவ்வூர் மக்கள் செலுத்த வேண்டிய காணிக்கடன் அனைத்தும்சிவன் கோயிலுக்கு உரிமையாக்கப்பட்டன.

**பரிந்தல்**

எலவானூரிலிருந்து தெற்கே 6 கி. மீ. தொலைவில் இச் சிற்றூர் உள்ளது. **பருந்தல்** என்பது இதன் பழைய பெயராகும். **விக்கிரம** சோழனிடம், வாணகோவரையன் வேண்டிக் கொண்டதற்கிணங்க, இவ்வூரின் ஒரு பகுதி நிலங்களுக்கு **மலையவிச்சாதிரி நல்லூர்** என்று பெயரிடப் பட்டது.



நன்றி : French Institute of Indology - Pondicherry

இராஜ கோபுரம்

(முதலாம் குலோத்துங்க சோழன் காலம்-கி. பி. 1100

மலையவிச்சாதிரி நல்லூரில் 10 வேலி நன்செய் நிலமும் 10 வேலி புன்செய் நிலமும் இருந்தன. நன்செய் நிலம் வேலி ஒன்றுக்கு 70 கலமாகவும்,.புன்செய் நிலம் வேலி ஒன்றுக்கு 30 கலமாகவும் கணக்கிட்டு ஆண்டுதோறும் 1000 கலம் நெல்லை அவ்வூர் மக்கள் காணிக்கடனாகச் செலுத்திவந்தனர். விக்கிரம சோழன் இந்நிலங்களை எலவானாசூர்ச் சிவன் கோயிலுக்கு மாணியமாக வழங்கினான்.

கூடலூர் ஆளப்பிறந்தான் மோகனான இராச ராசக் காடவராயன் என்னும் சிற்றரனும், கிளியூர் மலையமான் இராசராச மலைய குல ராயன் என்னும் சிற்றரசனும், இவ்வூர் மக்கள் தமக்குச் செலுத்திய வரித்தொகைகளை இக் கோயிலுக்குக் கொடுத்தனர். விக்கிரம பாண்டியனின் ஆட்சிக் காலத்தில் இவ்வூர் நிலங்கள் சில வற்றுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது, [எண்கள்: 17, 24 26 & 62]

## மலையனூர்

இது எலவானாசூரிலிருந்து தென்கிழக்கே 5 கி. மீ. தொலைவில் உள்ளது. இரண்டாம் இராசராச சோழன் காலத்தில் இவ்வூருக்கு **இராசராச மங்கலம்**.என்று புதிய தொரு பெயரிடப்பட்டது.

அங்கு 20 வேலி நன்செய் நிலங்கள் இருந்தன. வேலி ஒன்றுக்கு 80 கலமாக, ஆண்டு தோறும் 1600 கலம் நெல் காணிக்கடனாகச் செலுத்தப்பட்டது. இராசராச மலையகுல ராயன் என்னும் சிற்றரசன் வேண்டிக் கொண்டதற்கு இணங்க, இரண்டாம் இராசராச சோழன் அந்நிலங்கள் அனைத்தையும் எலவானாசூர்ச் சிவன் கோயிலுக்குத் தானமாக வழங்கினான்.

விக்கிரம பாண்டியன் அவ்வூர் மக்கள் செலுத்த வேண்டிய வரித் தொகைகளை, அக் கோயிலுக்குத் தனது பிறந்த நாளான **அஸ்தநாள்** விழாவுக்கும், **இராசாக்கள் நாயன் சந்திக்கும்** செலவிடப்படவேண்டுமென்று கட்டளையிட்டான். [எண்கள் : 28, 29, 62 & 80]

## புத்தூர்

இச்சிற்றூர் எலவானசூருக்கு மேற்கே ஒரு கி. மீ. தொலைவில் உள்ளது. முற்காலத்தில் எலவானசூரில் நிலை பெற்றிருந்த திரு முற்றத் தாழ்வார், திருமேற் கோயிலாழ் வார், ஸ்ரீபதிரி ஆழ்வார், திருச்சக்கரத்தாழ்வார் முதலான விஷ்ணு கோவில்களுக்குரிய நன்செய் புன்செய் நிலங்கள் இச்சிற்றூரில் இருந்தன.

மூன்றும் குலோத்துங்க சோழன் காலத்தில், இராச ராச மலையகுலராயன் என்பவன், மேற்கூறிய கோயில் நிலங்களுக்கு வரிவிலக்கு அளித்துள்ளான். ஊர்ச்சபையாருக்கு உரிய நிலங்களும் இங்கு இருந்தன. புத்தூர் நிலங்களிலிருந்து வரவேண்டிய பாடிகாவல் உள்ளிட்ட வரிகளை, சூரியதேவன் நிரேற்றான் என்ற சூறுநில மன்னன், எலவானசூர்க் கோயிலுக்கு வழங்கினான். அத்தொகைகள் திருவமுதுக்கும், திருமெய்ப் பூச்சுக்கும் பயன்படுத்தப் பட்டன.

விக்கிரம பாண்டியனின் ஆட்சியிலும் (கி. பி. 1272) இச்சிற்றூர் நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. [எண்கள் ; 42, 44 & 72].

## சீயமங்கலம்

இவ்வூர் எலவானசூருக்குத் தெற்கே 8 கி. மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரிலிருந்து வசூலிக்கப்பட்ட வரித்

தொகைகள் அனைத்தும், சிவன் கோயிலுக்கு உரிமையாக்கப் பட்ட செய்தி, விக்கிரம பாண்டியனின் சாசனத்தில் குறிக் கப்பட்டுள்ளது.

கி. பி. 1535ஆம் ஆண்டில் இச்சிற்றூர் எலவானுசூர் சிவன் கோயிலுக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டது. அச்சுத தேவ மகாராயருக்கு நன்மை உண்டாகுமாறு, போகைய தேவ மகாராசர் இவ்வாறு கொடுத்ததாகச் சாசனம் கூறுகிறது. [எண் : 62 & 74]

**விக்கரச்சி மங்கலம்**

இது எலவானுசூருக்கு மேற்கே 3·5 கி. மீ. தொலைவில் **பரமேசுவர மங்கலம்** என்ற பெயருடன் உள்ளது. இதனைப் **பரமங்கலம்** என்றும் அழைக்கின்றனர்.

சோழர் காலத்திலும், பாண்டியர் காலத்திலும் இது **விக்கரச்சி மங்கலம்** என்று பெயர் பெற்றிருந்தது.

இவ்வூரில் இருக்கும் நிலப்பகுதி ஒன்றுக்குக் காஞ்சிரஞ் செய் என்றும், மற்றொன்றுக்கு நிலைபெறுஞ்செய் என்றும் பெயர்கள் நிலவின, அவற்றுள் கிணறுகள் கால்வாய்கள், மரங்கள், நத்தம் ஆகியவை இருந்தன. இவை அனைத்தும் கௌசிகன் ஸ்ரீகண்டன ஸ்ரீகாரிமாறன் என்பவனுக்குச் சொந்தமாகும், **சூரநாயகனான நானூற்றுவப் பல்லவரையன்** என்னும் அரசு அதிகாரி இவற்றை விலைக்கு வாங்கி, எலவானுசூர்ச் சிவன் கோயிலுக்குத் தானமாக வழங்கினான். இச்செய்தி இரண்டாம் இராச ராச சோழன் கல்வெட்டினால் புலனாகிறது.

பருவூர் உடையார் தேவர் கச்சியார் என்பவரின் பிள்ளைகளில் ஒருவரான **காளத்தி நாதர்**, இச்சிற்றூரில்

உள்ள ஏரியின் கிழக்குத் திக்கில் அமைந்த சில நிலங்களை விலைக்கு வாங்கி, அவற்றை எலவானாசூர்ச் சிவன் கோயிலுக்கு விளக்குத்தானமாகக் கொடுத்தான். அந்நிலம் 968 குழி அளவுடையது என்று சாசனம் கூறுகிறது. [எண்கள் : 31 & 65]

## நெடுமானூர்

இவ்வூர் எலவானாசூருக்குத் தெற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இதனைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் பெரும்பகுதி சிதைந்துவிட்டமையால், செய்திகளைத் தெளிவாக அறிந்துகொள்ள இயலவில்லை. எனினும் எலவானாசூர்ச் சிவன் கோயிலுக்கு நிலக்கொடை வழங்கியதைக் குறப்பதாகத் தெரிகிறது.

விக்கிரம பாண்டியன் தனது பெயரால் தோற்றுவித்த விழாக்களுக்கு, இவ்வூர் மக்கள் செலுத்த வேண்டிய வரிகளைத் தானமாக வழங்கினான். [எண்கள்: 7, 17&62].

## மாம்பட்டு

இச்சிற்றூர் எலவானாசூருக்கு மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் நிலங்களில் ஒரு பகுதி ஊர்க்கழனி என்றும், மற்றொரு பகுதி புத்தேந்தல் கழனி என்றும் அழைக்கப்பட்டன.

இவற்றுள் ஊர்க்கழனியில் ஒரு வேலி அளவுடைய நிலத்தை வாண கோவரையர் வன்னெஞ்ச நாயனார் என்பவரும், புத்தேந்தல் கழனியில் ஒரு வேலி அளவுடைய நிலத்தைப் பொன்பரப்பின வாணகோவரையர் என்பவரும் எலவானாசூர்ச் சிவன் கோயிலுக்குக் கொடையளித்தனர். கோப்பெருஞ் சிங்கன் காலத்திய இரண்டு

கல்வெட்டுகளில் [எண்கள் : 57 & 58] இச் செய்தி காணப்படுகிறது.

**அதகூர்**

இது எலவானாசூருக்கு வடமேற்கே 8 கி.மீ தொலைவில் உள்ளது. இக் காலத்தில் இதனை **அதியூர்** என்பர். இவ்வூர் ஏரியின் கீழுள்ள நன்செய் நிலம் 500 குழி, அங்கிருந்த கிணறுகள் ஆகியவற்றை வல்லவதரையன் மகன் மாணிக்க நாயனார் என்பவர், எலவானாசூர்ச் சிவ பெருமானுக்குத் தானமாக வழங்கினான்.

**இராசநாராயண நரசிங்க முனையதரையன்** என்னும் அதிகாரி, குசப்பட்டி, நாவல் குண்டு, வேப்பங்குண்டு, புளியங்குண்டு என்னும் பெயருடைய நிலங்களை அப்பெரு மானுக்கு விளக்குத் தானமாகக் கொடுத்துள்ளான். [எண் : 67]

**சீதேவி**

இது எலவானாசூரிலிருந்து வடமேற்கே 32 கி.மீ. தொலைவில் உள்ள சிற்றூர். அங்குள்ள நிலப்பகுதி ஒன்றுக்கு **வாணதராயன் ஏந்தல்** என்று பெயர். அங்கு 550 குழி அளவுடைய நிலங்களை **திருமுடிக்காரி** என்பான் எலவானாசூர்ச் சிவனுக்கு விளக்குத் தானமாக வழங்கினான். கொப்பண்ண உடையாரின் கட்டளைக்கிணங்க இவ்வறச் செயல் நிகழ்த்தப்பட்டதாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. [எண் : 77]

எலவானாசூர்ச் சிவன் கோயிலுக்கு, மேலே குறிப்பிட்ட ஊர்களேயல்லாமல், **வீரமங்கலம்** என்னும் ஊர் திருத்தேர்

விழாவுக்காகவும், பிச்சாண்டான் குறிச்சித் தாங்கல், செட்டியெந்தல் தாங்கல் என்னும் ஊர்கள் 6 ஆம் நாள் விழாவுக்காகவும், சூற்றியன் குறிச்சி என்னும் ஊர் திருப்பணிக்காகவும் தேவதானங்களாக விடப்பட்டன. இத்தலைப்பில் எடுத்துக் காட்டிய கோயில் நிலங்கள் அனைத்தும் தற்போது தனியார் உடமைகளாக மாறிவிட்டன. ஆதலின் பராமரிக்க இயலாத நிலையில் கோயில் சீரழிந்து வருகிறது.

# குறுநில மன்னர்கள்

எலவானாசூர்க் கல்வெட்டுகளில், சோழ மன்னர்களுக்கு அடங்கி ஒழுகிய குறுநில மன்னர்கள் சிலரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவர்களில் முக்கியமானவர்கள் மலையமான்களும் காடவராயர்களுமாவர்.

## உத்தமசோழ மிலாடுடையார்

திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்ட மலையமான் நாட்டுக் குறுநில மன்னர்களில் இவனும் ஒருவன். பார்கவ கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்றும், **பராந்தக யாதவ பீமன்** என்ற வேறு பெயரை உடையவன் என்றும் கல்வெட்டு குறிப்பிடுகிறது. முதலாம் இராசராச சோழன் காலத்தில், அம்மன்னனின் படைத் தலைவனாக விளங்கிய இவன், முதலாம் இராசேந்திர சோழன் காலத்திலும் வாழ்ந்துள்ளான்.

திருக்கோவலூருக்கு அண்மையில் உள்ள கீழூர்ச்சிவன் கோயிற்சாசனங்கள் சிலவற்றில் இவனைப்பற்றிய செய்திகள்

---

அடுத்த பக்கத்தில் உள்ள படங்கள் : →

1. ஆளுடைய நாச்சியார் (செப்புத்திருமேனி)
2. ஆலிங்கன சந்திர சேகரர் ( ,, )





வரையப்பட்டுள்ளன. இவன் கி. பி. 1015 ஆம் ஆண்டில் எலவானூர்ச் சிவனுக்குக் கோ தானமும், நில தானமும் செய்துள்ளான்.

## இராசேந்திரசோழ மலையகுலராயன்

மலையமான் நாட்டு மன்னர்களில் இவனும் ஒருவன். விக்கிரமசோழன் காலத்தில் வாழ்ந்த இம்மலையமானுக்குக் **சூரியன் இராமன்** என்ற வேறு பெயரும் உண்டு. அக் காலத்தில் எலவானூர் பகுதிக்குப் பாடிகாவல் அதிகாரியாக இவன் விளங்கினன்.

எலவானூர்ச் சிவன் கோயிலுக்கும், விஷ்ணு கோயில்களுக்கும், குடிமக்கள் தனக்குச் செலுத்த வேண்டிய வரிப் பொருள்களை நிவந்தமாகத் தந்துள்ளான்.

## இராசராச மலையகுலராயன்

இவன் இரண்டாம் இராசராச சோழன் காலம் முதல் மூன்றும் குலோத்துங்க சோழன் காலம்வரை வாழ்ந்தவன். இவனுக்குக் **கிளியூர் மலையமான் பெரிய உடையான் நிரேற்றுன்** என்ற வேறு பெயரும் கல்வெட்டுகளில் காணப் படுகிறது. தனது வேளக்காரப் படையினரால் **எதிரிகள் நாயன்** என்று அழைக்கப்பட்டான். சமகாலத்துச் சிற்றரசர்களில் இவன் வலிமை மிக்கவன். ஆதலின், வாணகோவரையர் முதலானோர் இவனது கூட்டுறவை விரும்பினர்.

இவன் கி.பி. 1153, 1159, 1184 ஆகிய ஆண்டுகளில் எலவானூர்ச் சிவன் கோயிலுக்கும், விஷ்ணு கோயில்களுக்கும் நிவந்தங்கள் பல வழங்கியுள்ளான். அன்றியும், சிவன்கோயில் இராசகோபுரத்திற்கு எதிரில் மாளிகை ஒன்றையும் கட்டுவித்தான். அம்மாளிகையின் சுவடுகளை இன்றும் காணலாம்.

### சோழேந்திர சிங்க மலையகுலராயன்

இவன் இரண்டாம் இராசராசசோழன் காலத்தவன். **கிளியூர் மலையமான் பெரிய உடையான் சூரியதேவன்** என்ற வேறு பெயரும் இவனுக்கு உண்டு.

இவன் எலவானசூர்ச் சிவனுக்குப் புரட்டாசி, பங்குனி மாதங்களில் நடைபெற்ற விழாக்களுக்கும், அமாவாசை தோறும் நடைபெற்ற சிறப்பு வழிபாடுகளுக்கும் நிவந்தங்கள் வழங்கினான். ஆளுடைய நாச்சியாற்குப் பொன்னலான திருக்காப்புநாண் சாற்றினான்.

### இராசராசக் காடவராயன்

இவன் பிற்காலப் பல்லவர்களில் ஒருவன். இரண்டாம் இராசராச சோழன் காலத்தவன். **கூடலூர் ஆளப்பிறந் தான் மோகன்** என்னும் வேறொரு பெயரும் இவனுக்கு உண்டு. அத்துடன் **நாலுதிக்கும் வென்றான்** என்ற சிறப்புப் பெயரும் இருந்தது. இவன் தென்னார்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதிக்குப் பாடிகாவல் அதிகாரியாக இருந்துள்ளான்.

கி. பி. **1152** ஆம் ஆண்டில், தனக்கு வரும் வரித் தொகைகளை எலவானசூர் இறைவனுக்குத் தானமாக வழங்கி யுள்ளான். அன்றியும் அச்சிவன் கோயிலில் மாளிகை ஒன்றையும் இவன் எடுப்பித்துள்ளான். இச் செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது.

### குலோத்துங்க சோழக் காடவராயன்

பிற்காலப் பல்லவர்களில் இவன் எழுச்சி மிக்கவன். இரண்டாம் இராசராசன் காலத்தவன். திருமுனைப்பாடி நாட்டுக்குத் தலைவனான இவன், குலோத்துங்க சோழக்

காடவராயன், கச்சிராயன் முதலான பட்டங்களைப் பெற்றிருந்தான். இவனுக்கு **ஆளப் பிறந்தான், அரச நாராயணன், ஏழிசைமோகன்** முதலான சிறப்புப் பெயர்களும் உண்டு. சிறந்த சிவபக்தன். திருநாவலூர், திருவதிகை, விருத்தாசலம் முதலான ஊர்களிலுள்ள சிவன் கோயில்களுக்கு நிவந்தங்கள் பல வழங்கியுள்ளான்.

எலவானாசூர்ச் சிவன் கோயில் தலங்களில், கருங்கற் பலகைகள் பதித்துத் திருப்பணி செய்துள்ளான். அக்கோயிலில் தன்பெயரால் **ஏழிசை மோகன் திருமண்டபம்** என்னும் மண்டபம் ஒன்றையும் எடுப்பித்தான். கல்வெட்டு ஒன்றால் இச்செய்தி புலனாகிறது. [எண் : 27]

## அதிகாரிகள்

சோழர் காலத்து அதிகாரிகளின் பெயர்கள் இங்குள்ள கல்வெட்டுகளில் உள்ளன. அவர்களில் **மூவேந்த வேளான்** என்னும் பட்டமுடைய அதிகாரிகள் மிகுதியாக உள்ளனர். வேறுசிலர் **பல்லவரையன், பேரரையன்** முதலான பட்டங்களை உடையவர்களாகவும் விளங்கினர்.

# கட்டடக் கலை

## மாடக் கோயில்

யானை ஏறாத வண்ணம், மிக உயரமான பீடத்தின் மீது அமைக்கப்படும் கோயில், **மாடக் கோயில்** என்று பெயர்பெறும். எலவானாசூரில் உள்ள சிவன் கோயிலும் இவ்வாறு அமைக்கப்பட்ட மாடக்கோயிலே ஆகும்.

ஏறத்தாழ 4 மீட்டர் உயரமுள்ள பீடத்தின் மீது கோயில் அமைக்கப்பட்டுள்ளது. குன்று ஒன்றைச் சுற்றிக் கருங்கற் சுவர் அமைத்து, அதனையே பீடமாக மாற்றியுள் ளனர். குன்று தெரியாதவாறு கோயில் அமைந்திருப் பினும், கல்வெட்டுகள் அனைத்தும் மலை என்று குறிப்பிட்டு, பழைய அமைப்பினைத் தெளிவுபடுத்துகின்றன.

> "தை மாசம் முதல் நித்தமொரு திருவிளக்கு இரவை சந்தியில் **மலைமேலே** எரியக் கடவதாக"

எனவரும் முதற்குலோத்துங்கன் கல்வெட்டுகளாலும்,

> "இம்மாசம் முதல் நித்தம் ஒரு சந்தி விளக்கு **மலைமேலே** இரவை சந்தி எரிக்கக் கடவதாக"

> "நாள்தோறும் இந்நாயனார் **திருமலைமேல்** மண்டபத்திலே எரிவதாக வைச்ச சந்தி விளக்கு"

"இம்மாசம், முதல் நித்தமொரு திருவிளக்கு இரவை சந்தியில் **திருமலை மேலே** எரியக் கடவதாக"

எனவரும் இரண்டாம் இராசராச சோழன் கல்வெட்டு களாலும்,

"**திருமலை மேலே** இரவை சந்தி விளக்கு எரியக் கடவதாக"

"இரவை சந்தி **திருமலை மேலே** எரியக் கடவதாக"

எனவரும் இரண்டாம் இராசாதிராசன் கல்வெட்டு களாலும், இச்சிவன் கோயில் குன்றின்மீது நிறுவப்பட்ட மாடக்கோயில் என்பதை அறியலாம். திரு உண்ணாழிகை, மண்டபம் ஆகியவற்றை அடைவதற்கு, பீடத்தை ஒட்டிய வாறு படிகள் அமைந்துள்ளன.

பீடத்தின்மீது சதுரமான கருவறையும், நீள் சதுர வடிவான அர்த்த மண்டபமும் முதன்முதலில் நிறுவப்பட் டன. கருவறைச் சுவர்களில் தேவகோட்டங்கள் ஏது மில்லை. கொடுங்கைகள் கூடுகளால் அலங்கரிக்கப்பட் டுள்ளன. கூடுகளில் மனிதத் தலையும் அதன் மீது யாளி யின் தலையும் உள்ளன. கொடுங்கைமீது யாளி வரிமானம் உண்டு.

கருவறை அர்த்த மண்டபம் ஆகியவற்றின் வெளிச் சுவர்கள், பட்டை வடிவான அரைத்தூண்களால் அணி செய்யப்பட்டுள்ளன. தூண்கள் யாவும் கும்பம், பலகை, போதிகை முதலான உறுப்புகளைக் கொண்டுள்ளன.

**காலம்**

பீடமாக உள்ள சுவர்களில் சோழ மன்னர்களின் கல் வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. இங்குள்ள கல்வெட்டு

களில், முதலாம் இராசராச சோழனின் 7ஆவது ஆண்டில் (கி.பி. 992) வரையப்பட்ட கல்வெட்டே மிகப் பழமை யானது. ஆதலின், இக் கற்றளி அம்மன்னனின் ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்டதாக முடிவு செய்கிறோம்.

## முக மண்டபம்

அர்த்த மண்டபத்துக்கு முன்பு முகமண்டபம் அமைந் துள்ளது. இரண்டாம் இராசராச சோழனின் 19ஆவது ஆண்டில் (கி.பி. 1165) **சோலையம்பிரான்** என்னும் வாணி யன் ஒருவன், இம்மண்டபத்தில் சந்தி விளக்கு எரிக்க 15 பொற்காசுகளை மூலதனமாக வழங்கியுள்ளான். (எண்: 35) எனவே, இம்மண்டபம் கி.பி. 1165 ஆம் ஆண்டுக்கு முன்பே கட்டப்பட்டமை இனிது புலனாகும்.

முகமண்டபத்தை அடுத்து கோபுரத்தை ஒட்டியவாறு அமைந்துள்ள முற்றம், **நரேந்திரசிகாமணி மூவேந்த வேளார்** என்ற அதிகாரியால் கட்டப்பட்டது. ஆதலின், அது நரேந்திர சிகாமணி மூவேந்த வேளார் உள்ளாலைத் திருமுற்றம் என்று அழைக்கப்பட்டது.

## மண்டபங்கள்

முதலாம் இராசேந்திர சோழன் காலத்திலேயே, இக் கோயிலில் பெரிதும் சிறிதுமான பல மண்டபங்கள் இருந் துள்ளன. இம்மண்டபங்களுக்குச் சாந்திடுதல், வெள்ளை பூசுதல் முதலான திருப்பணிகளுக்கு, அம்மன் காலத் தில் 30 பொற்காசுகள் மூலதனமாக வழங்கப்பட்டுள்ளன. (எண்: 5)

முதற் பிரகாரத்தின் வாயிலை இணைத்தவாறு உள்ள மண்டபம், **முடிகொண்ட சோழன் திருமண்டபம்** என்று

பெயர் பெறும். இதனைத் **திருவோலக்க மண்டபம்** என்றும் அழைத்தனர். இராசமகேந்திரனின் கல்வெட்டு ஒன்றால் இச் செய்தி புலனாகிறது. (எண்:6)

இரண்டாம் இராசராச சோழன் காலத்தில் **ஏழிசை மோகன் திருமண்டபம்** என்னும் பெயருடைய மண்டபம் ஒன்று கட்டப்பட்டது. குலோத்துங்க சோழக் காடவராயன் என்னும் சிற்றரசன் இதனை எடுப்பித்தான். (எண்:27)

இச்சோழ மன்னன் காலத்தில் **திவ்விய மண்டபம்** ஒன்றும், வீரபாண்டியன் காலத்தில் **ஸ்நபன மண்டபம்** ஒன்றும் இருந்ததாகக் கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன. (எண்கள் . 31 & 63)

**மாளிகைகள்**

இராசராசக் காடவராயன் என்னும் சிற்றரசன், இக் கோயிலில் மாளிகை ஒன்று நிறுவினான். மூன்றாம் குலோத் துங்க சோழன் காலத்தில், இராசராச மலையகுல ராயன் என்னும் சிற்றரசன், இராச கோபுரத்திற்கு எதிரில் வேறொரு மாளிகை நிறுவினான். இவை இரண்டும் காலப் போக்கில் சுவடற்றுப் போயின.

**இராசகோபுரம்**

சிவன்கோயிலின் வாயிலை அலங்கரித்தவாறு நெடி துயர்ந்து நிற்கும் இராசகோபுரம், முதலாம் குலோத்துங்க சோழனின் 30ஆவது ஆண்டில் (கி. பி. 1110) கட்டப் பட்டது. இதனை எடுப்பித்தவன், குலோத்துங்கனுக்கு அடங்கி ஒழுகிய **கூடலூர் ஆளப்பிறந்தான் இராச கெம்பீர காடவராயன்** என்னும் சிற்றரசன் ஆவான். இவன் அழகிய பல்லவன் சாதும் பெருமாள் என்றும்

அழைக்கப்பட்டான். கோபுரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்றினால் இச்செய்தி புலனாகிறது.[1]

## திருப்பணிகள்

சிவன் கோயிலும், மண்டபங்களும், மாளிகைகளும், கோபுரமும் அவ்வப்போது செப்பனிடப்பட்டன. இதற்காக மானியங்களும் விடப்பட்டுள்ளன.

முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் இதற்காகப் பொற்காசுகள் வழங்கப்பட்டன. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வரிவிலக்கு அளிக்கப்பட்டது. கிருஷ்ண தேவராயர் காலத்தில், 'செம்பியன்மாதேவி' என்னும் ஊர் கொடுக்கப்பட்டது.

## சிற்பங்கள்

இங்குள்ள சோழர் காலத்துச் சிற்பங்களுள் முதன்மையானவை, துவார பாலகர்களின் அழகிய சிற்பங்களாகும். இவை இரண்டும் எடுப்பான தோற்றம் உடையவை. ஒரு கையில் கதை உள்ளது. மற்றொரு கை வியப்புக் குறியைக் காட்டுகிறது. ஒரு கால் நின்ற நிலையில் பீடத்திலும், மற்றொரு கால் மடங்கிய நிலையில் கதையின்மீது ஊன்றியவாறும் அமைக்கப்பட்டுள்ளது.

தலை சடா மகுடத்தால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. யானையும் யாளியும் காதுகளில் குண்டலங்களாகத் திகழ்கின்றன. அவ்விரண்டும் இவர்களுக்கு வாகனங்களாகவும் உள்ளன. கடிபந்தம், உதரபந்தம், முறுக்கேறிய பூணூல் ஆகியவை இவர்தம் மேனியை அலங்கரிக்கின்றன. காண்ப

1. A. R. E. 1937—38, No. 496

வரை அச்சுறுத்தும் வண்ணம் அமைந்துள்ள இச்சிற்பங்கள், உயரிய நுட்பமான கலைப்படைப்பாகும்.

பரிவாரத்திலுள்ள சுப்பிரமணியரின் சிற்பம், பழமையான அமைப்புடையது. அதன் முன்னிரண்டு கைகளில் வலது கை அபய முத்திரையைத் தாங்கியுள்ளது. இடது கை, உடலை ஒட்டியவாறு துடையில் பதிந்துள்ளது. பின்னிரு கைகள், முறையே சக்தி எனப்படும் வேல், அட்சய மாலை ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

துர்க்கை மான் வாகனமாக அமைந்த சிற்பம், எளிதிற் காணக்கிடைக்காத அரிய சிற்பமாகும். இத்தகைய அரியதொரு சிற்பம் இக்கோயிலில் இடம் பெற்றுள்ளது. இது முற்பட்ட சோழரின் கலைப்பாணியைச் சார்ந்தது. பிற்காலத்தில் இது இடம் மாறி அம்மன் கோயிலைப் புகலிடமாகக் கொண்டுள்ளது.

மேற்குத் திருச்சுற்று மாளிகையில் உள்ள மகாகணபதி உச்சிஷ்ட கணபதி முதலிய சிற்பங்கள் விசயநகர வேந்தர் காலத்தவை.

## முடிப்புரை

இதுகாறும் கூறிய செய்திகளால் எலவானூரின் தொன்மை வரலாற்றை அறியலாம். தென்னிந்திய வரலாற்றில் சோழர் காலம் முதல் ஆங்கிலேயர் காலம் வரை இதற்குத் தனி இடம் உண்டு.

---

**அடுத்த பக்கத்திலுள்ள படங்கள் :→**

நன்றி : French Institute of Indology – Pondicherry

1. மான் வாகனம் உடைய துர்க்கை
2. சுப்பிரமணியர் (சோழர் காலம்)

---





கி. பி. 16ஆம் நூற்றாண்டுவரை ஈடும் எடுப்புமின்றிச் சிறந்துவிளங்கிய சிவன்கோயில், இன்று தன் பெருமையும் மதிப்பும் குன்றிச் சீரழிந்து வருகிறது. முற்காலத்தில் எண்ணற்ற பல்வேறு வகையான மானியங்களைப் பெற்று, ஒளிமயமாகத் திகழ்ந்த இக்கோயில், இன்று கேட்பாரற்று இருண்டு கிடக்கிறது. தொல் பொருட்களும் தொன்மை யான சாசனங்களும் கவனிப்பாரற்றுப் பாழ்படுகின்றன. நெடிதுயர்ந்த இராசகோபுரம் கூனிக் குறுகிச் சிதைந்து குறைந்து தேய்கிறது.

செல்வச் செருக்கோடு தலைநிமிர்ந்து நின்ற இக்கோயில் இன்று தன் சீரிழந்து பேரிழந்து பொலிவிழந்து சிறப் பிழந்து பாழடைந்து, கண்டாரின் நெஞ்சமெலாம் கலங் கிடச் செய்கிறது.

விரைந்து திருப்பணி செய்தாக வேண்டிய பழம்பெரும் கோயில்களில் இது முதன்மையானது.

# எலவானாசூர்க் கல்வெட்டுகள்

## 1

*சிவன் கோயில் இரண்டாம் கோபுர வாயிலில் உள்ள கற்பலகை—முதலாம் இராசராச சோழனின் 7 ஆவது ஆண்டு (கி. பி. 992) — இதன் எழுத்துகள் தேய்ந்துவிட்டன. பலகையின் ஒரு பகுதி உடைந்து விட்டது. 176 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ கோராஜராஜ கேஸ
2 ரிவன்மற்கு யாண்டு 7 ஆவது இ
3 தன்கீழ் ஸ்ரீ உத்தம சோழ தே
4 வற்கு யாண்டு 15 ஆவது தே (வ)
5 தானம் இறையானரையூர்
6 ஸபையாற்கு.........
7 இராமதேவன் சித்தவடவனை
8 விக்கிரம சோழ மிலாடுடையார்
9 ......புரவாக கூட செ
10 ய்த செம்பியன்மாதேவி ஸது
11 ப்பேதி மங்கலமும் சித்தவடவந்

12 அகம்படனுன உத்தம சோழ

13 மலாடுடையான் செய்த அரண் கல

14 க்கி சதுர்வேதி மங்கலம் மிரண்டு

15 ........உடையார் செம்பி

16 யந்மாதேவியார்கும் திருமகனுர் உத்த

17 ம சோழ தேவன்...

## 2

*முதற் பிரகாரத்து வடக்குச் சுவர் — முதலாம் இராசராச சோழனின் 24 ஆவது ஆண்டு (கி. பி. 1009). 143 of 1906*

1 திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தன

2 க்கே யுரிமை பூண்டமை மனக்கொள்ள கான்தளுர்

3 சாலை கலமறுத்தருளி கங்கபாடியும் நுளம்பபாடியும் த

4 டிகைபாடியும் குடமலை ளுடும் கொல்லமும் கலிங்கமும் வண்டமர் பொழிலணி

5 வாகோபர் சிறுதுறை எண்டிசை புகழ்தரும் (ஈழ) மண்டலமும் திண்டிரல் வெ

6 ந்றி தண்டாற் கொண்ட தன்நெழில் வளர் ஊழியுள்ளெல்லாவ் யாண்டுந்

7 தொழுதகை விளங்கு யாண்டே செழிந்தரைத் தேசுகொள் ஸ்ரீகோவிராஜ ராஜ கேஸ

8 ரிபன்மரான ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு 24 ஆவது மலாடாந ஜனுத வள

9 நாட்டுப் பரனூர்க் கூற்றத்து பிரம்மதேயம்
தேவநாடசி இறையா நரையூர் காஸ்யபந் திருவரங்

10 கந் திருவரங்கனேந் இவ்வூருடைய மகாதேவர்க்கு
மூந்று ஸந்திக்கும் திருவமுது...ந மட்

11 டிக் குடுத்த நிலமாவது இவ்வூர் வடபிடாகை
குஞ்சிரமங்கலத்து ஸ்ரீகேரளாந்தகப்

12 பெரியேரி கீழ் நன்பார் நிலம் நானிவ்வூர் கௌசிகந்
சங்கர நாராயணன் பக்கல் நான் விலை

13 கொண்டுடைய தலைப்பாடகத்து ஒன்பதாங்கூற்றில்
வடக்கடையப் பாதிபத்துச்

14 செய்க்கும் கீழ்பாற்கெல்லை கண்ணாற்று வாய்க்காலுக்கு
மேற்குந் தெந்

15 பாற்கெல்லை காஸ்யபந் சோமாசி சேந்தனிலத்துக்கு
வடக்கும் மேல்பாற்

16 கெல்லை கண்ணாற்று வாய்க்காலுக்கு கிழக்கும்
வடபாற்கெல்லை ஏரிப்பெருங்

17 காலுக்குத் தெற்கும் இவ்விசைத்த பெருனான்
கெல்லையுளகப்பட்ட னிலம் பத்துச்செயு

18 ம் உண்ணிலமொழிவிந்றி முற்றும் இந்நிலத்து
அகப்பட்ட கிணறுகள் முற்றும் இதந் மேலக்

19 கண்ணாற்று இரண்டாடிக் கிணறும் ஏத்தமும்
ஏத்தப் பண்ணும் ஏத்தவர்க்காலும் இவை

20 யித்தனையும் பெருவாய்க்காலிந் வடக்கிலெந் கிணறு
முற்றும் ஆக இச்சுட்டப்பட்ட இத்தனையும்

21 மூன்று ஸந்திக்குந் திருவமுதுக்கு பொது நாநாழி
அரிசி திருவமுது செய்விக்க இப்பத்துச்

22 செய்யுங் கிணறுகள் முற்றுமிக் குஞ்சிரமங்கலத்து
வடசேரி இச்சங்கர நாராயணன் பக்கல் நா

23 ந் விலை கொண்டுடைய மனை முற்றும் :தோட்டமுற்றுங் கிணறு முற்றுங் கொண்டு ஊ

24 ருடையமஹாதேவர் அமரபுயங்கர தேவர்க்குத் திருவமுதுக்கு குடுத்தேந் திருவரங்

25 கன் திருவரங்கநேன் இவ்வூர் ஸபையோம் இப்பூமி ஸந்திரா

26 தித்தவர் இறைகரத்தூட்ட இத்திருவரங்கந் திருவரங்கந் ப

27 க்கல் ஐங்கழஞ்சு பொந் கொண்டு இந்நில முற்றும் இறையிறு

28 ப்போமாகப் பணித்துக் குடுத்தோம் ஸபையோம் இதுபன்மாஹேஸ்வர ரக்ஷை

29 நிசதம் தயிரமிது நாழி உரியும் நெய்யமுது பொது ஒரு பிடிக்கும் தயிரமிதுக்கும் இத்தி

30 ருவரங்கந் உ

# 3

*முதற்பிரகாரத்து வடக்குச் சுவர் — சோழகேரள தேவர் (இராசேந்திரன்I) —3 ஆவது ஆண்டு (கி. பி. 1016)*
***133*** of *1906*

1 ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ஸ்ரீ சோழ கேரள தேவர்க்கு யாண்டு 3 வது மலாடாந ஜனநாத வளநாட்டு பரனூர் கூற்

2 றத்து பிரம்மதேயம் இறையாநரையூர் ஸபையோம் இவ்வூர் ஊருடைய மஹாதேவர்க்கு மலாடு

3 டையார் பார்கவ கோத்திரத்து பராந்தகந் இயாதவ
வீமநாந உத்தம சோழ மலாடுடையார் வைத்த அக்

4 கார ஸத் திருவமுதுக்குப் படிவரிசி நாநாழியும்
தூப்பருப்பு நாநாழியும் பால் குறுணியும் சற்க

5 ரை பதின்பலமும் நெய்யமுது உழக்கரையும்
அடைக்காயமுது பாக்கு நாலும் இலையமுது
பத்தும் அத்

6 தசாமத் திருவமுதுக்கு அரிசி நாநாழியும் பொரிக்கறி
யமுதும் நெய்யமுது ஆழ(ா)க்கு அடைக்காயமுது

7 பாக்கு நாலும் இலையமுது பத்தும் ஆக இத்தனையிலும்
இப்பாலமுதுக்கும் நெய்யமுதுக்கும் உடையார்

8 இவ்வுத்தம சோழ மிலாடுடையார் வைத்த பசு
நூற்றிரண்டு
நீக்கி நின்ற திருவமுது

9 களுக்கு நிமந்தஞ் செய்த பூமி இவ்வூர் கீழ் பிடாகை
நல்லரைசூர்க் குளத்துக் கீழ் கழநியுள் நன்பார் நீ

10 ர் நிலம் ஆரிதந் திருவரங்கன் கேசவந் பக்கல் ஸபை
விலை கொண்டு நன்செயும் புன்செயும் ப

11 யந் மரமும் நத்தமும் இத்திருவரங்கந் கேசவநிது
இந்நல்லரைசூர் சுட்டித்து ஸபையோ

12 ம் கொண்டுடையது எப்பேர்ப்பட்டதும் இப்பூமி
சுட்டி மரமஞ்

13 சாடி கொள்ளாதிதாகவும் இத்திருவமுதுக்கு இவ்வுத்தம-
சோழ மலாடு

14 டையார் வைத்த காசு நூற்றிருபது இக்காசு
நூற்றிருபதும்
இப்பூமி

15 க்கு விளக்கு...கும் இறைக்கு...துக்குமாக ஸபையோம் கொண்டு இத்திருவரங்கன் கேசவந்

16 பக்கல்ஸபை விலை கொண்ட நன்சை நிலம் பொத்தகக் கோலால் குழி ஒந்பதிநாயிரத்தெண்

17 ணூற்றிருபத்தெட்டே யரைக்காற் குழியும் மற்றும் புஞ்செயும் பயந்மரமும் நத்தமுங் கிணறு

18 களும் உள்ளிட்டு இத்தனையும் இறைகரத்தூட்டாக இச்சுட்டப்பட்ட இத்தனையும் இந்த ஸ்ரீகோயிலில்பிரா

19 க்கடம் பொற்பூவும் பட்டமும் அரைக்கால் பொந்நூக்கு மேற்பட்டது தேவர் பண்டாரமாவதாகவும்

20 நீக்கி நின்ற பொந் நிமந்தந்தோ(ே)ட இயறுவதாகவும் இந்நிலத்தில் உழுத குடிகளை இ

21 ந் நிலஞ்சுட்டி எரப்பொந்தும் மரமஞ்சாடியுந் தியெகயும் ஆக இத்தனையும் ஸ்ரீகோயி

22 லுடையார்கள் கையுற்று இந்நிமந்தஞ் செய்வார்களாகவும் இப்பசு நூற்றிரண்டுங் கை

23 ய்யுற்ற மன்றுடிகள் பாலமுதும் நெய்யமுதும் அட்டக் கடவர்களாகவும் இப்பரிசு சந்திராதித்

24 தவார் இந்நிமந்தம் பந்மாஹேஸ்வர ரக்ஷை உ.

## 4

*முதற் பிரகாரத்து மேற்குச் சுவர்—முதலாம் இரா சேந்திர சோழனின் 5 ஆவது ஆண்டு. (கி.பி. 1017)— 141* of *1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ திருமன்நி வளர இருநில மடந்தையும் போர் செயப்

2 பாவையுஞ் சீர்தனி செல்வியும் தந்பெருந்தேவியராகிஇன்

3 புற நெடிதியலூழியுளிடைதுறை நாடுந் துடர்வனவேலி

4 படர்வனவாசியுஞ் சுள்ளிச்சூழ்மதிட்
கொள்ளிப்பாக்கையும்
நண்ணற்கருமுரண் மண்ணைக்

5 கடக்கமும் பொருகடலீழத் தரசர்த(ம்) முடியுமாங்கவர்
தேவியர் ஓங்கெழில் முடியும் முந்ன

6 வந் பக்கல் தெந்னவந் வைத்த சுந்தரமுடியும் இந்திர
ஞரமும் தெண்டிரை இழமண்டலமு

7 ழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையிற்சூடுங்
குலதனமாகிய பலர்புகழ் முடியு

8 ம் செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத் தொல்—
— பெருங்காவல் பல்பழந் தீவும் மாப்பெருந் த

9 ண்டாற் (கொண்ட) கோப்பர கேஸரிவந்மரான
ஸ்ரீராஜேந்திரசோழ தேவற்க்கு யாண்டு 5 வது
மலாடான

10 ஜநநாத வளநாட்டுப் பரனூற் கூற்றத்து பிரமதேயம்
இறையானரை)யூர் ஊர் உ

11 டைய மஹாதேவர் திருநந்தவனம் திருவரங்க(த்)தி(ன்)
கீழ்பார்கெல்லை சோமாசி பள்ளத்து மேற்கே நடு

12 நின்ற கல்லுக்கு மேற்குந் தெந்பார்கெல்லை ஸ்ரீகோயிலின்
தெந்நருகே கிழக்(கு) நோக்கிப் போந வழிக்கு
வடக்கும்

13 மேல்பார்க் கெல்லை ஸ்ரீகோயிலுக்கும் சுனைக்கும் கிழக்கும்
வடபார்க்கெல்லை தேவகேள்வர் களர் நின்

14 றும் செவ்வே கிழக்கு நோக்கி கொல்லை போக்கே உற்ற
கற்க்கு தெற்கும் இவ்விசைந்த பெருநான்

15 கெல்லையுள் அகப்பட்ட நிலமுண்ணில மொழிவிந்றி
முற்றும் இந்நிலத்து அகப்பட்ட கிணறு ஐ

16 ஞ்சும் ஆக இத்தனையும் திருநந்தவன மாவதாகவும்
திருநந்தவனந் திருத்துவார்க்கு நந்தவனப் புறமா

17 க இ(வ்)வூர் காஸியபந் திருவரங்கந் திருவரங்கநேன்
இந்த நிலம் இவூற் பெருங்குளத்து கீழ்கழநியுள் ந

18 ன்பார் நீர்நிலம் நந்தவனப் புறத்துக்கு கீழ்பாற்(ெ)கல்லை
வாய்க்காலுக்கு மேற்குந் தெந்பார் கெல்லை இ(வ்)

19 வூர் ப(ா)ர்கவந் மாசேநந் சேதநந் நிலத்துக்கு வடக்கும்
மேல்பார் கெல்லை கண்ணம்பூண்டி நிலத்

20 து(க்கு) கி(ழ)க்கும் வடபார்கெல்லை வாய்க்காலுக்கும்
ஆரிதந்
அண்ணுத்தடிகள் திருவரங்கந் நிலத்துக்கு தெற்கும்

21 இவ்விசைத்த பெருநாந்கெல்லையுள்ளகப்பட்ட நிலம்
தடியிரண்டிநால் உண்ணிலமொழிவிந்றி முற்று

22 ம் இந்நிலத்தின் கிழக்கே வட...திருப்பள்ளித்தாமந்
தொடுப்பானுக்கும் நிமந்

23 தம் நெல்லு நாநாழிக்கும் நிமந்தமாவதாகவும்
இத்திருநந்தவ—
—னத் திருத்தவும் திருப்பரிச் சட்

24 டமும் திருவரங்கன் இத்தேவர்க்கு அடியாளாக குடுத்த
வெள்ளாளந் தாய்...வெண்காடனுக்

25 கு இதந்மையில் இவனும் இவந் புத்திரபௌத்திரனும்
இத்திருநந்தவனம் செய்து

26 வறுவாநாகவும் இத்திருநந்தவனத்து தாந் வேண்டும்
கீழ்ப் பயிர் செய்து கொண்டு

27 இக்கீழ்ப் பயிரே நிமந்தமாக நித்தம் நாழி நெல்லின்
கறி அமுது ஸ்ரீகோயிலே கொ

28 ண்டு வந்து இடக்கட வாராகவும் இந்நிலங்களிலே
இறைக்குக் கூ..மாறு கொண்டு...(இ)

29 த்தாந(த்)தா(ரு)ம் வேண்டின க...நிலங்களிலே
தநிக்குடி...போககீழ்...இறை பொந்...

30 டைய...நிலங்கள் சுட்டின இந்(நிலமு)ம் மர

31 மஞ்சாடியும் கொள்ளப் பெறுதோமாகவும் இப்பரிசு

32 இந்நிலங்கள் இறைகரத்தூட்டக் கட வோமாகப்
பணித்து

33 க் குடுத்தோம் ஸபையோம் இது பன்மஹேஸ்வர ரக்ஷை

# 5

*முதற் பிரகாரத்தின் தெற்குச் சுவர் — முதலாம் இராசேந்திர சோழனின் **13** ஆவது ஆண்டு (கி பி. **1025**)— **135** of **1906***

1 ஸ்வஸ்திஸ்ரீ திருமந்நி வளர இருநில மடந்தையும்...
உடையார் ஸ்ரீராஜே

2 ந்தரசோழ தேவற்குயாண்டு 13 ஆவதுராஜராஜப்பாண்டி
நாட்டுக் கீழ்ச்செம்பி நாட்டு வந்நிகுடி

3 உடையார் ஸ்ரீராஜேந்திர தேவர் அதிகாரிகள்
கிழவந்சங்க(ர)
நாரா(ய)ந வாநவந் மூவேந்தவேளார் மிலா

4 டாந ஜெநநாத வளநாட்டு பரநூர்க் கூற்றத்து
பிரம்மதேயம்
தேவநாடளி இறையாநரையூர் ஊருடைய

5 பரமேஸ்வரற்குக் குடுத்த காசு 30 இக்காசு முப்பதும்
தேவர்பண்டாரத்தே கொண்டு இறையா

6 நரையூர் ஸபையோம் யாண்டு 13 ஆவது கந்தி நாயறு
முதல் இக்காசு முப்பதுக்கு ஓராட்

7 டைக்கு ஆறுகாசு ஆக ஆட்டாண்டுதோறும் பலிசை
யாவதாகவும் இப்பலிசை பொலிவதா

8 கவும் இப்பலிசையால் வந்த காசு ஓராட்டைக்
காசு ஆருகப்
பதிற்ருண்டு போநபிந் பலிசையால் வந்த

9 காசு அறுபது நிரம்பிநவாறே அறுபது காசாலும்
இம்(ம)கா தேவர் ஏரிவலஞ் செய்யும் அலிந்திரமு

10 ம் இரண்டு பக்க சாலைகளும் மண்டபமும் பெரிய
மண்டபமும்
உள்ளும் புறம்பும் இடந்த

11 இடம் சாந்திட வெள்ளை சாந்திட வெள்மை பூசித்
திருக்கோயிலுக்கு சந்திராதித்தவல்...

12 ம் இலாதவண்ணம் பதிற்ருண்டுதோறும் பலிசைக்காசால்
சந்திராதித்தவல் புதுக்கு (வோ)ம் இ

13 வ்வூர் ஸபையோம் இது பன்மாகேஸ்வர ரக்ஷை.

## 6

*முதற்பிரகாரத்து மேற்குச் சுவர் — இராசமகேந்திரனின் 2 ஆவது ஆண்டு (கி பி.) 473 of 1937-38.*

1 ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் விர மகள் விருநில மடந்தையை
ஒரு குடை நிழற்கீழினிதினிறு

2 புணர்ந்து தருமநெறிநிற்பமனு நெறிநடாத்திகோராஜகே

3 ஸரிபந்மரான ஸ்ரீராஜமகேந்திர தேவற்கு
யாண்டு 2 ஆவது மல

4 நாடா ஜனநாத வளநாட்டு பரனூர்க் கூற்றத்து பிரம்ம-
—தேயம் இறையானரையூரான ஸ்ரீ

5 சோழகேரள சதுப்பெதி மங்கலத்து ஊருடைய
மஹாதேவற்கு கரம்பியங்கிழாந் பட்டாலகந்

6 சிந்தாமணியானநரேந்திரசிகாமணிமூவேந்தவேளாநேந்
நிலநிவந்தஞ் செய்தபடி உள்ளூர் சிறு

7 கழநியில் காஸ்யபந்சதாசிவந் திருவெண் காட்(ட)டிகள்
பட்டனும் ஆரிதந்திவாகரன் தாழியுமாக இவ்விரு

8 வர் பக்கலும் திருநந்தவனமாக விலைகொண்ட
நிலங்களு(க்)கு
கீழ்பார்கெல்லை இத்திருநந்தவனப்புறமாக விலை

9 கொண்ட மாறிபெருஞ் செய்யும் இதன் தெற்கு
பத்தினி செய்
உள்ளிட இ(த்)தடி பல நிலத்துக்கு மேக்கும்

10 தெந்பார்கெல்லை ஸ்ரீபதிரி ஆழ்வார் திருநந்தவனத்துக்கு
வடக்கும் மேல்பார்க்கெல்லை பார்கவன் மா

11 சேனன் அண்ணுத்தடிகள் (நிலத்துக்கு) கிழக்கும்
வடபாற்கெல்லை பொது நிலத்துக்கு

12 ம் இவ்வூருடைய மஹாதேவர் நிலத்துக்கும்
தெற்கும் ஆக
இவ்விசைத்த பெருநான்கெல்லை

13 யுளகப்பட்ட நிலமுண்ணிலமொழிவின்றி முற்றுமிதன்
கிணறு இரண்டும் ஆக இன்னிலத்துள் சிந்தா

14 மணியென்னும் பேரால் திருநன்தவனமாகவும் இதன்
கிழக்கு இத்திருநன்தவன செ

15 ய்வார்க்கும் திருப்பள்ளித்தாமம் பறிப்பார்க்கும்
திருநன்தவனம் புறமாக...

16 ஞ்சோலை கெ...டனுந் தம்பிமாரும் பக்கல் விலைகொண்ட
மாறிபெருஞ்செயுஞ் தன்கில் கிணறும் இ

17 தற்கு தெற்கு இவ்வூர் ஸபை பக்கல் விலை கொண்ட
பத்தினிச் செயுள்ளிட்டு அடி மூன்று நிலமுற்று

18 ம் ஆக இன்னிலங்களுக்கு கீழ்பார்கெல்லை ஏரி வாய்க்
காலுக்கு மேற்க்கும் தென்பாக்கெல்லை சீபத

19 ரிஆழ்வார் நிலத்துக்கும் ஆரிதன் திருவரங்கன்
சங்கர நாராயண(ன்) நிலத்துக்கு வடக்கும் மேல்

20 பார்க்கெல்லை இத்திருநன் தவனமாக கொண்ட
நிலங்களுக்கு
கிழக்கும் வடபார்கெல்லை இவ்வூரு

21 டையமஹாதேவர் நிலத்துக்கு தெற்குமாக இவ்விசைத்த
பெருநான் கெல்லையுளகப்பட்

22 டதடிநாலு(மு)ண்ணில மொழிவின்றி முற்றுமிதன்கிணறு
முற்றுந் திருநன்தவன

23 புறமாகவுமித் திருநன்தவனமான தோட்ட நிலங்களில்
பூமர(ம்) வைத்த நில(ம்)

24 நீக்கி நின்ற நிலந் தேவர்கன்மிகளித் திருநன்தவனஞ்
செய்வாரை கொ

25 ண்டு பயிர் செய்விக்கக் கடவதாகவும் செய்த பயி

26 ரில் ஸ்வாமி போகத்தால் வந்த ஸ்வாமி ஸ்ரீபண்டாரத்தி

27 லே தேவர்கன்மிகள் ஒடுக்குவிக்கக் கடவதாகவும்

28 ஒடுக்கின போ(க)த்திலே இ(த்)தேவர்க்கு நரேந்திர—
சிகாமணி மூவேந்த வேளாருள்ளா

29 லைத் திருமுற்றத்துக் கீழருகே திருவோலக்க மண்டபமாக
எடுப்பிடித்த முடிகொண்ட

30 சோழந் திருமண்டபத்தில் பங்குநித் திருனாள் திருவுக...
வத்து ஆடியருளுவார் காமப்ர

31 தக்ணம் பண்ணி எழுந்தருளுமன்று சிறுகாலை இத்திரு
மண்டபத்தே யெழுந்

32 தருளியிருந்து அமுது செய்தருளக் கலவரிசியிற்
குறையாமை அரிசியுள்ளி

33 ட்டு அழிவு வேண்டும்...மன்று செய்தருளுந்
தாநத்துக்கும் கட்ட வஞ்ச

34 நத்தின் மேலழுந்தருளுமிடத்து திருச்சாந்தாடலுக்கு
சாந்து கொள்ள உட்

35 பட வேண்டும் மும் ஆக...இ(த்)தேவகன்மிகளே
செய்விக்கக் கடவதாகவும் இவ்வழிவு நீக்கி
னின்ற...இம்முடி கொண்ட சோழந் திரும

36 ண்டபம் அழிவு சோர (?) வேண்டுங்காலத்து
தேவகன்மிகளே அழிவு சோரக் கடவ

37 தாகவும் இத்திருமண்டபத்து இரவை ஸந்தியடங்குமளவு
இத்திருவிளக்கு எரிப்பிக்

38 கக் கடவதாகவும்ஆக இப்பரிசு சிந்தாமணி யென்ற
பேரால்
நரேந்திரசிகாமணி மூவே

39 ந்தவேளான் விலைகொண்ட ப்ரமாணம் தேவர்
ஸ்ரீபண்டாரத்தே

40 தேவகன்மிகள் கண்காணி ஓடும் ஒடுக்கினமையில்
இப்பங்குனி மாதஞ் செய்யுமி

41 டத்து...[எஞ்சிய பகுதி சிதைந்து விட்டது]

## 7

*முதற்பிரகாரத்துத் தெற்குச் சுவர் — அரசன் ? — 11 ஆம் நூற்றாண்டு எழுத்துகள் — இக்கல்வெட்டின் தொடக்கப்பகுதி படிக்கட்டால் மறைந்துள்ளது.*

1 றறியும் மற்றும் உடும்போடி ஆமைதவழ்ந்த
உண்ணிலம்

2 ஒழிவின்றி முற்றும் இவ்வூர் கட்டிய உழவர் முற்றும் தேவர்க

3 ன்மிகளோம் இசைந்த விலைப்பொருள் தேவர் பண்டாரத்து

4 ஸபை பேரால் கடவ கடமைகளுக்காக கணக்ரயமாக விற்றுக் குடுத்தோம் ஸபை

5 யோம் இச்சுட்டப்பட்ட அரும்புலிபாடி நன்செய்யும் கிணறுகளும் புந்செய்யும் பயந்

6 மரங்களும் நத்தமும் உழவரும் மற்றும் உடும்போடி ஆமை தவழ்ந்த தெப்பேர்ப்பட்ட

7 டுதும் ஊருடைய மஹாதேவர் பண்டாரத்து ஸபை கடவ கடமைக்காக விற்றுக் குடுத்தோ

8 ம் ஸபையோம் ஊருடைய மகாதேவர்க்கு இவ்விரும் புலிபாடி தலச்சமாடாக வள

9 ...மகாதேவர்க்கு தநிப்போகிழ் குடிகள் கடவ தேவர் கடமை உள்ளடங்கல் விற்றுக் குடு

10 த்தோம் ஸபையோம் ஊருடைய மகாதேவர்க்கு இந்நிலஞ் சுட்டி தேவர்கன்மிகள் பொ

11 ......ங்திம பொருள் செல வோலை வேறு காட்டக் கடாநறி இப்பரிசு ஒட்டிவிற்று விலையா

12 (வண) ம் ஊருடைய மகாதேவர்க்கு ஸபையோம் அரும்புலிபாடி ஏரிநில

13 ய்கெடநீர் கோக்கப் பெருதுதாகவும் இவ்வரும்புலி
பாடியாந நர

14 ...ஸபை விற்றுக் குடுத்து தேவரு(டைய) தாய்க்
கிடந்த நெ

15 ...றையும் வெட்டி இவ்(வத்)தனையும் வாசலில்
போந்த குடி

16 ...யிலுந் தேவர் மாத்தால் பதக்கு நெ(ல்)லாக உடைய

17 ...நாங்களே பொத்தகத்தில் கிடந்த இ

18 ...இறுத்துக் குடுப்பதாகவும்

19 ...ட்டுதும் ஸபை

20 யோம். தக்கு நெல்லளக்

21 ...தவநத்ததுக்காக இந்நெடுமாநூரும் அரும்புலிப்பாடி

22 யாந நரசிங்கமங்கலமும் நந்செய் புந்செய் இறை

23 எச்சோறு இறுத்துக் குடுப்பதாகவும் இப்பரிசு இந்நெடு

24 மானூரும் அரும்புலிப்பாடியாந ந(ர)சி(ங்)கமங்கலம்
[இக்கல்வெட்டு முற்றுப் பெறவில்லை]

# 8

*முதற்பிரகாரத்து வடக்குச் சுவர் — முதற் குலோத்துங்க சோழனின் 2 வது ஆண்டு (கி.பி. 107?)- 145 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு

2 2 ஆவது உடையார் ஊர்பாகங் கொண்டருளிய
நாயனார் கோயிலில்
தேவரடியாரில் துக்கை நிரேற்றுளா

3 நவிக்கிரம சோழமாணிக்கத்தேந் இந்நாயநாற்கு
தைமாஸம்
முதல் நித்தமொரு திருவிளக்கு இரவை ஸந்தியி

4 ல்மலேமேலே எரியக்கடவுதாக இந்நா (யநா)ர் கோயில்
ஸ்தாநபதி சிவப்ராம்ணந் கௌசிகந் வெ

5 ண் காட்டு தேவனை வந்தானை குலோத்துங்க சோழ
பட்டனுக்கு குடுத்த காசு 15 இக்காசு பதி

6 நஞ்சுக்கும் இம்மாஸ முதல் திங்கள் காலேயரைக்
காற் காசு
பலிசை பொலிவதாக (இப்)பொ

7 லிசைக் காசுக்கு இத்திருவிளக்கெரிவதாக இக்கோயிலி
லறுபது வட்டத்து வெண் கா(ட்)டுதேவ

8 நாள வந்தானை குலோத்துங்கசோழபட்டந் தந்நுடைய
காணி நாளே தலேச்

9 செய் மாடாக இரவை திருவிளக்கொந்றும்
ஸந்திராதித்தவற் செல்லக்க

10 டவதாக கல்வெட்டிவித்தேந் துக்கை நிரேற்(ரு)ளாந
விக்கிரமசோழ மாணிக்கத்

11 தேந் இது பந்ம ஹேஸ்வர ரக்ஷை.

# 9

*முதற்பிரகாரத்து வடக்குச் சுவர்—முதற் குலோத்துங்க சோழனின் 2 ஆவது ஆண்டு (கி.பி. 1072)—151* of *1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு
2ஆவது

2 உடையார் ஊர்பாகங்கொண்டருளிய நாயநாற்கு
இந்கண்ணுடையா

3 ந்தேவர் சண்டந் திருவேங்கடத்திநகமுடையாள்
காரைக்காலம்

4 மையேந் இந்நாயநாற்கு தைம்மாஸ முதல் நித்தமொரு
திருவி

5 ளக்கு இரவை ஸந்தியில் திருமஙேமேலே எரியக்கடவதாக
இந் நாயநார் கோயில் ஸ்தாநபதி சிவப்பிராமணந்
கௌசிகந் ஊர்பாகங்கொண்டானூர் பாகங்
கொண்டா

6 ஞந வாது செய்வான் பட்டநுக்கு குடுத்த காசு 15
இக்காசு
பதிஙேஞ்சுக்கு இம்மாஸ முதல் திங்கட் காலேயரைக்
காற்காசு பலிசை பொலிவதாகவும் இப்பொலிசைக்

7 காசுக்கு இத்திருவிளக்கெரிவதாக கோயிலிலறுபது
வட்டத்து
ஊர்பாகங்கொண்டாநான வாது செய்வான்பட்டந்
தந்நுடைய காணிநாளே தலைச் செய்ம்மாடாக
இரவை
ஸந்தி

8 த் திருவிளக்கொந்றும் சந்திராதித்தவற் வைக்கக்
கடவதாக
கல்வெட்டுவித்தேந் இந்கண்ணுடையாந் தேவர்
கண்டந்
திருவேங்கடத்திநகமுடை யாள் காரைக்
காலம்மையே

9 ந் இது பந்மாஹேஸ்வர ரக்ஷை உ,

# 10

*முதற்பிரகாரத்து வடக்குச் சுவர்—முதற்குலோத்துங்க சோழனின் 2 ஆவது ஆண்டு (கி. பி. 1072).*

1 ஸ்வஸ்திஸ்ரீ கொலோத்துங்க சோழ தேவற்

2 குயாண்டு 2 ஆவது வானகந் சோக நிடங்

3 கொண்டாநுக்கு நன்ருக இவந் மகன் இடங் கொ

4 ண்டான் வையம்புக்காநேன் உடையார் ஊர்பா

5 கங்கொண்டருளிய நாயநார்கு நாடோறும் இரவை

6 ஸந்திக்கு எரிவுதாக வைத்த திருவிளக்கு ஒந்று

7 இதுக்கு இக்கோயிலில் ஸ்தானபதி ஶிவப்பிரா

8 மணன் கவுசிகந்வையிர மேகந் ம(க)ன் ஞயகன்

9 பொற்கோ(யி) ற்பட்டந் பக்கற் குடுத்த காசு 16க்கும் வ

10 ந்தபொலிசைக்கு இந்த ஸந்தி விளக்கொந்று எரிக்ககட

11 வதாகவும் இக்கோயிலிலிவநறுபது வட்டத்து இ

12 வந் காணி நாளே தலைச்செய்மாடாவுக் கல்வெட்டுவி

13 த் தேந் இடந்கொண்டான் அவையம்புக்கா

14 னேன் இது ஸந்திராதித்தவற் எரியக்க

15 டவது இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

# 11

*முதற்பிரகாரத்து வடக்குச் சுவர்—முதற்குலோத்துங்க சோழன் 2 ஆவது ஆண்டு (கி. பி. 1072)* ***147 of 1906***

1 ஸ்வஸ்திஸ்ரீ இராஜகேசரிவந்மரானச் சக்கரவத்திகள்
ஸ்ரீகுலோத்துங்க தேவற்கு யாண்டு 2 ஆவு

2 துஉய்யக்கொண்டாந் தெரிந்த திருமைஞ்சனத்தார்
வேளத்துக் கைக்கோளான் கூத்தன் வீமநாந

3 ஜயங்கொண்ட சோழமாராயன் ஊருடை பரமேஸ்வரர்
கோயிலில் உச்சியம் போகை ஸந்தி(யி)ல் வந்து கு

4 ம்பிட்ட அபிராமி மஹேஸ்சற்கே சட்டிச் சோற்றுக்கு
அரிசி இரு நாழிக்கும் பொரிகறி ஒன்றுக்கும்
இது ஒ(ன்)

5 ருக்குச் சட்டி ஒன்றுக்கும் வைச்ச நிலம் நல்லரைசூர் ஏரி
உள்ச்செய்யும் இதந் மேலைச் செய்யும் உ

6 ள்ளிட இத்தடி பலநில முக்காலுங் கைக்கொண்டு
நிமந்தஞ் செய்யக் கடவோம் இன்த தாந

7 த்துச் சிவப்பிராமணரோம் இது பந்மாஹேஸ்வர ரக்ஷை.

## 12

*முதற்பிரகாரத்து வடக்குச்சுவர் — முதற்குலோத்துங்க சோழனின் 10 ஆவது ஆண்டு (கி.பி. 1080)—478* of *1937—38.*

1 ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு
யாண்டு 10 ஆவது
இறையாநரையூராந ஸ்ரீசோழ கேரளச்சதுப்பேதி
மங்கலத்து உடையார்...

2 இவ்வாட்டை ஆடிமுதல் சந்திராதித்தவற் பலிசையாலே
செலுத்துவதாக பெண்ணுகடத்து வாணியன்
குடன்தை வாணிய(ன்) புஞ்சிநிரேற்றுன் வைத்த
ஸந்தி விளக்கு 1க்கு குடுத்த

3 காசு 120 இக்காசு நூற்றிருபதும் கைக்கொண்டு பலிசை
...நார் கோயிலில்... [இக்கல்வெட்டின் எஞ்சிய
பகுதி சிதைந்து விட்டது.]

## 13

*முதற்பிரகாரத்துக் கிழக்குச் சுவர்—முதற்குலோத் துங்க சோழனின் 11 ஆவது ஆண்டு (கி. பி. 1081) –132 of 1906.*

1 ஸ்வஸ்ஸ்ரீதிரிபுவனசக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு 11 வது இ

2 றையாநரையூரான ஸ்ரீசோழ கேரளச் சதுர்வேதி மங்கலத்து
உடையார் ஊர்பாகங்கொ

3 ண்டருளிய நாயனுற்கு ஆரிதன்சங்கர நாராயணன்... பட்டன்
ஆந...மாசறுசோதி

4 சானி பக்கல் சந்திராதித்தவற் செல்ல (எ)ரிக்கும் விளக்கு 1க்கு ஸ்தாநபதி ஸிவப்பிராமணரில் ரிஷப

5 தேவன் (ஆன) ஆட்கொண்ட தேவன் கொண்ட காசு 60 இக்காசு
அறுபதும் கைக்கொண்டு ஸந்திராதித்தவ

6 ற்இச்சன்தி விளக்கு எரிக்கக்கடவேன் இது பன்மாகேஸ்வர ரகைஷ.

## 14

*முதற்பிரகாரத்து வடக்குச் சுவர் [முதற் குலோத் துங்க சோழனின் 12 ஆவது ஆண்டு (கி.பி. 1082)—153 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ கோராஜ கேசரிபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 12 வது வீரராஜேந்திரபுரத்துத் தி

2 ருத்தாந்தோந்றி மஹாதேவர் அடியாள் இராஜசுந்தரி ஊருடைய
பரமேஸ்வரர்க்கு சிறுகாலை ஸந்திக்கும் நந்தா

3 போனகம் அமுது செய்தருள அரிசி நாநாழிக்கும் பொரிக்கறி
யமுதுக்கும் நெய்யமுதுந் தயிரமுதும் அடைக்

4 காயமிதும் வைத்த நிலம் நல்லரைசூர்ப் படைப்பைச் செய்யும்
இதந் வடக்கில் தடி முற்றும் கிணறு

5 ம்தெற்கில் தடியும் வடக்கிட்டுத் தடிபல நிலமுற்றும் கிணறு
முற்றும் இவள் தந்த நெல்லு நாற்பத்

6 தைங்கலமும் இந்நிலமுற்றும் இந்நெல்லுங் கைக்கொண்டு
இந்நிமந்தஞ் செய்யக் கடவோம் இத்தா ன)

7 த்துச் சிவப்பிராமணரோம் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

# 15

*இரண்டாம் கோபுரத்து இடப்பக்கச்சுவர் — முதற் குலோத்துங்க சோழனின் 35 ஆவது ஆண்டு (கி. பி. 1105)*
*167* of *1906*

1 ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்க ஜெயமாது விரும்ப னிலமகள்
நிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி

மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனைமந்னவரிய
லுற்றிழிதரத் திக்கனைத்துந்தந்சக்கர நடாத்திவீரஸி

2 ம்ஹாஸநத்து அவநிமுழுதுடையாளொடும்
வீற்றிருந்தருளிய
கோவிராஜ கேசரிபந்மரான திரிபுவனச்சக்கர
வர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்க்கு யாண்டு 35 ஆவது
நாள் 145 நால் மிலாடான ஜனநாத வளநாட்டுப்
பரலூர்க் (பரனூர்) கூற்றத்து இறைவாநரையூரா

3 னஸ்ரீசோழ கேரளச் சதுர்வேதி மங்கலத்து ஊர்பாகங்
கொண்டருளின மஹாதேவற்குவானகோவரையடன்)
கைமாறி யாண்டு 25 ஆவது முதல் அந்தராயம்
உட்ப்படத்
தேவதான இறையிலிஇட்ட(இன்)னுட்டுக்கிழாற்றுக்
கூற்றத்து... நிலத்தும் பு

4 ந்செய் னிலத்தும் யாண்டு 35 ஆவது முதல்மலையவிச்சாதி
ரிநல்லூரென்னும் பியராய் வேறு பிரித்துத்
தேவதான இறையிலி இடுநிலம் இருபதிற்றுவேலிக்கு
நீர்நிலம் வேலி 1க்கு நெல் 70 கலமாகவும் புந்செய்)
வேலி 1க்கு நெல் 30 கலமாகவும் யாண்டு 35 இது மு

5 தல் இறைகட்டத் திருவாய் மொழிந்தருளினநெல் $1\frac{3}{4}$கலம்
(?) இத்தேவற்க்கு வேண்டும் நிமந்தங்களுக்கு இறுப்ப
தாக அந்தராயம் உட்ப்பட தேவதான இறையிலி
இட்டமைக்கு இவை நாகங்கொற்றன் எழுத்துஇவை
புரவரி திணைக்களமுகவெட்டி பிடவூர் வேளான்
எழுத்து இவை

6 புரவரிதிணைக்களநாயகம் வெள்ளூருடையான் எழுத்து
இவை
வேயூர் கிழவன் எழுத்து இவை புரவரிதிணைக்களத்து

முகவெட்டி தேவங்குடையாந் எழுத்து இவை
கட்டுவாய்க்குடையாந் எழுத்து ஆலூருடையான்
எழுத்து.

# 16

*இரண்டாம் கோபுரத்து வலப்பக்கச் சுவர் — முதற் குலோத்துங்க சோழனின் 48 ஆவது ஆண்டு (கி.பி 1118) —164* of *1906*.

1 ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமக

2 ள்னிலவ மலர்மகள் புணர உரிமையிற் (சிற)ந்த மணிமுடி
சூடி மீநவர் நி

3 லைகெட வில்லவர் குலைதர ஏனை மன்நவரி
ரியலுற்(ற)ழிதரத்தி

4 க்கனைத்துந்தன் சக்கரநடாத்தி வீர ஸிம் ஹாசநத்து உல

5 குடையாளோடும் வீற்றிருந்தரு(ளி)ய கோராஜ கேஸரி
பன்மரான

6 திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ
தேவர்க்கு யா

7 ண்டு 48ஆவது மலாடான ஜனநாத வளநாட்டுப்பரலூர்க்

8 கூற்றத்து பிரம்மதேயம் இறையானரையூரான ஸ்ரீசோழ
கேரளச்

சருப்பேதிமங்கலத்து ஸபையோம் நில விலையாவனம்

9 ஊருடைய பரமேஸ்வரற்க்கு ஜயங்கொண்ட சோழ
மண்டலத்து

மணவிற் கோட்டத்து மணவில் அரும்பக்கிழான்
அரை

10 யன் பொன்நம்பலக் கூத்தனை தொண்டைமா நார்
எழுந்தருளு
வித்த திருப்பள்ளி அறை நம்பிராட்டியார்க்கு
நாங்கள் விற்றுக் கு

11 டுத்த நிலமாவது இவ்வூர் ஊர்க்கணக்கந் இளமை
வேங்கடமான
பண்டிதப்பிரியனும் இளமைக் கருமாணிக்கமான
பட்டப்பிரிய

12 னும் இவ்விருவரும் இதன்கீழ் யாண்டு நாற்பத்தாருவது
ஊர்க்கணக்கெழுதிக் கடமைப்பட்டுக் கடமை
போக்கருதே
குடி ஓடி

13 ப்போனமையில் இக்கடமை எங்களுக்கு இறுக்கவேண்டின
மையில் இக்கடமைக்குச் செலவாக இவ்வூர் மேல்
பிடாகை செம்பியன்மா

14 தேவியில் ஸ்ரீவானவன் மாதேவிப் பேரேரி கீழ் நன்பார்
நீர் நிலம்
உத்தம சோழ வதிக்குக் கிழக்கு முதற்கண்ணாற்றுத்

15 தடி இரண்டு நிலம் காலே அரைமாவும் இதில் கிணறும்
இவ்வூர்
நத்தத்து இவர்கள் கணக்கக்காணி மனையில் எடுத்து
நின்

16 ற எடுப்பும் இதாமும் அகப்பட வீதிவிடங்கன் கோலால்
இருபது குழியும் ஆக இத்தனையும் விற்றுக்
குடுக்கவென்று
மஹாநி

17 யோகம் உண்டானமையில் இந்நிலமும் இக்கிணறும்
இம்மனையும்
விற்றுக் குடுத்துக் கொள்வதாக எம்மிலிசைந்து
விலைப் பொ

18 ருள் காசு பதின்மூன்றே நாலுமாமுக்காணியும் காசு கல்லால்
ஒக்கும் பொந் முக்கழஞ்சும் ஆகஇத்தனையும் கொண்டோம்

19 கொண்ட பரிசாவது முன்பு இவர்கள் இவ்வூர் மத்தியஸ்த ந்)
நாராயணபர மேஸ்வரனுக்காக ஊருடை பரமேஸ் வரருக்கு
ஆண்டுதோறும் திருக்கார்

20 த்திகையிலளந்து வருகிற ஏழு(?)தூணி நாறுழியால்கடவ
பொன் முக்கழஞ்சும் இத்தொண்டைமானுர்
இப்பிராட்டியார்க்குத் திருவாராதனை

21 க்கும் திநவமுதுபடிக்கும் நிலங்கொள்வா(ரா)க காட்டின
காசு பதின்மூன்றே நாலுமாமுக்காணியும் ஆக
இப்போகத்துக்கும் இக்காசுக்கும் இ

22 ன்நிலம் இக்கிணறும் இம்மனையும் விற்று விலையாவணம் செய்து
குடுத்தோம் ஸபையோம் ஸந்திராதித்தவல்
பன்மாஹேஸ்வர ரக்ஷை.

# 17

*இரண்டாம் கோபுரத்து இடப்பக்கச் சுவர்—விக்கிரமசோழனின் 4 ஆவது ஆண்டு (கி.பி. 1122)*
*168* of *1906.*

1 பூமாது புணர புவிமாது வளர நாமாது விளங்க ஜய
2 மாது விரும்ப தன்திருபாதமலர் மன்னவர்சூட மன்நிய
உரிமையால் மணிமுடிசூடிச் செங்கோல் சென்று
திசைதொறுமளப்ப வெங்கலி நீக்கி மெய்யறந் தழைப்ப

கலிங்க(ம்) இரியக் கடல்மலை நடாத்திவலங்கெளாழி
வரையூழி நாட(ா)த்தி இருசுடரளவும் ஒருகுடை
நிழற்ற முக்கோக்கிழாநடிகளொடு

3 ம்வீற்றிருந்தருளிய கோப்பரகேசரிபந்மரான
திரிபுவனச்சக்கர
வர்த்திகள் ஸ்ரீவிக்கிரம சோழ தேவற்க்கு யாண்டு 4
ஆவது நாள் 330 நால் முடிகொண்ட சோழபுரத்துக்
கோயிலின் உள்ளாலை ஆட்டத்து வெளிமேலை
மண்டபம்
ராஜேந்திர சோழநில் சேதராஜநில் எழுந்தருளி
இருந்து செய்யத் திருவா

4 ய்மொழிந்தருளிநபடி மலாடான ஐநநாத வளநாட்டுப்
பரலூற்
கூற்றத்து பிரம்மதேயம் இறையாநரையூராந சோழ
கேரளச் சருப்பேதி மங்கலத்து ஊர்பாகங்
கொண்டருளின
மகாதேவர்க்குக் கிழாற்றுக்கூற்றத்துப்பருந்தல்வேறு
பிரித்து முதலாந இறையிலி இட்டமா

5 டைபேசாதே நீர்நிலமாகப் பேசி நீர் நிலத்துக்கு
வேலி 1க்கு
நெல் 70 கலமாகவும் புந்செய் நிலம் வேலிக்கு நெல்
30கலமாகவும் இறைகட்டி இட்டதென்று இவ்வூர்க்கு
நிலமளவில்லை யென்றும் இப்படி தவிர இந்னிலம்
உட்ப்படப் பருந்தல் ஊரடைய தேவதான இறையி

6 லியாய் மலையவிச்சாதிரி நல்லூரெந்றும் பியராகப்
பெறவேண்டு
மென்று வாணகோவரையர் நமக்குச்
சொந்னமையிலக்
கிழாற்றுக் கூற்றத்தில் பருந்தலில் முடை தேவதாந

இறையிலியாய் மலையவிச்ச ¬ திரிநல்லூரென்னும்
பியராலே
பிரிந்த நீர்நிலம் பதிற்று

7 வேலியும் புன்செய் னிலம் பதிற்று வேலியும் ஆக நிலம்
இருபதிற்று வேலிக்கு நீர்நிலத்து வேலிக்கு நெல் 70
கலம் ஆகவும் புன்செய் னிலம் வேலி 1க்கு நெல்
30 கலமாகவும் இறை கட்டிநபடி தவிர்த்துஇந்நிலம்
உட்பட இவ்வூர் மாடை 161 தவிர்த்து மலை

8 யவிச்சாதிரி நல்லூரெந்றும் பியரான இவ்வூர்க்குக்
கீழ்பாற்கெல்லை சிறுகத்தூர் எல்லைக்கும்
திருப்பே ெ)ரல்லைக்கும்மேற்க்கும்தென்பாற்க்கெல்லை
மேற்படியூரெல்லைக்கும் புதுக்கழனி எல்லைக்கும்
கொட்டையூரெல்லைக்கு வடக்கும் மேல்பாற்க்

9 கெல்லைமேற்படியூரெல்லைக்கும் சிறுறுவலூரெல்லைக்கும்
புத்தூர்பாடி எல்லைக்கும் கிழக்கும் வடபாற்க்கெல்லை
னெடுமானூரெல்லைக்கும் புத்தமங்கலத்தெல்லைக்கு
தெற்கும் இவ்விசைத்த நான்கெல்லையுளகப்பட்ட
னில முற்றும் இதேவர்க்கு வே

10 ண்டும் நிமந்தங்களுக்கு இறுப்பதாகயாண்டு 4வது முதல்
அந்தராயம் உட்பட தேவதாந இறையிலி இட்டுக்
குடுப்பது இப்படி திருவாய் மொழிந்தருளிநமைக்கு
இவை பாவை நாட்டு வேனான் எழுத்து யாண்டு
4 (நா)ள் 342 நால் தேவதாந இறையிலி
நிலை நின்றமைக்கு இட்டபடிக்கு மிலாடாந
ஜகநாத வளநாட்

11 டுப்பரலூர்க் கூற்றத்து பிரம்ம தேயம்
இறையானரையூரான
சோழகேரளச் சருப்பேதிமங்கலத்து ஊர்பாகங்
கொண்டருளின தேவர்க்குக் கிழாற்றுக்
கூற்றத்துப் பருந்தலில் முந்பு தேவதாந

இறையிலியாய் வேறுபிரிந்த மலையவிச்சாதிரிநல்லூர் னீர்நிலம் 10 வேலியும் பு

12 ந்செய் நிலம் 10 வேலியும் ஆக நிலம் 20 வேலிக்கு நீர்நிலம் வேலி 1க்கு நெல் 70 கலமும் புஞ்செய் வேலி 1க்கு நெல் 30 கலம் ஆகவும் இறை கட்டினபடி தவிர்த்துஇன்நிலம் உட்படஇதேவற்க்கு வேண்டு நிமந்தங்களுக்கு இறுப்பதாக அந்தராயமும் பாட்டமும் உட்ப்பட தேவதான இறை

13 யிலியிட்ட பருந்தலான மலையவிச்சாதிரி நல்லூர் மாடை $16\frac{3}{8}$ யாண்டு 4வது அந்தராயம் பாட்டம் உட்பட தேவதானு இறையிலி நிலை நின்றமைக்கும் இட்டமைக்கும் புரவரி திணைக்களத்து முகவெட்டி நாகங் கொற்றன் எழுத்து இவை புரவரி திணைக்கள நாயகம் உவற்றூ

14 ர்நாட்டு வேளான் எழுத்து புரவரி திணைக்கள நாயகம் பன்ரிமங்கலமுடையான் எழுத்து புரவரி திணைக்கள நாயகம் வெளூர் கிழவன் எழுத்து இவை உலக —வேளான் எழுத்து இவை புரவரி திணைக்களத்துச் சோழமான் எழுத்து இவை புரவரி திணைக்களத்து முகவெட்டி குளத்துழான் எழுத்து இ

15 துசந்திராதித்தவற் பன்மாஹேஸ்வர ரக்ஷை.

# 18

எலவானுசூர் ஓட்டைக்குளத்துக்கு அருகில் உள்ள *பாறை—விக்கிரம சோழனின் 9வது ஆண்டு (கி.பி. 1127) 177 of 1906.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீபூமாது புணரப் புவிமாது வளர நாமாது வி

2 ஸங்க ஜயமாது விரும்பத் தன்திருபாதமலர் மந்நவர்

3 சூடமந்நிய உரிமையில் மணிமுடி சூடிச் சொங்கோல் செ

4 ந்று திசைதொறும் வளர்ப்ப வெங்கலி நீக்கி மெய்யெறந்

5 தழைப்ப கலிங்க மிரியக் கடத்தி வலங்கொளாழி
வகையாழி

6 நிறுத்தி இருசுடரளவும் ஒருகுடை நிழற்ற செம்

7 பொந் வீரஸிம்ஹாஸநத்து முக்கோக் கிழானடிக
ளொடும் வீ

8 ற்றிருந்தருளிய கோப்பரகேசரிபந்மராந திரிபுவன
சக்கரவர்த்தி

9 கள் ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு 9ஆவது
மலாடான

10 ஜனநாத வளநாட்டுப் பரனூர்க் கூற்றத்து பிரம்மதே

11 யம் இறையாநரையூரான ஸ்ரீசோழகேரளச் சருப்பே

12 திமங்கலத்து ஊர்பாகங்கொண்டருளின தேவற்க்கும்

13 ஸ்ரீபதரியாழ்வார்கும் திருச்சக்கர(த்த)ாழ்வார்க்கும்
வானவன்

14 மாதேவி விண்ணகராழ்வார்க்கும் ராஜ நாராயண
விண்ணகராழ்

15 வார்க்கும் ஒகை...கும்பிடாரியரற்கும்இவ்வூர்பாடிகாவலு

16 டைய கிளியூர் மலையமான் சூற்றியன் இராமநானராஜேந்

17 திரசோழமலையகுலராய நேன் இத் தேவர்கள் தேவதா
னங்கள் நன்

18 சை புன்சை இவ்வூரிருக்கும் பெரும்பாடிக்காவல்
சிறுபாடிகா

19 வல் செய்ககதியே ஸந்திராதித்தவற் இறுக்க கடவிதாக
லம்

20 மதித்து உத்தராயன ஸம்கமத்து நாள் நீர்வார்த்து
கல்வெட்டு

21 வித்தேன் இக்கிளியூர் மலையமான் சூற்றியன்
இராமநான ரா

22 ஜேந்தரசோழமலையகுலராஜநேன் இப்பரி...து இயநம
மழிப்பாந்

23 வல்லவரையன் ஸத்யமே தங்களம்மைக்குத் தாநே
மிஞளன்

24 பன்மாஹேஸ்வர ரக்ஷை.

## 19

*எலவானசூர்ச் சிவன் கோயிலின் இரண்டாம் கோபுரத்து இடப்பக்கச் சுவர்—விக்கிரம சோழனின் 12ஆவது ஆண்டு (கி.பி 1130) – 171 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு 12ஆவது
ஊர் பாகங்கொண்டருளிய தேவற்கு முடிகொண்ட
சோழ ஆவூர்நாட்டு வேளான் திரு

2 வாலக்கோயில் தெற்றியான் திருச்சிற்றம்பலமூவேன்த
வேளான்
இரவை ஸந்திக்கு வைத்த விளக்கொன்றுக்குக்
கொண்ட காசு ஒன்றே மூன்று மாவுக்கும்

---

அடுத்த பக்கத்திலுள்ள படங்கள் :—>

1. சந்திர சேகரர் (செப்புத் திருமேனி)
2. ஆடவல்லான் ( ,, )

---





3 பொலிசையால் சந்திராதித்தவற் எரிக்கக் கடவதாகக்
கொண்டோம் இக்கோயிலில் சிவப்பிராமணன்
மாறடிகள்
புறம்பிய(ன்)ஆன சோழகேரளபட்டனும்
4 தம்பிமாரும் இதுபந்மா ஹேஸ்வர ரக்ஷை.

# 20

*இரண்டாம் கோபுரத்து இடப்பக்க பீடம்—விக்கிரம சோழனின் 13ஆவது ஆண்டு (கி.பி 1131)—169 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணர புவிமாது வளர நாமாது
விளங்க ஜயமாது
விரும்பத் தந்திரு பாதமலர் மன்னவர் சூட மன்னிய
உரிமையில்
2 மணிமுடிசூடி செங்கோல் திசைதொறும் வளர்ப்ப
வெங்கலி நீக்கி
மெய்யறந் தழைப்பக் கலிங்கமிரியக் கடமாலை
நடாத்தி
வலங்கொளாழி வரையாழி திரிய
3 இருசுடரளவும் ஒருகுடை நிழற்றசெம்பொன்வீரஸிங்ஹா
ஸனத்து திரிபுவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்
தருளிய
கோப்பரகேசரிபன்மரான திரிபுவனச் சக்கர
வர்த்திகள்
ஸ்ரீவிக்கிரமசோழ தேவற்க்கு யாண்டு 13வது
மிலாடான
ஜனநாத வளநாட்டு பரனூர் கூற்றத்து
4 பிரமம்தேயம் இறையாநரையூரான ஸ்ரீசோழகேரளச்
சதுப்பேதி

மங்கலத்து ஊர்பாகங்கொண்டருளின தேவர்
கோயிலில்
ஸ்தாநபதிகள் சிவப்பிராமணரோம் இத்தேவர்
கோயிலிற்
பிடிலிகைவ் வரியால் நாங்கள்
கைக்கொள்ளக் கடவனத்துக்கு உள்வரியுஞ்...
அரைக்காலுட்பட்ட

5 பொன்னும் திரம்(ம)பை ஒன்றும் தூணி உட்ப்பட்ட
அரிசியும்
நெல் இருதூணிப் பதக்கும் நெய் எண்ணை நாநாழி
உட்பட்டதும் அடைக்காயமுது பாக்கு இருநூறு
உட்ப்பட்டதும் இலையமுது நாலுபற்று
உட்ப்பட்டதும்
கறியமுது இரண்டு நிறை உட்ப்பட்டதும்

6 தயிரமுதும் திருக்கொடியும் திருச்சான்தாடலும்
உத்திரமும்
ஆகஇத்தனையும் கைக்கொண்டு செய்யக்கடவா
நிமந்தம் சிறுகாலை ஸந்திக்கு வி...ஸ்வரப்பிள்ளைக்கு
அரிசி இருநாழியும் கூத்தாடு தேவர்க்கு அரிசி
நாநாழியும் பிராட்டியார்க்கு அரிசி இருநாழியும்
...தேவர்க்கு அரிசி இருநாழியும்

7 ஆக அரிசி பதின்நாழியும் கறிஇரண்டும் மிளகு உப்பும்
நெய்யமுது தயிரமுதும் பாக்கமுதும் இருபதும் ஆக
இத்தனையும் ஸந்திராதித்தவற் செலுத்தக்
கடவோமானோம்
இத்தேவர் கோயிலில் சிவப்பிராமணரோம்
ப(ன்)மாஹேஸ்வர ரக்ஷை,

# 21

*இரண்டாம் கோபுரத்து வலப்பக்கச் சுவர் - விக்கிரம சோழனின் 17 ஆவது ஆண்டு (கி.பி. 1135)—165 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ விக்ரமசோழதேவற்கு யாண்டு 17ஆவது
மிலாடாகிய ஜனநாத வளநாட்டு பரனூர்
கூற்றத்து
பிரம்மதேய(ம்)இறையானரையூரான ஸ்ரீசோழ
கேரள
சதுவ்வேதிமங்லகத்து ஊர்பாகங் கொண்டதேவர்

2 கோயிலில் திருப்பள்ளிஅறை ஆள்உடையாள்
திருநாயற்றுக்
கிழமைதோறும் புறம்பே எழுன்தருளித் திருச்சாழல்
கேட்டருளி அமுது செ(ய்)து அருளி கோயிலைச்
சூழல் எழுன்தருளி மேலே எழுந்தருளுகைக்கு
அற்றை நாளுக்கு வேண்டும் அழிவுக்கு
(அமுதுக்கு?) திரு ..

3 நாயற்றுக்கிழமை ஒன்றுக்கு தி

4 ருவமுது அரிசி முக்குறுணிக்கு நெல்லு எழுகுறுணி
நாநாழியும் கறி அமுதுக்கு நெல்லு நாநாழியும்
நெய்யமுது உழக்குக்கு நெல்லு குறுணியும் தையிர்
அமுது இருநாழிக்கு நெல்லு நாநாழியும் மிளக்கு
அமுது ஒரு பிடிக்கு நெல்லுக்கு முன்நாழியும்
உப்பமுது உரிக்கு நெல்லு இருநாழியும்
அடைக்காயமுது பத்துக்கு இலை அமுதுஇருபதுக்கு
நெல்லு எழுநாழி

5 யும் திருவிளக்(குக்)கெண்ணை நாழிக்கு நெல்லுத்
தூணியும்

ஆக நாள் ஒன்றுக்கு நெல்லுக்கலநே முக்குறுணி
ஆக இப்படி சந்திராதித்தவற் செல்லக் கடவதாக
இன் நிமந்தம் செல்கைக்கு தறை உடையான்
விச்சாதிரன் சகாயநாத விஞ்சிராயன் இவ்வூர்
பார்சுவன் யந்தெழுத்தி ஸ்ரீகவிரதேவனும் இவன்
தம்பியனுஞ் செழுத்த திருமழபாடியும்

6 இவ்விருவர் பக்கல்லும் விலை கொண்டுவிட்ட சோழ
கேரள
நல்லூர்க்கு கீழ்பாக்கெல்லை இத்தேவர் தேவதானம்
நல் அரைசூர் எல்லை(க்கு) மேக்கும் பிடாகை
சிறுபாக்கத்து எல்லைக்கு மேக்கும் தென்பாக்கெல்லை
ஊரிநின்றும் குமாரமங்கலத்திற்குப் போந
வழிக்கு வடக்கும் மேல்பாக்கெல்லை இத்தேவர்
தேவதாநங்களுக்கு கிழக்கும் வடபாக்கெல்லை
இத்தேவர் தேவதானத்து தெக்கும்

7 ஆக இசைத்த பெருநாங்கெல்லையுள் அகப்பட்ட ஏரியும்
நன்செயும் புன்செயும் ஆ(க) இத்தனையும் தேவர்
திருநாமத்திலே விலை கொண்டு இத்தந்மம் ஸந்திரா
தித்தவற் ஸ்ரீகார்யம் செய்வார் முதல் இட
கைக்கொண்டு ஸ்ரீபண்டாரத்திலே அளந்து விட
இ(வ்வாறு)செல்லக்கடவுவதாககல்வெட்டிவித்தேன்
தறைஉடையான் விச்சாதிரன் சக(ா)யநாந
விஞ்சியராயநேன் இதுபன்மாஹேஸ்வர ரக்ஷை.

# 22

*முதற்பிரகாரத்து கிழக்குச் சுவர் — இரண்டாம் குலோத்துங்க சோழனின் 9 ஆவது ஆண்டு (கி.பி. 1142)* —*128* of *1906*.

குறிப்பு: அறச் செயல்களை ஏற்றுக் கொண்ட பட்டர்களின் பெயர்களைக் கருத்திற் கொண்டு, 22, 23 ஆம் எண்களுள்ள கல்வெட்டுகளை, இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தனவாக முடிவு செய்துள்ளேன்.

1 ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 9 ஆவது ரிஷப நா

2 யற்று உடையாரூர் பாகங்கொண்டருளிய நா(யநார்)ர்கு திருமுனைப்பாடி பேரீங்கூர் (த)லைவந் நகர்

3 ...வன் துணையர் மூவான் கைய்உகிராளி இட்டத் திருக்குத்தி விளக்கு 1 இத்திருக்குத்தி விளக்கிலே

4 சந்திராதித்தவற் செலுத்துவுதாக வைத்த ஸந்தி விளக்கு 1க்கு பொலிசையாலே எரிப்பிதாக

5 கைக்கொண்ட காசு 120 இக்காசு நூற்றிருபதும் இக்கைய் உகிராளி பக்கலே கை

6 க்கொண்டு இந்நாயநார் கோயிலில் அறுபதுவட்டத்து காணி உடையநாளே தலைச்செ

7 ய்மாடாக இஸந்திவிளக்கு செலுத்துவேநாக கை(கொ)ண்டேன் குலோத்துங்கபட்டநே

8 ன் இது சந்திராதித்தவற் பந்மாகேஸ்வர ரக்ஷை.

## 23

*முதற்பிரகாரத்து வடக்குச் சுவர் —இரண்டாம் குலோத்துங்க சோழனின் 11ஆவது ஆண்டு (கி.பி. 1144) —477 of 1937—38.*

1 ஸ்வஸ்திஸ்ரீதிரிபுவநச்சக்கரவர்த்தி ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்குயாண்டு 11 ஆவது இறைவாநரையூரான ஸ்ரீசோழ கேரள சதுர்வேதி மங்கலத்து உடையார் ஊர்பாகங்கொண்டருளிய நாயனார் கோயிலில் ஸ்தாநபதி சிவப்பிராமணன் வரதநாரணக்க

2 ரியான் நித்தகல்யாணிப்பட்டந் என்மகன்நம்பி ஹரிதவ க்ஷணன்தேவன் பக்கல்நாங்கள் இன்னயநார் கோயிலுக்கே சந்திவிளக்கு எரிப்போமாக கைகொண் டகாசு முப்பதும் கொண்டு ஸந்திரா

3 தித்தவற் செலுத்தக் கடவோமாக...கைக்கொண்டோம் பந்மகேஸ்வர ரக்ஷை.

## 24

*இரண்டாம் கோபுரத்து சுவர் — இரண்டாம் இராசராச சோழனின் 6ஆவது ஆண்டு (கி.பி. 1152) 166 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதும் ஜெயமாது(ம்)நா

2 மருவிய கலைமாதும் புகழ்மாது(ம்) நயந்து புல்க அருமறை விதிநெறி

3 நெறியனைத்துந் தழைப்ப வருமுறை உரிமையில் மணிமுடி சூ

4 டி திங்கள் வெண்குடைத் திசைக்களு
றெட்டுந்தங்கு தநிக்கூட

5 ந்தாநெந விளங்க கருங்கலிப் பட்டியைச் செங்கோ

6 ல்துரப்ப பொருங்கதிராழி புவிவளர்ந்துடந் வர வில்லவி

7 ரீரட்டர் மீநவர் சிங்கணர் ப(ல்)லவர் முதலியர்
பா(ர்த்) திவர் பணி

8 ய எண்ணருங்கற்பம் மண்ணகம் புணர்ந்து செம்பொந்வீர

9 ஸிம்ஹாஸநத்து அவநி முழுதுடையாளொடும்
வீற்றிருந்தருளிய

10 கோப்பரகேஸரிபந்மராந திரிபுவநச்சக்கரவர்த்திகள்
ஸ்ரீராஜ ராஜ தேவ

11 ற்குயாண்டு 6வது மலாடாந ஜநநாத வளநாட்டு
பரனூற் கூற்றத்துப் பிர

12 ம்மதேயம் இறையாநரையூராந ஸ்ரீசோழ கேரளச்சது

13 வேதிமங்கலத்து ஊர்பாகங்கொண்டருளிய
மஹாதேவற்கு கூட

14 லூராளப்பிறந்தாந் மோகநாந ராஜராஜக்
காடவராயநேந் இந்நா

15 யநார் தேவதாநம் பருந்தலாந மலைய விச்சாதிரி
நல்லூரில் எங்க

16 பெருந்பெரும்பாடி காவல் சிறுபாடிகாவல் தறி
இறை தட்டா

17 ரப்பாட்ட மந்தராயம் தரவிநியோகங்களுமற்றுமிந்
நாயநார் தே

18 வதாநங்களில் எந்பெறுந் பெரும்பாடிக்காவல்
சிறுபாடிக்காவலந்தரா

19 யம் தரவிநியோகங்களும் எப்பேர்பட்ட எவைத் தேவைமு
20 ற்றும் இந்நாயநார்க்கு ஆருவது முதல் புரட்டாதி
திருவோணத்தி
21 ருநாளெழுந்தருளக் கடவதாகக்
குடுத்துக்கல்வெட்டுவித்தேந்
22 கூடலூரளப் பிறந்தாந் மோகநாந நாலுதிக்கும்
வெந்ற ராஜரா
23 ஜக்காடவராயநேந் இ(த்)தன்மம் அழிவு செய்வார்
வல்லவரை
24 யந் ஸத்யம் தங்களம்மைக்குத் தாநே மணவாளந்
இது சந்திரா
25 தித்தவற் பந்மாஹேஸ்வர ரக்ஷை உ.

# 25

*இரண்டாம் கோபுரத்து இடப்பக்கக் குமுதப் படை—இராண்டாம் இராசராசசோழனின் 6 ஆவது ஆண்டு (கி.பி. 1152)—170 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதும் ஜெயமாதும்
நாமருவிய
கலைமாதும் புகழ்மாதும் நயந்து புல்க அருமறை
விதிநெறி
யனைத்துந்தழைப்ப வருமுறைஉரிமைமணிமுடிசூடித்
திங்கள் வெண்குடைத் திசைக்களிறெட்டுந்தங்கு
தநிக் கூட
2 ந்தாநெந விளங்கக் கருங்கலிப் பட்டியைச் செங்கோல்
துரப்ப
பொருங்கதிராழி புவிவளர்துடந்வர வில்லவரிரட்டர்

**ஸ்ரீநவர் சிங்கணர் பல்லவர் முதலியர்**
**பார்த்திவர் பணிய**
எண்ணருங் கற்பம் மண்ணகம் புணர்ந்து செம்பான்
வீரஸிம்ஹாஸநத்துப் புவந முழுதுடையா ளொ

3 டும் வீற்றிருந்தருளிய கோப்பரகேஸரிபந்மராநதிரிபுவநச்
சக்கவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற் (கு)யாண்டு
ஆருவது
மிலாடான ஜநநாத வளநாட்டு பரனூர்க் கூற்றத்து
பிரம்மதேயம் (இ)றையா நரையூராந ஸ்ரீசோழ
கேரளச்
சதுர்வேதிமங்கலத்து ஊர்பாகங் கொண்டருளிய

4 மஹாதேவர்கோயிலில் திருமாளிகைசெய்வித்தான் கூடல்
ஆளப்பிறந்தான் மோகநாந இராஜராஜக்
காடவராயன்
நாலுதிக்கும் வென்ருன் இதுபன்மஹேஸ்வர ரக்ஷை.

# 26

*எலவானசூருக்கு அண்மையில் உள்ள* **பரிந்தல்** *என்னும் சிற்றூர்—ஊரின் நடுவிடத்தே அமைந்த* **சந்திக்கல்** *என்னும் கற்பலகை—இரண்டாம் இராசராச சோழனின் 7 ஆவது ஆண்டு (கி.பி. 1155)—364 of 1937—38.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீதிரிபுவநச் சக்கவத்திகள்

2 ராஜராஜதேவற்கு யாண்டு 7வது உ

3 டையார் ஊர் பாகங்கொண்ட ருளிய ஞய

4 ர்க்கு கிளியூர் மலையமாந் பெரிய உடையா(ன்) நி

5 ரேற்ருநாந ராஜராஜ மலையகுல ரா

6 யநேன் இநாயநார்கு நித்த நிமந்ததுக்கு கல்

7 வெட்டி குடுத்த பரிசாவது இந்நாயநார் தேவ

8 தாநங்கள் பருந்தபாநூமலையவிச்சாதி

9 ரிநல்லூரில் நான் கெல்லையுட்பட்ட நன்

10 செய் புஞ்செயால் வந்த பெரும்பாடிக்கா

11 வல் சிறுபாடிக்காவலும் தரஇரையி

12 ட்டாக...பாட்டமும்...(ஆ)யங்களும் எப்பேர்பட்ட ஆ

13 யங்களும் இந்நாள் முதல் நாயநார்கு

14 விட்டேன் இராஜராஜ மலையகுலரா

15 யனேன் இத்தன்மம் அழிவு செய்வா

16 ந் தங்களம்மைக்

17 குத் தாநே மிணுள

18 ன் வல்லவரையன் ஸத்யம் கெங்கையி

19 டைக் குமரிடைச்

20 செய்தார் செய்த பாவங்கொள்வார்.

# 27

*எலவானூர் சிவன்கோயில் முதற்பிரகாரத்து மேற்குச் சுவர்—இரண்டாம் இராசராச சோழனின் 8ஆவது ஆண்டு (கி பி. 1154) —474 of 1937-38*

1 ஸ்வஸதிஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதும் ஜெயமாதும் நாமருவியக

2 லைமாதும் புகழ்மாதும் நயந்து புல்க அருமறை விதியில் நெறியனைத்தும்

3 தழைப்ப வருமுறை உரிமையில் மணிமுடி சூடித்திங்கள்
வெண்குடைத் தி

4 சைக்களிரெட்டும் தங்கு தனிக்கூடந் தானென விளங்கிக்
கருங்கலிப் பட்டிகை

5 செங்கோல்துரப்ப பொருங்கதிராழி புவி வளர்ந்துடன் வர
பல்லவர் இரட்டர் மீன

6 வர்சிங்கணர் பல்லவர்னுதலிகள் பாத்திவர் பணிய
எண்ணருங் கற்பக மண்ணகம் புணர்

7 ந்து புவநமுழுதுடை (யா)ள்ளொடும் வீற்றிருந்தருளிய
கோப்பரகேசரிவந் மராந திரிபுவநசக்க

8 ரவத்திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு 8ஆவது
மலாடாந ஜெநநாத வளநாட்டுப் பரனூற்

9 கூற்றத்து பிரமதேயம் இறைவாநரையூரான ஸ்ரீசோழ
கே(ர)ளச்சதுற்பேதி மங்க

10 லத்து ஊர்பாகங் கொண்டருளின மகாதேவர் கோயிலில்
திருக்கல் சார்த்தும் முன்

11 பில்ஏழிசைமோகன் திருமண்டவமும் திருக்கல்
சார்த்தும் செய்வித்தாந் விருதரா

12 ஜ பயங்கர வளநாட்டு மேற்காநாட்டு பிரமதேயம்
உறுமூரான சோழ பாண்டியச்சது

13 வேதிமங்கலத்து காணி உடைகூடலூர் ஆளப்பிறந்தான்
ஏழிசை மோகன்நான

14 குலோத்துங்க சோழக் காடவராயநேன் செய்வித்தது.

# 28

*இரண்டாம் கோபுரத்து வலப்பக்கச் சுவர் இரண் டாம் இராசராச சோழனின் 13 ஆவது ஆண்டு (கி பி. 1159) 163* of *1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதும் ஜெயமா

2 தும் நாமருவிய கலைமாதும் புகழ் மாதும் நயந்து பு

3 ல்கஅருமறை விதியி நெறியணைத்துந் தழைப்ப வருமு

4 றை உரிமையில் மணிமுடிசூடி திங்கள் வெண்குடை

5 த் திசைகளுறெட்டும் தங்கு தநிகூடம் தாநெந
விளங்கக் கருங்கலிப் பட்டியைச் செங்கோல்
துரப்ப பொருங்கதிராழி புவிவளர்ந்துடன் வரவில்ல
வரிரட்டர் மீநவர் சிங்கணர் பல்லவ முதலியர்
பார்த்திவர்
பணிய எண் ண)ருங் கற்பம் மண்ணகம் புண(ர்)ந்து
செம்பொந் வீரஸிங்ஹாஸநத்து புவநமுழுதுடை
யாளொடு

7 ம் வீற்றிருந்தருளிய கோப்பர கேசரிபந்மரானதிரிபுவனச்
சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு
13வது (நா)ள் 184 நால் ஆயிரத்தளியிற் கோயிலில்
உள்ளா

8 லை ஆட்டத்து வெளியில் பல்லவராயன் மண்டபத்து
எழுந்தருளுயிருக்கக் கிளியூர் மலையமான் பெரிய
உடையான் நிரேற்றுஞை ராஜராஜ மலையகுலராயன்
திருவடித்

9 தொழுது விண்ணப்பஞ் செய்யத் திருவாய்
மொழிந்தருளினபடி
மலாடான ஜனநாதவளநாட்டுப் பரநூர் கூற்றத்து
இறையாநரையூரான ஸ்ரீசோழ கேரளச் சதுர்வே

10 திமங்கலத்து உடையார் ஊர்பாகங் கொண்டருளிந
மஹாதேவற்கு வேண்டும் நிமந்தங்களுக்கு
இறுப்பதாக
இவ்வூர் பிடாகை அரும்புலிப்பாடியினும் நல்லர
சூரினும் நெ

11 டுமானூரினும் மலையனூரினும் நீர் நிலத்து இதேவர்
ஊர்(க்) கீழிறையிலியாய் வருகிற நிலமுட்படப்
பழம்பெயரும்
முன்நிறை கட்டினபடியுந் தவிர்த்து யாண்டு 13வது
முதல்

12 (தேவதான இ)றையிலியாய் வேறுபிரிந்த ராஜராஜ
மங்கலம்
நீர்நிலம் 20 வேலிக்கு யாண்டு 13வது முதல் வேலி
1க்கு நெல் 80 கலமாக இறைகட்டின நெல்
யாண்டு 13வது முதல் தேவ

13 (தான இறையி)லியாய் வேறு பிரிந்தமைக்கு இவை
ஸ்ரீகாண
நாயகம் பழைய நூருடையானெழுத்து இவை
புரவரி ஸ்ரீகாண நாயகம் பனையூருடையானெழுத்து—
இதிற் குறை வடக்கிற்றிண்ணை[1]

14 புரவுரி ஸ்ரீகாணநாயகம் இளங்குடையானெழுத்து
(ஸ்ரீகாணகநா) யகம்பாரணை நிலனூர்
கிழவநெழுத்து இவை நிகரிலிசோழப் பல்லவ

15 ராயன் எழுத்து இவை புரவுவரி ஸ்ரீகாணத்து
முகவெட்டி...புரவுவரி
ஸ்ரீகாணத்து முகவெட்டி முழைநகருடையா
னெழுத்

1 இதன் தொடர்ச்சி வடக்குத் திண்ணையில் உள்ளது.

16 துஇவை புரவுவரி ஸ்ரீகாணத்துமுகவெட்டி கொற்றமங்கல
முடையான் (எழுத்து இவை) இலாடத்தரய
னெழுத்து இவை ராஜராஜ விழுப்பரய னெழுத்து

17 இவை தொண்டைமானெழுத்து இவை வேசாலிப்
பேரரயன்
எழுத்து இவை திருமந்திர ஓலை இராஜேந்திரசிங்க
மூவேந்தவேளான் (எழுத்து) இவை குருகுலராயன்

18 எழுத்து இவை நுளம்பராயனெழுத்து...இந்த
மலையநூரான ராஜராஜ மங்கலம் இது
சந்திராதித்தவற்கு பன்மாஹேஸ்வர ரக்ஷை.

# 29

*எலவானசூருக்கு அண்மையில் இருக்கும் பூ மலையனூர் என்னும் சிற்றூரில் உள்ள* **ஐயனார் கோயில் பாறை—** *இரண்டாம் இராசராச சோழனின் 13ஆவது ஆண்டு (கி.பி. 1159)—367* of *1937-38.*

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கவத்தி

2 கள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்

3 டு 13ஆவது இரையா நரையூரான

4 சோழ கேரள சதுபேதிமங்கல

5 த்து உடையார் ஊர்பாகங்கொண்டரு

6 ளியதேவற்கு இவ்வூர் கீழ்பிடாகை இ(ம்)

7 மலையனூரான ராஜராஜ மங்கல

8 த்து பொருநாந்கெல்லையுளகப்பட்ட நந்

9 செயுஞ் செருமுற்றி உ-ய(20) மாளப்பர்

10 பட்ட கடமையும் சில்வரி பெரு
11 வரி முற்று(ம்) இ(வ்)வூர் பாகங்கொண்ட
12 தேவற்க்கே இறுப்பதாகக் குடி
13 நீங்கா தேவதாநமாக திருவர்
14 ...இது பந்மாஹேஸ்வ
15 ர ரக்ஷை.

# 30

*எலவானாசூர்ச் சிவன் கோயில் முதற் பிரகாரத்துத் தெற்குச்சுவர்—இரண்டாம் இராசராச சோழனின் 14 ஆவது ஆண்டு. (கி.பி. 1160)—134 of 1906—இக்கல்வெட்டின் இறுதிப் பகுதி சிதைந்து விட்டது.*

1 ஸ்வஸ்திஸ்ரீ இராஜராஜ தேவற்கு யாண்டு
2 14வது ஆடி மாஸத்து திருமுனைப்பாடி நாட்
3 டு பரண்டையூர் மங்கலங்கிழ (வன்ம)கன் ஐ(ம்)பொ
4 ழிலிராமநேந் உடையார் ஊர்பாகங்கொ
5 ண்டருளிய நாயநாற்க்கு இம்மாஸம் முதல்
6 நித்தம் ஒரு ஸந்தி விளக்கு மலைமேலே இரவை
7 ஸந்தி எரி(க்)க கடவதாக இந்நாயநார் கோயிலில் ஸ்தா
8 நபதி சிவப்பிராமணந் கௌசிகந் வைரமே
9 கந் கருமாணிக்கமாநப் பரசமைய கோளரிபட்டந்
10 பக்கல் குடுத்த காசு 16க்கு இம்மாஸ முதல் திங்
11 கள் எட்டுமாக்காசு பொலிசை பொலிய
12 ப் பெறுவதாகவும் இப்பொலிசை

13 க்காசுக்கு இத்திருவிளக்கு எரிவுதாக இக்
14 கோயிலில் அறுபது வட்டத்து இப்
15 பரசமைய கோளரிபட்டந் தானு
16 டையகாணி நாளேய் தலைச்செய் மாடா(க)...

# 31

*முதற்பிரகாரத்துத் தெற்குச் சுவர் —இரண்டாம் இராச ராசசோழனின் 15ஆவது ஆண்டு (கி.பி. 1161)—140* of *1906.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீபூமருவிய திருமாதும் புவிமாதுஞ் ஜயமாதும் நாமருவி
2 யகலைமாதும் புகழ்மாது(ம்) புல்க அருமறை விதிநெறி யனைத்துந் தழை
3 ப்ப வருமுறை உரிமையிற் மணிமுடிசூடி திங்கள் வெண்குடை
4 திசைக்களிறெட்டு தங்கு (தனிக்கூடந்) தானென விளங்க கருங்கலி
5 ப்பட்டியை செங்கோல் துரப்ப பொருங்கதிராழி புவிவளந்துடந்வர வில்லவரிரட்
6 டர்மீநவர் சிங்கணர் பல்லவர் நுதலியர் பாத்திவர் பணிய எண்ணருங் கற்ப மண்ணகம் பு
7 ணரச் செம்பொந் வீரஸிம்காஸநத்து புவநமுழுதுடையா ளொடும் வீற்றிருந்தருளிய கோ
8 ப்பரகேஸரிவந்மராந திரிபுவநச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு 15வது மீந

9 நாயற்று பூர்வபக்ஷத்து பந்தமியும் திங்கள் கிழமையும்
பெற்ற மகஸிஷத்தி நாள் மலா

10 டான ஜனநாத வளநாட்டு பரனூர் கூற்றத்து
பிரமதேயம் இறையானரையூரான ஸ்ரீ

11 சோழ கேரள சதுபேதிமங்கலத்து உடையார் ஊர்பாகங்
கொண்டருளின நாயனுற்கு தி

12 ருத்துறையூர் ஏசனுடையாந் உடையாந் சூரநாயகநாத
நானூற்றுவ பல்லவரைய(னேன்)

13 நாயநார்கு சந்திராதித்தவற் செல்ல கடவதாக செய்த
தம்மமாவது திருப்பங்குநித் திருநாள் திரு

14 வேட்டைக்கும் தத்யத்து(க்)கும் புர(ட்)டாதி திருநாள்
திருவேட்டைக்கும் தத்யத்துக்கும் திருமார்கழி
திருவாதி

15 ரைதித்யத்துக்கும்ஆகஇவைஅஞ்சுக்கும்நாள்ஒந்று(க்)கு
திருவமுது ஊர்பாகங் கொண்டாந் மரக்காலா

16 ல் அரிசிதூணி பதக்கும்கறியமுது நிறைஒந்றும் உப்பமுது
உரியும் மிளகமுது ஆழாக்கும் நெய்யமுது

17 உரியும் தயிரமுது இருநாழியும் அடைக்காயமுது பாக்கு
நாற்பதும் இலையமுது பற்று ஒந்றும் ஆகநாள்

18 அஞ்சுக்கரிசி இருகலநேய் தூணிபதக்கும் கறியமுது
நிறை அஞ்சும் உப்பமுது இருநாழி உரியும் மிளகமு

19 துஉரி ஆழாக்கும் நெய்யமுது இருநாழி உரியும் தயிரமுது
பதிநாழியும் அடைக்காயமுதுபாக்கு இருநூறும்இலை

20 அமுதுபற்றுஅஞ்சும்ஆகஇத்தனையும் தாமங்குட்டதுதித்ய
மண்டவத்திலே அமுது செய்தருளக் கடவ

21 தாககொண்டு விட்ட நிலமாவதுஇவூர் மேல்பிடாகை
விக்கரச்சிமங்கலத்து கௌசிகந் ஸ்ரீகண்ட

22 ன்ஸ்ரீகாரிமாறந் பக்கல்கொண்ட காஞ்சிரஞ் செய்யும் கிணறுகளும் நிலபெருஞ் செய்யில் மேற்கண்ட

23 யபாதியும் இந்நிலத்தில் நாறுகால்களும் நின்மலன் காலுக்கு வடக்கி(ல்) நத்தமும் தோட்டமும் இவை

24 ச்சில கிணறுகளும் பயந்மரங்களுமாக இத்தனையும் இயம்ம(ம்) சந்திராதித்தவற் செல்ல(க்)கட

25 வதாக கொண்டு விட்டாந் ஏமசநுடையாந் உடையாந் சூரநாயகநாந நாநூற்று(வப)ல்ல வரையந்

26 இதுபந்மாகேஸ்வரர் ரக்ஷை.

# 32

*முதற்பிரகாரத்துத் தெற்குச் சுவர்—இரண்டாம் இராச ராசன் சோழனின் 16ஆவது ஆண்டு (கி.பி. 1161)—137 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாது

2 ம் ஜயமாதும் நாமருவிய கலைமாதும்

3 புகழ்மாதும் நயந்து புல்க அருமறை

4 விதிநெறி யனைத்துந் தழைப்ப வருமு

5 றை உரிமையில் மணிமுடி சூட திங்கள்

6 வெண்குடை திசைகளிரெட்டுடன் தங்கு

7 தநிக்கூடன் தாநெந விளங்க (கருங்கலி)ப்ப

8 ட்டியைச் செங்கோல் (துரப்ப பொ)ருங்கதி

9 ராழி புவி வளர்துடந்வர வில்லவ ரிரட்டர் மீந

10 மீநவர் சிங்கணர் பல்லவர் நுதலியர் பார்த் (தி)

11 வர் பணிய எண்ணருங் கற்ப மண்ணகம் புணர்ந்து

12 செம்பொந் வீரஸிம்ஹாஸநத்து வீற்றிருந்தரு

13 ளிய கோப்பர கேஸரிவந்மராந திரிபுவநச்சக்கரவர்த்

14 திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யா(ண்)டு 15 வது மே

15 ஷ நாயற்று பூருவ பக்ஷத்து அஷ்டு .மி)யும் புதந் கி

16 ழமையும் பெற்ற பூசத்தி நாள் மலாடாந ஜநநாய

17 வளநாட்டு பரஸ்ரீர் கூற்றத்து பிரமதேயம் யிறையா

18 நரையூராந ஸ்ரீசோழகரளச்சதுபேதி மங்கல (த்து)

19 உடையார் ஊர்பாகங்கொண்டருளிய நாயநாற்கு கி

20 ளியூர் மலெ (ய)மாந் பெரி (ய யுடையாந் சூரியதேவநாந

21 சோளேந்தரசிங்க மலெயகுலராயந் செய்த தன்மமாவதுதி

22 ருபங்குநி திருநாள் திருவெழுச்சிப்படிக்கு திருக்காப்

23 புநாண் சாத்தியருள பொந் அரைக்காளுஙுடைய நா

24 ச்சியாற்கு பொந் பன்றிரண்டு மிவைச்...அரிசி
அறுநாழியும் திரு

25 ப்பண்ணு...மப்பண்ண சிவப்பிராமணரி(ரு)வற்கு
அரிசி குறுணி இருநாழியும்

26 தூட்ட பாக்கு ஐந்தூறு வெற்றிலெ பற்று பத்து திருக்
காப்பு நாண்...

27 திருவிளக்கெண்ணெ முப்பதிந்...கரிசி குறுணி

28 வெழுச்சியிந்நன்று திருமஞ்சன போகத்துக்கரிசி
முக்குறுணி கறியமுது...திருச்

29 சாது முப்பதிநாளிஞ்சு நாளிரண்டுக்கு செங்கழுநீர்
திருப்பள்ளித் தாமம் நாலாயிரம்...

30 பண்ணியருள அரிசி பதக்கிருநாழி உப்பிருநாழி
எள்ளிருநாழி...இருபதிந்...

31 நெய்நாழி பொன் மஞ்சாடி சைவாசாரியாற்கு மி

32 ப்பொந் அரைக்கால் திருவமுதரிசி கலம் கறியமுது நிறைய்...உள்ளிட்ட ந இரவைக் கமுதுபடி அரிசி குறுணி ஊற்கெழுந்தருள

33 புகுந்தாலமுதுபடி யரிசி குறுணி நாநாழி கறியமு துள்ளிட்டந...

34 யமுதுக்கரிசி குறுணி கருப்பக்கட்டி முப்பதிந் பலம் நெய்யிரு நாழி

35 ...க்கமுதுபடி அரிசி தூணி பதக்கு கறுயமுதுள்ளிட்ட ந ஆக புர

36 ட்டாதி திருநாளிலும் செய்யக் கடவதாகவும் அமாவாஸி ஒன்றுக்கு அரிசி முக்குறுணி கறியமுதுள்ளிட்ட ந ஆக இப்படி சந்திராதித்தவற் செல்லக்கடவத

37 ாக நிம(ந்)தம் இஙூர் வடபிடாகை புலியுணிபாடியில் பாற்றவந் ஸ்ரீதக்ஷணந்

38 கவுரியர்தேவந் பாதைதநில் ஸ்ரீபந்பிள்ளையாண்டாளும் பாற்றவந் சேந்தந் ச

39 க்ரபாணியும் இந்நாயநார்...பண்ணிந களரி எந்ற நிலத்தில்

40 ...துதாக இத்தன்மம் ஸந்திராதித்தவற் செல்லக் கடவு தாக கல்வெட்டு வித்து விட்

41 டாந் கிளியூர் மலையமான் பெரிய உடையாந் சூரிய தேவநாந சோளேந்தர சிங்க மலைய

42 குலராஜன் இதுபந்மாகேஸ்வர ரக்ஷை.

# 33

*முதற் பிரகாரத்துக் கிழக்குச் சுவர் — இரண்டாம் இராசராச சோழனின் 17ஆவது ஆண்டு (கி. பி. 1163)— 129 of 1906.*

குறிப்பு :— இக்கல்வெட்டின் முற்பகுதியும் பிற்பகுதியும் காணப்படவில்லை.

1 கவிப்ப(ட்டி)டியைச் செங்கோல் துரப்(ப)

2 (வி)ல்லவர் இர(ட்)டர் மீநவர் சிங்கணர் பல்லவர்...

3 ணருங் கற்பக மண்(ண`கம் புணர்ந்து செம்பொந் வீரஸிங்காஸநத்து புவ

4 நமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோப்பர கேசரி பந்மராந திரிபு

5 வநச்சக்ரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு 17வது ...ற்று அபரப

6 க்ஷத்து நவமியும் நாயற்று கிழமையும் பெற்ற அவி (ட்டத்துநா)ள் மலாடாந ஜந

7 நாத வளநாட்டு பரநூர் கூற்றத்து பிரமதேயம் இறையா நரையூர்ராந ஸ்ரீசோழகேரளஸதுவேதி மங்கலத்து கீழ்பிடாகை ராஜநாராயண நல்லூ

8 ரில்மகாதேவர் தேவ(தான)மாக கொண்டுவிட்ட நிலம்...

## 34

*முதற்பிரகாரத்துக் கிழக்குச் சுவர்—இரண்டாம் இராசராச சோழனின் 18வது ஆண்டு (கி.பி. 1164)—131 of 1906*

இக்கல்வெட்டின் முற்பகுதியும் பிற்பகுதியும் காணப்பட வில்லை.

1 ருங்கற்பக மண்ணகம் புணர்ந்து செம்பொன் வீரஸிம்மா ஸனத்துப் புவநமுழுது

2 டையாளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேஸரிவன்ம ராந திரிபுவநச் சக்கரவர்த்திக

3 ள்ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு 18ஆவது ஊர்பாகங்...

## 35

*முதற்பிரகாரத்து வடக்குச்சுவர்—இரண்டாம் இராசராச சோழனின் 19ஆவது ஆண்டு (கி.பி. 1165)—144 of 1906*

1 ஸ்வஸ்திஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு 19வது

2 மலாடாந ஜநநாத வளநாட்டு பரகூர் கூற்றத்து

3 பிரம்மதேயம் (இறையா) நரையூராந ஸ்ரீசோழகேரளச் சதுப்

4 பேதிமங்(கலத்து) உடையார் ஊர்பாகங்கொண்டருளிந நாயனாற்

5 கு இரவைய் ஸந்தி ஒன்றுக்கு இநாள்முதல் சந்திராதித் தவற் நாள்தொ

6 றும் இநாயநார் திருமலைமேல் மண்டபத்திலே எரிவுதாக வைச்

7 ச ஸந்தி விளக்கு ஒன்றுக்கு வாணியந் சோமருடையாந் மூவாயிரத்தொ

8 ருவந் சோலையம்பிராந் இக்கோயிலில் ஸ்தாநபதி
ஶிவப்பிராமணந் க

9 வுசிகன் வெண்காடுதேவந் ஆளவந்தநாந குலோத்துங்க
சோழ பட்ட

10 ந்வசம் குடுத்த காசு 15 இக்காசு பதினஞ்சுக்கும்
இமாஸம் முதல்

11 திங்கள்காலே அரைக்கால் காசு பொலிசையாய்ப்
பொலியபெறு

12 வதாகவும் இப்பொலிசைய் ஸந்திராதித்தவற் குலோத்
துங்கசோழ

13 பட்டந்இக்கோயிலில் அறுபது வட்டத்து...

14 ...இரவைய் ஸந்தி விளக்கு ஒ(ன்)றும் எரிவுதாக
கல்வெட்டி வி

15 ட்டே(ந்)வாணியந் கோமருடையாந் மூவாயிரத்
தொருவர் சோலையம்பிரா

16 நேந்இது சந்திராதித்தவற் பன்மாஹேஸ்வர ரக்ஷை.

# 36

*முதற் பிரகாரத்து வடக்குச்சுவர் — இரண்டாம் இராசராச சோழனின் 19ஆவது ஆண்டு (கி.பி. 1165)— 146 of 1906*

1 ஸ்வதிஸ்ரீஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு 19ஆவது ஆடி
மாஸத்து...

2 வாணியந் அவயம்புக்கான் நாயகநேன் உடையார்
ஊர்பாக

3 ங்கொண்டருளிய நாயநாற்கு இம்மாஸ முதல்நித்தமொரு
திருவிளக்

4 குஇரவை ஸந்தியில் திருமலேமேலே எரியக் கடவுதாக இந்நாயநாற் கோயிலில் ஸ்தாநபதி சிவ

5 ப்ராம்ணந் கௌசிகந் வயிரமேகந் கருமாணிக்கமாந பரசமயகோளரி நம்பி பக்கல் குடுத்த காசு 15

6 இக்காசு பதினஞ்சு இக்கு இம்மாஸ முதல் திங்கள் காலே யரைக்காற் காசு பொலிசை பொலிய(வதா) கவும் இப்

7 பொலிசைக் காசுக்கு இத்திருவிளக்கு எரிவதாக இக்கோயிலில் அறுபதுவட்டத்து இப்பரசமைய

8 கோளரிநம்பி தானுடைய காணிநாளே தலேச்செய் மாடாக இரவைஸந்திக்கு இத்திருவிளக்கொன்று

9 ஸந்திராதித்தவற் செல்லக் கடவுதாக கல்வெட்டுத் தேந் வாணிகந் அவையம்புக்கான் நா

10 யகநேன் இது பன்மாஹேஸ்வரர் ரக்ஷை.

# 37

*முதற்பிரகாரத்து தெற்குச்சுவர்—இரண்டாம் இராசாதிராச சோழனின் 10ஆவது ஆண்டு (கி.பி. 1173) 139 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநசக்கரவர்த்திகள் ஸ்ரீஇராஜாதிராஜ தேவற்கு யா

2 ண்டு 10வது திருமுனைப்பாடி நாட்டு நரையூர் நரையூர் கிழவந் சோமந்தோன்றியும் சோமந் உடையாநும் இவ்விருவோம் உடையார் ஊர்பாகங் கொண்டருளிந

3 நாயநார்க்கு திருமலேமேலே இரவைய் ஸந்திவிளக்கு எரி(ய)க்கடவுதாக இநாயனுர்கோயில் சிவப்பிராம ணரில் கவுசிகந்நா(ர)ணக்கரியாந் இறைசைய்

4 நாயகன் ஆநசோழகோந் பட்டனுக்குவிளக்கு குகுடுத்த காசு 15ம் கவுசிகன் வரதநாரணக்கரியாந் ஆதித்த கலியாணபட்டனும் இவந்தம்பி நம்பியாந இராஜ ராஜ

5 பட்டநு(க் கும் விளக்கு 1கு (கு டுத்த காசு 15ம் ஆக காசு முப்பதுக்கும் காத்திகைய் மாஸம் முதல் பலிசைய் காசு முக்காலுக்கும் திருமலே

6 மேலே இவர்களுடைய தலேச்சமாடாக எரிக்க கடவுதாக கல்வெட்டுவித்தோம் தோன்றியும் உடையாநும் இவிருவோம் இதுஸந்திராதித்தவற் பன்மஹேஸ்வர ரக்ஷை.

# 38

*முதற்பிரகாரத்து வடக்குச்சுவர் இரண்டாம்—இராசாதிராச சோழனின் 10ஆவது ஆண்டு (கி.பி 1173)—148* of *1906.*

1 திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீராஜாதி ரா(ஜ) தேவற்கு யாண்டு ப

2 த்தாஆவது ஆநிமாதத்து மலாடான ஜனநத வளநாட்டு

3 ப்பரனூர்க் கூற்றத்து மாடூரில் லிருக்கும் கோச்சாத்தந் காமந

4 கமுடையாள் தந்மகளே ஒரு அணிமணங்கோலிட நீஎறிய இவளேத் தப்

5 பிமிண்டந் காமந் மகள் மேலே பட்டு இப்பெண் இருபதா நாளில் மரித்திது இ

6 துகை பிழைப்பாடெந மடம் நாட இக்கெறி நாட்டவ ஊர்பா(க,ங்கொண்டருளிந நா

7 யநார் கோயிலிலே ஒரு திருநுந்தா விளக்கு வையெந்று சொல்லி இப்படிக்கு இரண்டு

8 திறவருமிசைந்து தீட்டிட்டு இக்கோச்சாத்தன் காமந் இவ்வாநி மாதத்திலே முப்பத்திரண்

9 டுபசுப் பொறித்துக் கொ(ண்)டுவந்து விட்டாந் இவ் விளக்கு ஒந்று(ம்) ஸந்திராதித்தவற் செல்வதா

10 க பந்மாஹேஸ்வர ரக்ஷை.

# 39

*முதற்பிரகாரத்து வடக்குச் சுவர் — இரண்டாம் இராசாதிராச சோழனின் 13ஆவது ஆண்டு (கி.பி. 1176)*
*476* of *1937-38.*

1 ஸ்வஸ்திஸ்ரீ ராஜாதிராஜ தேவற்கு யாண்டு 13 ஆவது அற்பசி மாஸ முதல் சந்திராதித்தவற் செல்ல மாணிக்க தேவராண்டி வரைசாண்டார் வைத்த சந்தி விளக்கு 1க்கு பசு...க்கு ஒடுக்கிந காசு 16 மிக் கோயில் தேவர்கந்மி துணையா மூவாதாந் இறைசை நாயகமாந நம்பி...

2 ஊர் பாகங்கொண்டாந் (இக்கல்வெட்டு முடிவு பெற வில்லை)

# 40

*முதற்பிரகாரத்து வடக்குச் சுவர் — இரண்டாம் இராசாதிராச சோழனின் 13 ஆவது ஆண்டு (கி.பி 1176).*

குறிப்பு :—இறைசை நாயகன் வைத்த விளக்குக்கு முதற் பொருளான 16 காசுகள் இக்கல்வெட்டில் குறிக்கப் பெறுமை யின், இங்குத் தவறு நிகழ்ந்துள்ளதாகத் தெரிகிறது.

1 ஸ்வஸ்திஶ்ரீ கழுமுழு (கருவூரும்?) மதுரையுங் கொண்ட ராஜாதிராஜ தேவற்கு யாண்டு 13 ஆவது உடையாரூர் பாகங்கொண்டருளிய நாயநார்கு இரவை ஸந்தி திருமலைமேலேரியக்கடவுதாகதிருக்கோவலூரி லிருக்கும் வாணியந் வேளாள சூரியன் விளக்கு 1ம் இவந் மகன் சூரியன் செம்மாந் சோமான் தோழத் விளக்கு 1ம் ஆக விளக்கு இரண்டுக்கு இந்நாயநார் கோயில் காணியுடைய சிவப்பிராமணந் கோசிகன் நாரணகரியாந் இறைசை நாய

2 கமாந தோழந் விளக்கு 1 மாக விளக்கு 2க்குப் பசுவுக்கு குடுத்த காசு 32 இக் கோயில் சிவப்பிராமணரில் மாதாண்டாந் அழகியதேவன்கைக்கொண்டவிளக்கு 1ம் அதிகை நாயகபட்டன் விளக்கு ½ யும் குலோத் துங்கபட்டன் விளக்கு ¼ ம் நாநூற்றுவபட்டன் விளக்கு ¼ ம் ஆக விளக்கு 2க்கு ஒடுக்கிந காசு 32ம் எங்கள் காணி நாளே தலைச்சம்மாடாக ஸ(ம்)மதி(த்)தோம் இ(வ்)வனை வோம் இது சந்திராதித்தவற் பந்மாஹேஸ்வரர் ரக்ஷை.

# 41

*இரண்டாம் பிரகாரத்து மேற்குச்சுவர் — மூன்றாம் குலோத்துங்க சோழனின் 5 ஆவது ஆண்டு (கி.பி. 1183)* *157 of 1906.*

1 ஸ்வஸ்திஶ்ரீ புயல்வாய்த்த வளம் பெருகிட பொய்யாத நான் மறையின் செ(ய)ல் வாய்ப்பத் திருமகளும் ஜயமகளும் வீற்றிருப்ப வெண்மதி போல் குடை விளங்க வேல் வேந்தரடி பணியச் சக்கர

2 முஞ் செங்கோலுந் திக்கனைத்துங் காவல் பூண கற்ப காலம் புவி காப்ப பொற்பமைந்த முடி புணர்ந்து

செம்பொன் வீர ஸிம்ஹஸாநத்து உலகுடை முக்கோக்கிழாநடிகளொடும் வீற்றிருந்தருளிய கோ

3 ராஜகேஸரி பந்மரான ஸ்ரீதிரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 5 ஆவது கர்கடக நாயற்று மலாடான ஜநநாத வளநாட்டுப் பரனூர்க் கூற்றத்து பிரம்மதேய மிறையா நரையூராந ஸ்ரீ

4 சோழ கேரளச்சருப்பேதி மங்கலத்து உடையாரூர்பாகங் கொண்டருளியன் நாய நார்கு கூடலூர் அரசநாராயணன் ஏழிசை மோஹநை ஜநநைத கச்சியராயநேன் இன்னபநார்கு ஆண்டுதோறும் திருவ்வி

5 சூம் சாத்துகைக்கும் நித்தப்படி திருமேல் பூச்சுசாத்துகைக்கும் நான் விட்ட ... தன்மமாவது இவ்வூர்க் குடி இருக்கும் செட்டிகளும் வாணியரும் பணிசெய் மக்களும் உள்ளிட்டாரிநுக்கும் கீழிறை அந்த

6 ராயம் தறியிறை தட்டாரப் பாட்டம் எப்பேர்பட்டனவும் இன்னயநார் ஸ்ரீபண்டாரத்து ஆண்டுதோறும் இன்நாயநார் ஸ்ரீகாரியஞ் செய்வார் தண்டி ஸ்ரீ பண்டாரத்திலே ஒடுக்கி இயன்மம் சந்தரா

7 தித்தவற் செல்லக்கடவதாக கல்வெட்டி விட்டேன் கூடலூர் அரசநாராயணன் ஏழிசை மோகநாக ஜனனைதக் கச்சியரா (ய)நேன் இத்தம்மத்துக்கு அழிவு செய்வான் வல்லவரையன் ஸ்த்ய

8 ம் கம்கையிடை குமரியிடை சேய்தார் செய்த பாபங் கொள்வார் ஸந்திராதித்த வற் பந்மா ஹேஸ்வர ரக்ஷை.

# 42

*எலவானாசூர் ஓட்டைக் குளப்பாறை—வீரராசேந்திர சோழனின் (மூன்றாம் குலோத்துங்கன்) 6 ஆவது ஆண்டு (கி.பி. 1184) — 178 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர சோழ

2 தேவற்கு யாண்டு 6 ஆவது கிளியூர் மலையமான் சூரிய தேவன் நீர்

3 ஏற்றான் ராஜராஜ மலையகுலராயனேன் இறையா நரையூரா

4 ன ஸ்ரீசோழ கேரளசருப்பேதி மங்கலத்து நடுவிற் திருமுற்றத்தாழ்வா

5 ற்கும் திருமேற்கோயிலாழ்வாற்கும் ஸ்ரீபதரியாழ்வாற்கும் திருஸக்கர

6 த்தாழ்வாற்கும் ஓகையார்க்கும் (?) இதேவற்கு 6 வது நான் இறையிலியாக க

7 ல் வெட்டி விட்ட நில (ங்)களாவன புத்தூர் உள்ளிட்ட பிடாகைகளில் திருவி

8 டையாட்டங்களான நிலங்கள் நன்செய் புன்செய் உள்ளிட்ட எப்பேர்

9 பட்ட நிலங்கள் முற்றுக்கும் இறுக்கும் இறைகள் எப்பேர்பட்டனவும் குடிமை

10 களும் தவிர ஆ(ள)ஞ்சி தந்து இக்கோயில்களுக்கு அமுது படிகளுக்கும் திருப்

11 பணிகளும் ஸந்திராதித்த வரைக்கும் என்றுங் ஸம்ததிக்கும் நன்றாக இ

12 றையிலியாக கல்வெட்டி விட்டேந் ராஜராஜ மலையகுல ராயனேன் இய(ன்)

13 மத்திநுக்கு அழிவு செய்வார் தங்கள் அம்மைக்கு தாநே மிணுளன்,

# 43

எலவாஞுசூர்ச் சிவன் கோயிலின் இரண்டாம் கோபுரத்து இடப்பக்கத்திண்ணை – வீரராசேந்திர சோழனின் (மூன்ரும் குலோத்துங்கன்) 6 ஆவது ஆண்டு (கி.பி. 1184)— 172 of 1906.

குறிப்பு:-இதன் தொடக்கப் பகுதி மறைந்துள்ளது.

1 ......திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவீரராசேந்திர சோழதேவற்கு யாண்டு 6வது மகர நாயற்று பூர்வபக்ஷத்து துவிதியையும் திங்கட் கிழமையும் பெற்ற அவி(ட்டத்து)நாள்

2 ... சூரியன் நீரேற்ருஞந ராஜராஜ மலையகுலராயநேன் இன்நாயநாற்கு அமுதுபடிக்கும் திருமேற்பூச்சுக்கும் நாயநாற்கு நான்நீர் வார்த்துக் குடுத்த......

3 ... இவ்வூர் பணிசெய் மக்களும் உழவுக்குடி மக்கள் கோவிலிலே வெட்டி முட்டையாளும் நான்கொள்கிற எப்பேப்பட்ட தேவையும் செ(ய்)வார்களாகவும்......

*இரண்டாம் பிரகாரத்து மேற்குச் சுவர் — வீரரா சேந்திர சோழனின் (மூன்றும் குலோத்துங்கன்) 6 ஆவது ஆண்டு (கி.பி. 1184)—158 of 1906.*

1 திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு 6வது மகா நாயற்று பூருவ பக்ஷத்து த்விதியையும் திங்கட்கிழமையும் பெற்ற அவிட்டத்து நாள் மலாடா

2 னஜநநாத வளநாட்டு பரநூர் கூற்றத்து பிரம்மதேசம் இறையாநரையூரான ஸ்ரீசோழ கேரள சதுர்வேதி மங்கலத்து உடையார் ஊர்பாகங்கொண்டருளிய நாயநாற்கு இ

3 ன்நாடு உடையகிளியூர்மலையமான்சூரியன்நீரேற்ருனந இராஜராஜ மலையகுலராயநேன் இந்நாயனுற்க்கு அமுதுபடிக்கும் திருமேற் பூச்சுக்கும் நாயநாற்க்கு நான்நீர் வார்த்து கு

4 டுத்த இவ்வூர் ஸபையார் காணியான புத்தூரில் நான் கொள்கிற கடமையும் பாடி காவலும் ஸ்ரீபண்டா ரத்திலே ஊர்பாகங்கொண்டான் மரக்காலாலே இவ்வூர் காணி உடைய ஸ

5 பையார் அளன்து தரவும் கொள்ளக் கடவதாகவும் இவ்வூர் தறிஇறை தட்டாரப்பாட்டமும் இவ்வூர் பணிசெய் மக்களும் உழவுக்குடி மக்களும் கோயிலிலே வெட்டிமுட்டை

6 யாளும் நான் கொள்கிற எப்பேற்பட்ட தேவையும் செய்வார்களாகவும் இப்படி நன்செய்யால் வந்த கடமையும் நான் கொள்கிறபடியே ஸ்ரீபண்டாரத்திலே இச்ஸபையார் தங்க

7 டையா(லு)ள்ளது அளந்துதரவும் கொள்ளக் கடவதாக
கல்வெட்டிவித்தேன் இராஜராஜ மலையகுலராயநேன்
இத்தன்மம் அழிப்பான் தங்களம்மைக்குத்
தாநே மிணளன் வல்லவரையன் சத்

8 தி(ய)ம் கெங்கை இடை குமரிஇடை செய்தான்
செய்த பாவங்கொள்வான் இது பன்மாசேகர
ரக்ஷை ஆக இந்நான் கெல்லையுளகப்பட்ட
நன்செய் நில(ம்)முற்றும் விட்டது இப்படிக்கு திரு

9 சூலக்கல்லு நாட்டிக்கொள்க பன்மாஹேஸ்வர ரக்ஷை.

# 54

*முதற்பிரகாரத்துச் கிழக்கு சுவர்—வீரராசேந்திர சோழனின் (மூன்ரும் குலோத்துங்கன்) 7 ஆவது ஆண்டு (கி.பி. 1186)– 130 of 1906.*

1 திரிபுவநச் சக்ரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்திர சோழ
தேவற்க்கு யாண்டு ஏழாவ

2 து வாஸிஷன் ஸ்ரீகாஸ்யபந் பரமேஸ்வரன் வைத்த
ஸந்தி விளக்கு ஒந்று

3 க்கு குடுந்த காசு இருபத்தெட்டும் கைக்கொண்டு
எரி(க்)க டெவேந்ஆநே

4 ந் இக்கோயிலில் ஸ்தாநபதி ஸிவப்பிராமணந்
கோசிகந் சேட்டையன் தக்ஷி

5 ணாமூர்த்தி தில்லை மூவாயிர நம்பியேந் எந்காணியே
தலைசெ மாடாக எரிக்க க

6 டவந்ருநேந் இது சந்திராதித்தவற் பன்மாஹேஸ்வர
ரக்ஷை.

# 46

*வெளிப்பிரகாரத்து மேற்குச்சுவர்—மூன்ரும் குலோத்துங்க சோழனின் 13 ஆவது ஆண்டு (கி பி. 1191)—502 of 1937—38.* இக்கல்வெட்டு பெரிதும் சிதைந்துள்ளது.

1 ஸ்வஸ்திஸ்ரீதிரிபுவநசக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு 13 ஆவது திருக்கோவலூருடைய

2 கிளியூர் மலையமான் சூரியதேவர் நீரேற்ருநான... இரா(ஜ)ரா(ஜ)

3 தேவன் பொந் பரப்பிருநான குலோத்துங்க சோழ வாணகோவரையநேன் கல்லுவெட்டிக் குடுத்ததாவது எங்களில்...நிற்கு...பத்து

4 நுக்கு...எனக்கு...கடவதாகவும் கிழக்கு நாநிரு(க்)கு

5 மிடத்துக் கல்லியாண புரத்துக்கு வடக்கு இவர்க்கு நிற்கவும்...கடவதாகவும்...

6 மிவற்கு வினை உண்டாயத்தாகில் என் முதலிகளும் படையுங் குதிரையும் புகவிட்டு என் வினையாக ஏற்பேநாகக்...கட்டுவேநாக...நோக்குப்பட்டு தில்லையாகில் நான்...

7 வேநாகவும் எனக்கும் வினை உண்டாயத்தாகில் இவரும் தம் முதலிகளும் படையும் குதிரையும்...

8 க்குப் பரிசாகக் கடவதாகவும் இப்படிக்கு இவற்குத் தப்பிநே நாகில்...ஊர்பா

9 கங்கொண்டருளிய நாயனுர் கோயிலிலே கல்வெட்டிக் குடுத்தேன்...இவை குலோத்துங்க சோழ வாணகோ வரையந்...

# 47

*அம்மன் கோயில் கிழக்குச் சுவர் மூன்றும் குலோத் துங்க சோழனின் 30வது ஆண்டு (கி.பி. 1206) – 489 of 1937 – 38*

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு

2 30வது ஸிங்க நாயற்று அபரபக்ஷத்து தெசமியு(ம்) நாயற்றுக் கிழமையும் பெற்ற

3 திருவாதிரை நாள் மலாடான ஜநநாத வளநாட்டுப் பரநூற் கூற்றத்து பிர

4 ம்மதேயம் இறையாநரையூராத ஸ்ரீ சோழகேரளச் சதுப்பேதி மங்கலத்து மஹா

5 ஸபையும் ஸ்ரீமாஹேஸ்வர...ஸ்ரீ...ஸ்ரீ...ரும் ஸ்தாநபதி களுமெழுத்து உடை

6 யார்ஊர்பாகங்கொண்டருளிய நாயனார் தேவரடியார் தங்களுக்கு இ

7 நாயனார் கோயிலில் ஆடல் பாடலுள்ளிட்ட சேவகங்களுக்கு தங்களுக்கு ஜீ

3 விதமாக இட்ட ஊராவது இநாயநார் தேவதாநம் அரும்புலிப்பாடியாந இரா

9 ஜராஜ மங்கலம் நான்கெல்லையுட்பட்ட (நன்செ(ய்) புன்செ(ய்) நத்தம் பயன்மரங்களு

10 ட்பட்டன எப்பேறபட்டனவுந் தங்களுக்கு ஜீவித மாக விட்டுது இதுப

11 ந்மாஹேஸ்வர ரக்ஷை.

## 48

*சிவன் கோயில் முதற்பிரகாரத்து வடக்குச் சுவர்—மூன்றும் குலேகத்துங்க சோழனின்—ஆட்சி ஆண்டு சிதைந்துள்ளது. 150 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு...
2 ...னேன் என்பி தவப்புகழன் பேதயானுக்கு ந
3 ன்றுக உடையார் ஊர்பாகங் கொண்டருளிய
4 நாயனுற்கு நாடோறும் இரவை ஸந்திக்கு எ
5 ரிவுதாக வைத்த திருவிளக்கு ஒன்று இதுக்கு இ
6 க் கோயிலில் ஸ்தாநபதி ஸிவப்பிராமணன் கௌசிக
7 ன் சேட்டயன் தக்ஷிணுமூற்தியான தில்லைமூவாயிரப
8 ட்டன் பக்கல் குடுத்த காசு 16 இக்காசு பதின்...
9 மாஸந்தோறுமிறும் பொலிசைக்கே யிந்த ஸந்தி
10 விளக்கொன்றும் நித்தமும் எரிவுதாகவும் வெ...
11 டைய இக்கோயிலில் அறுபதுவட்டத்து...தன்னுடைய
12 காணி(நா)ளேய் தலேச்செய் மாடாவுதாக கல்வெட்டுவி
13 த்தேன் சிந்தைக்கினியானேன் இது சந்திராதித்தவ
14 ற் பன்மாஹேஸ்வர ரக்ஷை.

## 49

*இராசகோபுரவாயிலின் இடப்பக்கச் சுவர் மூன்றும் குலோத்துங்க சோழன்—498 of 1937-38.*

1 ஸ்வஸ்திஸ்ரீ இக் கோபுரமுன் திருமாளிகையுஞ் செ

2 ய்வித்தான் கிளியூர் மலெ(ய)மான் சூரிய நீரேற்றுறை
எதிரிகள்

3 நாயநாந ரா(ஜ)ரா(ஜ) மலெய குலராயநேன் உ.

# 50

*வெளிப்பிரகாரத்து மேற்குச் சுவர்—இதுவும் அடுத்து வரும் நான்கு கல்வெட்டுகளும்; வேளக்காரப்படையினரின் உறுதிமொழிகள்—500* of *1937-38*

1 எதிரிகள் நாயன் வேளக்காறன் திரிகை உடையான்
எதி(ரி)கள் நாயனுக்கு பி

2 ன்பிருப்பான் தங்களம்மைக்குத் தாநே மணாளன்
எதிரிகள் ஞயனெ தவிர

3 என்னெ சேவகங்கொள்வாந் தம்மிணாட்டிக்கு
என்னெ மிணாளநாக கொ

4 ள்வான்.

# 51

*வெளிப்பிரகாரத்து மேற்குச் சுவர்—501* of *1937–38:*

1 எதிரிகள் நாயனுக்கு மொட்டயராய் வேளெபுக்கு
சாவாதே

2 போவார் மிணாட்டி மிணாளந் தேவப்பிள்ளெ எதிரிகள்

3 நாயனுக்கு பிந்புஇருந்தேன் நாகில் எங்கள் அம்மைக்கு
ஞனே

4 மணாளந்

# 52

*வெளிப்பிரகாரத்து மேற்குச் சுவர்*

1 எதிரிகளுயனுக்கு வேளாபுக்கு எதிரிகளுயனுக்கு பிந்பு இ

2 ருக்கும் வேளாக்காற மிணாட்டி மிணாந்
ஆள்ளுடையாந்நேன்

3 நானும் எதிரிக நாயகநுக்கு பிந்பு இருந்தேநாகில்
எந்நுடப்பிறந்

4 தாளுக்கு நாநே மிணாந் மொட்டையாய் கல்லு
வெட்டி....திருக்...
[இதன் பிற்பகுதி சிதைந்துள்ளது]

# 53

*வெளிப்பிரகாரத்து மேற்குச் சுவர்*

1 எதிரிகள் நாயநுக்கு வேளாபுக்கு எதிரிநாயநுக்கு
பிந்பு இருக்கும்

2 வேளாக்காறர் மிணாந் சூரியநேன்
நானும் எதிரிகநா

3 யகனுக்கு பிந்பு இருந்தேளுகில் எந்
உடப்பிறந்தாளுக்கு நாநே

4 மிணாந்.

# 54

*வெளிப்பிரகாரத்து மேற்குச் சுவர் மூன்ரும் குலோத் துங்க சோழன் 156* of *1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ (இராஜ)ரா(ஜ) மலையகுலராயநான
நீரேற்ற பெருமாளான எதிரிகள் நாயநுக்கு

2 இவ்வேளக்காறியான தேவப்பெருமாளேன் எதிரிகள்
நாயனுக்குப் பின்பு இருந்தேநாகில் என்மாடு
ஓட்டிமாற்கு மண்டைய்யுமிட்டுஇ

3 வர்களுக்கு நீருங்குடுத்து இவர்கள் கலச்சோற்றையும்
உண்கிறேன் என்மிணுளன் ஒடு என்(னை)ச் சாவ
வேண்டாமென்பார் என் மி

4 ணுளன் ஏறுகிற குதிரைக்குப் புல்லு இடும்
காமிகந் எதிரிகன் நாயக முதுமையானுக்கு
தன் மிணுட்டியையுங் குடுப்பான் நா

5 ந்செயாதிருந்தே நாகில் என்னை நெருப்பில்கட்டி
புகடுதல் கொல்லுதல் செய்தவன் தன்னெட்டை
யாற்கு தந்மிணுட்டியையுங் குடுத்துஎன்

6 மிணுளன் ஏறுகிற குதிரைக்கு புல்லு இடுகிற காமிச
நான எதிரிகள் நாயக முதுமையானுக்கு தன்
மிணுட்டியை குடுப்பான் என்னைக் கண்டால் கொல்
லாதான்.

# 55

*இரண்டாம் பிரகாரத்து மேற்குச் சுவர் — இதன் தொடக்கப் பகுதி காணப்படவில்லை. 484* of *1937 – 38.*

1 (மு)ன்ன தரையந் அசல குலோத்துங்கனை ராஜராஜக்
காடவராயனேந் கல்வெட்டி விட்ட

2 படியாவது இன்னையனூர் தேவதான ஊர்களிற் பாசான முந் தாளமறியும் புன்சையுங் காசா

3 யங்களும் வெட்டி முட்டையாட்களும் மற்றுமெப் பேற் பட்ட உடல்களும் இன்னையனூற்

4 கு அமுதுபடி திருவிளக்குத் திருமேற் பூச்சுத் திருப்பரி சட்ட முள்ளிட்ட வெஞ்சனங்களுக்குந் திருநாள்

5 படிகளுக்கும் அசலகுலோத்துங்க...திருப்பணிக்கு முட லாக விடவேணுமென்று

6 இவூர் சிவபிராமணரில் கவுசிக(ன்) இறைசை நாயகன் ஊர்(பாகங்) கொண்டானான சோழகேர

7 ளபிரமமாராயன் சொல்ல இப்படி சந்திராதித்தவரை செல்வதாகக் கல்வெட்டி விட்டே

8 ன்கூடலூர் முனையதரையன் அசல குலோத்துங்கனான ராஜராஜக் காடவராயனேந் இத்தன்மம

9 றிவு செய்வான் கெங்கையிடை குமரியிடை செய்தார் செய்த பாவமெல்லாங் கொள்வான் இ

10 ..... நியாயத்தாரும் பன்மாஹேஸ்வரரும் ரக்ஷை.

*முதற்பிரகாரத்துத் தெற்குச் சுவர்—மூன்றாம் இராச ராச சோழனின் 10 ஆம் ஆண்டு (கி.பி.1226)—138 of 1906.*

1 திருபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு 10 ஆவது ஆடி மாஸத்து மலாடாந ஜகநாத வள நாட்டுப் பரநூற் கூற்றத்து

2 பிரம்மதேயம் இறையாநரையூராந ஸ்ரீசோழ கேரள சதுபேதி மங்கலத்து ஊர்பாகங் கொண்டருளின மஹாதே

3 வற்கு இந்நாட்டு வடநரையூர் கூற்றத்து வாணபிராட்டி யிலிருக்கும் ஆறிக்குளத்தூருடையான் முடிகொண்

4 டான்காரியாந வீரபாலநேன் இந்நாட்டு இக்கூற்றத்து இலச்சி மகத்திருக்கும் புஞ்ச நூற் பள்ளிபடியன் சுந்த நா

5 ந புஞ்ச நூற் போயன் மகன் திலலையாந் ஆருயிரப் போயநுக்காக நான் திருநுந்தா விளக்கு வைத்த பரிசாவது

6 நான் பன்றிகொண்டு இராப்பார்வை வேட்டை போந இடத்துப் பன்றியை எய்யாநிற்கப் பிழைத்து இத்

7 தில்லையாந் ஆருயிரப் போயனை அம்புபட்டுப் பட்டமை யில் இவநுக்கு நன்ருக இதேவர் கோயில் நா

8 ன் வைத்த திருநுந்தா விளக்கு ஒன்று ஒன்றுக்கும் முப்பத் திரண்டும் பசு ஸ்ரீபண்டாரத்திலே ஒடுக்கி நமையில்

9 இவநொடுக்கிந யிப்பசு முப்பத்திரண்டு மொடுக்கிவித் துக்கொண்டு இத்திருநுந்தா விளக்கொன்றும் ஸந்தி ராதித்தவற்

10 செல்லக் கடவதாகக் கல்வெட்டுவித்தது இது பன்மா ஹேஸ்வர ரக்ஷை.

# 57

*இரண்டாம் பிரகாரத்து மேற்குச் சுவர் — கோப் பெருஞ்சிங்கனின் 30 ஆவது ஆண்டு (கி.பி. 1273) —*
South Indian Inscriptions, Vol. XII, No. 234 (154 of 1906)

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸிரீமத் கீர்த்தி முன்பாக சகல புவநச் சக்கர வத்திகள் ஸ்ரீகோப் பெருஞ்சிங்க தேவற்க்கு யாண்

2 டு முப்பதாவது துலா நாயற்று அபர பக்ஷத்து திரதியை
யும் திங்கள் கிழமையும் பெற்ற கார்த்தி

3 கை நாள் மலாடாகிய ஜநநாத வளநாட்டுப் பரனூர்க்
கூற்றத்து பிரம்மதேயம் இறையா

4 னரையூரான ஸ்ரீசோழகேரளச் சதுர்ப்பேதி மங்கலத்து
உடையார் ஊர்பாகங்கொண்

5 டருளிய மஹாதேவற்க்கு வாண கோவரையர் வன்
னெஞ்ச நாயனூர் மாம்பட்டில் ஊர்க்கழனி

6 யில் இரண்டாவது முதல் விட்ட நிலம் ஒரு வேலிக்கு
எழுதின திருமுகப்படிக்கு கல்வெட்டுவி

7 த்தப்படி இறைவானரையூர் ஊர்பாகங்கொண்டருளிய
ஞ(யந)ா(ர்)க்கு இரண்டவது முதல் மாம்பட்டு ஊ

8 ர் கழனியில் விட்ட நிலம் ஒரு வேலியும் பூஜைக்கும்
அமுது படிக்கும் வெஞ்ஜனங்களுக்கும் அனைத்தா(ா)
யங்களும் ஆ

9 ள் அமஞ்சி தேவை எப்போறப்பட்டனவும் இழந்து இந்
நாயனூரே கெ(ா)ள்ளக் கடவதாகக் குடுத்தோம் இப்

10 படிக்கு கல்வெட்டிவித்துக் கொள்வதே இப்படிக்குவாண
கோவரையர் எழுத்து கே(ள்)வி முதலிகளில் சி

11 ங்களராயரும் இராஜவீர ராயரும் இராஜேன்திர சோழ
பிரம்மராயரும் புரவரியாரும் எழுத்து திருமன்திர
ஓலை

12 எழுதும் விழுப்பாத ராயர் எழுத்து இப்படிக்கு பன்மா
ஹேஸ்வர ரகைஷ.

# 58

*இரண்டாம் பிரகாரத்து மேற்குச் சுவர் — கோப் பெருஞ் சிங்கனின் 30 ஆவது ஆண்டு (கி. பி 1273)—* (South Indian Inscriptions, Vol. XII, No. 235 (159 of 1906)

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமத் கீர்த்தி முன்பாக சகல புவநச் சக்கர வத்திகள் ஸ்ரீகோப் பெருஞ்

2 சிங்கதேவர்க்கு யாண்டு முப்பதாவது துலா நாயற்று அபரபக்ஷத்து

3 திரதிபையும் திங்கள்கிழமையும் பெற்ற கார்த்திகை நாள் ம

4 லாடான ஜனநாத வளநாட்டுப் பரனூர்க் குற்றத்து பிரம்மதேயம் இறை

5 யானரையூரான சோழ கேரளச் சதுர்பேதி மங்கலத்து உடையார் ஊர்பாகங்கொ

6 ண்டருளிய மஹாதேவற்கு பொன் பரப்பின வாண கோவரையர் மாம்பாட்டில் பு

7 த்தேந்தல் கழனியில் மூன்ருவது முதல்விட்ட நிலம் ஒரு வேலிக்கு எழுதின

8 திருமுகப்படிக்கு கல்வெ(ட்)டு இறைவானரையூர் ஊர்பக்கங்கொண்டருளிய நாயனுர்க்கு

9 மூன்ருவது முதல் மாம்பட்டு புத்தேந்தல் கழனியில் விட்ட நிலம் ஒரு வேலியும் பூசைக்கும் வெஞ்

10 சனங்களுக்கும் அனைத்தாயங்களும் ஆள் அமஞ்சி தேவைஎப்பற்பட்டனவும்கொள்ளக்கடவதாக குடுத்

11 தோம் இப்படிக்கு கல்வெட்டிவித்துக் கொள்வதே இப்படிக்கு வாணவதரையன் எழுத்து கேழ்விமுத

12 லிகளில் சிங்களராயரும் மதுராந்தக பிரம்மராயரும் குருகுலராயரும் புரவரியாரும் எழு

13 த்து ஓலை எழுதும் பொன்பரப்பின வேளான் எழுத்து இப்படிக்கு மன்மாஹேஸ்வர ரக்ஷை.

## 59

*இரண்டாம் பிரகாரத்து மேற்குச் சுவர்—155* of *1906*.

1 ஸ்வஸ்திஸ்ரீஇறையாநரையூராந ஸ்ரீசோழ கேர(ள)ஸதுபேதி மங்கலத்து உடை

2 யார் ஊர் பாகங்கொண்டருளிய நாயநாயநார் கோயிலு கூம் ஊர்பாடி காவல் காணி உடையாந்

3 சவபையான் வரையன் வங்சத்தில் உள்ளார் ஊர்பாகங் கொண்ட பே(ரரை யநும் நாநூற்றுவ பேரிருரெய

4 னும் வங்சத்தார்...பாடி காவல் காணி உடையார்

## 60

*முதற்பிரகாரத்து திருச்சுற்றுமாளிகையின் தெற்குச் சுவர் — சடையவர்மன் வீரபாண்டியனின் 8 ஆவது ஆண்டு (கி. பி 1261)*

1 ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடைய பன்மரான திரிபுவனச்சக்கர வத்திகள் ஸ்ரீவீரபாண்டியதேவற்குயாண்டு 8ஆவது கற்கட நாய

2 ற்று பூறுவ பக்ஷத்து சதுத்தஸியும் வியாழக்கிழமையும் பெற்ற திருவாதிரைநாள் மலாடாந ஜனநாத வளநாட்டுப் பானூர்

3 க்கூற்றத்து பிரம்மதேயம் இறையானரையூரான்
ஸ்ரீசோழ கேரளச் சதுர்வேதி மங்கலத்து உடையார்
ஊர்பாகங்கொண்டரு

4 ளிய நாயனுர் கோயில் ணதிஸ்வர தேவகந்மி கோயிற்
கணக்கற்கு இவ்வூர் ஸபையாரில் ஹாரிதந்

5 டாரும் ஹாரிதன் திருவரங்கன் நீரேற்ற பெருமாளான
சங்கரநாராயணபட்டந் உள்ளிட்டாரும் திரு
நாமத்துக் காணியாக விலைப்ரமாணம் பண்ணிக்குடு

6 த்த பரிசாவது இந்நாயனுர்க்கு குடிநீங்காதேவதானமாய்
எங்கள் உள்ளிட்டார் கணியான மலையனுரான
இராசராச மங்கலம் பெருமாள் வக்கிரம பா

7 ண்டிய தேவற்க்கு ஏழாவது வரையும் நாங்கள் காணி
யாண்டு அனுபவித்து பெருமாள் வீரபாண்டிய
தேவற்கு நாலாவதுமுதல் இவ்வூர்ராஜாக்கிரமநட்டி

8 க்கு நீக்கி பத்துஅஞ்சு இறுக்கவேண்டுகையில் எங்களில்
ஆற்றுமைபோகட இப்படிப்போகையில்இக்கோயிற்
தாணத்தாரைப் பிடித்துக் கோ

9 யிற்பண்டாரத்தே இவ்வூர் நட்டிக்கு ஏழாவது வரையும்
இறுப்பித்துக் கொள்ளுகையில் எட்டாவது நாளில்
எங்களைப் பிடித்து இவ்வூர்க் காணியா

10 ணகடமை குடிமையும் இறுத்து ஏழாவது வரையும்
இவ்வூர்க்கு இரஜாக்ர(ம) நட்டிக்கு இறுத்துடை
மையும் பெற வேண்டுமென்று சொல்

11 லுகையில் இவ்வூர் எங்களில் காணியாண்டு இவ்வூர்க்கு
நிச்சயித்து பொன்னும் நெல்லும் எங்களால் இறுக்க
ஒண்ணுதபடியாலும் ஏழா

12 வதுவரையும் இவ்வூர்க்கு கோயில்ப் பண்டாரத்தாரைக்
கொண்ட நட்டி இறுக்க ஒண்ணுதபடியாலும்
நாங்கள் திருநாமத்துக் காணியாக

13 விற்றுக் குடுத்தபடி பரிசாவது முன்னாள்விக்ரமபாண்டிய
தேவர்க்கு ஏழாவது வரைக்கு செல்வ...சிகை
ஏழாவதுக்குப் பணம் 637ம் பெரு

14 மாள் வீரபாண்டி(ய) தேவற்கு நாலாவதுக்கு நட்டி
பணம் 631ம் அஞ்சாவது நட்டிக்குப்பணம் 900ம்
ஆருவது நட்டிக்குப் பணம் 385ம் ஏழாவது நட்டி

15 க்குப் பணம் 547ம் ஆக பணம் 3100 இப்பணம்
மூவாயிரத்து ஒரு நூறும் எங்களால் இறுக்க
ஒண்ணாதபடியாலும் எட்டாவது முதல் காணியா

16 ண்டுகடமை குடிமை இறுக்கமாட்டாதபடியாலும்
இவ்வூர் திருநாமத்நுக்காணியாக இப்பணத்துக்கு
விலையாவதாகவும் இப்படி திருநாமத் துக்கா

17 ணி யானமைக்கு கல்லிலும் செம்பிலும் வெட்டிக்
கொள்ளக் கடவதாகவும் இப்படி சம்மதித்து திருநா
மத்துக் காணியாக விலைப்ரமாணம் ப

18 ண்ணிக் குடுத்தோம் உடையார் ஊர்பாகங்கொண்ட
ருளிய நாயனார் கோயில் ஸ்வரதேவகன்மி கோயிற்
கணக்கற்கு ஹாரிதன்...

19 உள்ளிட்டாரும் ஹாரிதன் திருவரங்கன் நீரேற்ற பெரு
மாளான சங்கரநாராயணபட்டன் உள்ளிட்டாரும்
இவ்வனைவோம்

20 இப்படிக்கு இவை ஹாரிதன் உஞ்சசிர நீரேற்றுந் எழுத்து
இப்படிக்கு இவை ஹாரிதன்...எழுத்து இப்படிக்கு

21 இவை ஹாரிதன் மலையனூர் பட்டர் வரதர் எழுத்து
இப்படிக்கு இவை ஹாரிதன் பட்டன் சிம்ஹதேவன்
...இப்படிக்கு

22 ஹாரிதன்...அருளாளன் எழுத்து...நாராயண பட்டன் எழுத்து

23 இப்படி அறிவேன் வராகபட்டனேன் இப்படி அறிவேன்...தேவன் வரதராஜபட்டன்...

# 61

*முதற்பிரகாரத்துத் திருச்சுற்றுமாளிகையின் தெற்குச் சுவர்—சுந்தரபாண்டியனின் 14ஆவது ஆண்டு (கி பி. 1265-) 482 of 1937—38.*

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமது...மேல் கோனேரி மேல் கொண்டான் திரிபுவனசக்கரவத்திகள் ஸ்ரீ

2 சுந்தரபாண்டியதேவற்கு யாண்டு 13வதுக்கு எதிராமாண்டு மலாடாகிய ஜநநாத

3 வளநாட்டு பரனூர்க் கூற்றத்து பிரம்மதேயம் இரையான ரையூரான ஸ்ரீசோழ கேரளச் சதுப்பேதி

4 மங்கலத்து உடையார் ஊர்பாகங்கொண்டருளிய ஞய நார் கோயிலில்

5 ஸ்வரர்...உடையான் பொன்னின்சிவந்தானை திருமுடிக் காரி ஏறி அருளப்பண்

6 ணின சொக்க நாயனார்க்கும் உடையார்க்கும் அமுதுபடி சாத்துப்படிக்கும் நம்மவிட்ட ஊர் கீழாமூ

7 ர்கூற்றத்து இவன்காணிஆந வேங்கைபாடிநான்கெல்லை உட்பட்ட நன்செய் புன்சை நத்தம்

8 ஏறிவாய் ப் புறவடை ஏந்தல்ப்பற்று கள(ர்)நீர்நிலை மர நிலை உள்ளிட்ட...மங்களும் உள்ளூர் நாயநா

9 ர்தேவதானம் திருவிடையாட்டம் இந்நாயமார்க்கு பூசைச்கு ஒன்று பாதி நீக்கி உள்ள முதல் இ(வ்)வா

10 ண்டுமுதல் குடிநீங்கா தேவதான இறையிலியாக் தந்தோம் இத்தால் வரும் கடமை குடிமை இ

11 னவரி அன்தராயங் தரவிநியோகம் காத்திகை...

12 டம்தறி இறை தட்டாரப்பாட்டம் செட்டிறை செக் கிறை ஏரிமீன்பாட்டம் மரவடை வெ

13 ட்டிமுட்டை ஆள் நல்லெருது நலப்பசு உள்ளிட்ட வெற்பேற்பட்ட அறைத்தாய

14 ங்களும் சந்திராதித்தவரையும் செல்வதாக தந்தோம் இப்படிக்கு கல்லு

15 வெட்டிக்கொள்க ..நெட்டூர் உடையான் காலிங்கராயன் எழுத்து

16 இவைவெட்சி உடையான் முனையதரையன்எழுத்துநாள் 217வது பன்மா

17 ஹேஸ்வர ரக்ஷை.

# 62

*முதற் பிரகாரத்துத் திருச்சுற்று மாளிகையின் தெற்குச் சுவர்—விக்கிரம பாண்டியனின் 4ஆவது ஆண்டு* **(*கி.பி. 1272*)**

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமக...முன்றுகசோனேரிமேல்கொண்டான் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவிக்ரம பாண்டிய தேவற்கு

2 யாண்டு 4வது நால் 245 நூலாந இவ் மண்டலத்து மலா டாந ஜநநாப வளநாட்டுப் பரனூற் கூற்றத்து பிரம்ம

3 தேயம் இறையாநரையூரான ஸ்ரீசோழ கேரள சதுப்பேதி மங்கலத்து உடையார் ஊர்பாகங்கொண்டருளிய ஞய (நார்க்கு ந)

4 ம் பேரால் கட்டிந இராஜாக்கள்ஞயன் சந்திக்கும் பிறந்த ளுொந அத்தத்திக்கும் எழுந்தருளுந் திருளுளுக்கும் அமுதுபடிக்கும்...

5 படிஉள்ளிட்ட நித்த நிமந்தங்களுக்கு முடலாக இன்ஞய ஞர் தேவதானமாய்க் காருடல் புறமுதல் திறப் ப(ட்)டன கூட்டிப் போந்த பருந்தலான மலை

6 யவிச்சாதிரி நல்லூர் சீயமங்கலம் புத்தூர் மலையனூரான இராஜராஜ மங்கலம் நெடுமானூர் அரும்புலிபாடி யான இராஜராஜ மங்கலம் (நல்லரை)

7 சூர் தாயனூர் பிச்சாண்டான் குறிச்சி நிறையூராந அந்தணற்கு நீரேற்ற பெருமாள் நல்லூர்வாள்முறை யேந்தல் மருதேந்தல்

8 மனேந்தல் பிராயேந்தலும் இறையானரையூர்த் திருப்பள்ளி எழுச்சிப்புறமும் ஆகஇவ்வூர்களில்நாம் கொண்ட...முதலும்...

9 றமுதல் கூற்றிலக்கையும் மலையனூரான இராஜராஜ மங்கலத்திலும் சீயமங்கலத்திலும் நாம்கொண்ட பசான முதலும் புறமும் கூற்றி

10 லக்கையும் ஆக இவ்வூர்களில் தறிஇறை செட்டிறை செக்கிறை குளவடை மரவடை வெட்டிமுட்டையா ளும் இறையாநரையூர்

11 கடமையும் செட்டிறை செக்கிறை குளவடை மரவடை ஆகஇவ்வூர்களில் நான்கெல்லை உள்ளாகப்பட்ட கார் பசானமும்...

12 செயும் இவ்வூர்ப் பிடாகைப் பற்றிலும்...இன்னுயனுர் தேவதானமாய் உட்கிடையான நிலங்களிலும்...

13 கார்முதலும் புறமுதல் கூற்றிலக்கையும் இச்சந்திக்கும் திருநாளுக்கும் முதலடங்க இறையிலியாகப்பெறவும் இன்னிலந்...

14 கடமை பொன்வரி காசாயம் காத...கைப் பச்சை கீற்று வரி நல்லெருது நலப்பசு உள்சிவாசி... சந்துவிட்...

15 வினியோகம் காரிய ஆட்(?) சீகாரியம் பெறுமேற்பாடி காவல் தட்டொலிபாட்டம் பட்டித்தெண்டம் குற்றத்தெண்ட மற்றி(ப்பே)

16 ற்பட்ட அனைத்தாயவற்கங்களும் உட்பட நாலாவது பங்குனி மாத முதல் முதலடங்கல் இறையிலியாகத் தந்தோம் இப்படி (பிடி)

17 பாடாகக் கொண்டு சந்திராதித்தவற் செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொண்டுஇவ்வூர்கள் நான்கெல்லை...

18 நம்பண்ணிக் கொண்டு அனுபவித்து...

# 63

*முதற்பிரகாரத்துத் திருச்சுற்று மாளிகையின் வடக்குச் சுவர்—மாறவர்மன் வீரபாண்டியனின் 7ஆவது ஆண்டு [கி.பி. 13ஆம் நூற்ருண்டு] 160 of 1906.*

1 ஸ்ரீமற்கித்த மேல் கோமாறபன்மர் திருபுவனசக்கரவத்தி ஸ்ரீவீரபாண்டியதேவற்கு யாண்டு 7வது து

2 லாநாயற்று அமரபக்ஷத்து அத்தஸியும் வெள்ளிக் கிழமையும் பெற்ற ஜவ(ா) நாள் மலாடான ஜன

3 ஞத வளநாட்டு பரனூர்க்கூற்றத்து பிரம்மதேசம்
இறையானரையூரா(ன) ஸ்ரீசோழ கேளர சதுப்பேதி
மங்கலத்து உடையார் ஊர்பாகங்கொண்டருளிய
நாயனர் கோயிலில் ஸ்ரீமகேஸ்வரான-செ(ய்)வார்
(க்கும்)

4 தானத்தார்க்கு(ம்) தேவகண்மிகோயில் கணக்கும்
திருமுணைப்பாடி நாட்டு திருநாவலூர் வியாபாரி
களில் பாளூர் கிழவன் ஆட்கொண்ட தேவன்
தொண்டப்பிள்ளை என் இன்னயனற்கு ப

5 த்தாந் திருநாளில்...முதலியார் திருவளந்தல் எழுந்தருளி
ஏற்று அருளி ஸ்தானமண்டபத்து எழுந்தருளி
இருந்து தீத்தம் ஆஸாதித்து அருளி இற்றைநாள்
நாயற்பொழுது எழு

6 ந்தருளப் பண்ணுகிற உபையத் திருப்பவனிக்கு ஆடி
அருளவும் அமுதுபடிக்கும் சாத்துப்படிகளுக்கும்
நிச்சயித்த திருமேற் பூச்சு பனிநீர் கத்தூரி கற்பூரம்
குங்குமம் திரு

7 ச்சாந்து செங்கழுநீர் திருப்பள்ளித்தாமம் வெள்ளைதாறு
திருப்பள்ளித்தாமம் அமுதுபடி கறி அமுது படிக
ளுக்கும் திருமாளிகை எழுந்தருளித் திருவுலா

8 ச்செய்தருள திருவிளக்கெண்ணைக்கும் உடலாகதிருநாள்
ஒன்றுக்கு அடங்கலுக்கு நிச்சயித்த பணம் பத்து
ஆண்டு ஒன்றுக்கு திருநாள் நாலுக்கு நி

9 ச்சயித்த பணம் 40 இப்பணம் நாற்பதுக்கு உடலாகக்
கொண்டு குடுத்த இவ்வூர் சபையாரில்
எடுத்தமுகியாரான சோமதேவபட்டர் பிடாகை
கடமையாற்ற மாட்டா

10 மல் ஓடிப்போகையில் இவர்போக கடமைக்கு இவர்க்கு
புணைப்பட்ட புணையாளர் இன்னயனர் குடிநீங்கா

தேவதானமான கடமைப் பற்றில் இவர்காணியான நிலம்

11 விற்கையில் இவர்கள் பக்கல் நான் விலைகொண்ட
வேப்பஞ்செய் தடி ஒன்றும் களரி தடிஒன்றும்குளச்
செய் தடி ஒன்றும் குண்டில் தடி ஒன்றும் ஆகத் தடி

12 நாலினால் மிகுதிக் குறை8 உட்ப்பட்ட நஞ்செய் குழி1250
இக்குழி ஆயிரத்து இருநூற்று ஐம்பது இருநாமத்துக்
காணியாக இக்கோயிலில் தானத்தார் கைக்
கொண்டு தானத்

13 தார்குடிக்கடைத்து இந்நிலம் கார்பாசனம் உள்ளிட்ட
இவை வாரங்கொண்டு இன்னிலத்தால் வரும்
கடமை இறை நீக்கி நீக்கி இறை மிகுதியாலுள்ள
பண்டங்களும் கை

14 கொண்(டு) இந்த உபையத்துக்கு நிச்சயித்த திருநாள்
நாலுக்கும் பண(ம்) நாற்பதுக்கும் இந்நிலத்தில்
பண்டமேகொண்டு கோயில் பண்டாரத்திலே

15 இட்டு சந்திராதித்தவரையும் இப்படிகொண்டு எழுந்
தரு(ளு)விப்பதாக இத்தடி நாலுகுழி ஆயிரத்து இரு
நூற்றும் ஐம்பதும் விலைகொண்டு திருநாமத்துக்
காணியாக கல்வெ

16 ட்டிக் குடுத்தேன் பாலூர்கிழவன் ஆட்கொண்டதேவன்
தொண்டப்பிள்ளை ஏன் இவை தொண்டப்பிள்ளை
எழுத்து இது சந்திராதித்தவற் பந்மாஹே

17 ஸ்வர ரக்ஷை உ.





உட்புற கோபுரம்
சந்திர சேகரர் (செப்புத் திருமேனி)
உமாதேவியார்

# 64

*எலவானூருக்கு அண்மையிலுள்ள குஞ்சரம் என்னும் சிற்றூர்—ஸ்ரீசைலேஸ்வரர் கோயிலின் தெற்குச் சுவர்—மாறவர்மன் வீரபாண்டியனின் 14ஆம் ஆண்டு (கி. பி. 13 ஆம் நூற்றாண்டு)*

குறிப்பு:—இக்கல்வெட்டுப் பகுதி உள்ள கற்பலகைகள் மூன்றும் இடம் மாறி அமைந்துள்ளன. இறுதிப் பகுதி கிடைக்கவில்லை.

1 ஸ்வஸ்திஸ்ரீ சீமந்...மேல் கோமாறபன்மரான திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ

2 வீரபாண்டிய தேவற்கு யாண்டு 14 வது துலா நாயற்று பூர்வ பக்ஷத்து

3 ...வியமும் திங்கட் கிழமையும் பெற்ற சதையத்து நாள் பாண்டி நாட்டு

4 ...மதுரையில் ஆவண வீதிப் பெருந் தெருவில் இருக்கும்

5 கைக்கோளரில் பஞ்சவராயன் பெரியானான இலங்கேசுவர தேவனேன்

6 மலாடாகிய ஜனநாத வளநாட்டுப் பரனூற் கூற்றத்து இறையாநரை

7 யூர் பிடாகை குஞ்சிரத்து உடையார்திருக்குன்றமுடைய நாயனார்க்கு ஏறி அருளப்பண்ணின

8 திருக்காம கோட்டமுடைய தாஇநு நல்ல நாச்சியார்க்கு அமுது படிக்கும் திருப்பணிக்கு

9 ம் திருவிளக்குக்கும் உடலாக குடி நீங்கா தேவதானமாக

10 கணத்துணட்டி என்று பேரோதப்பட்ட தடி ஒன்...

11 துவிக்கில் பக்கத்தில் பக்ககொல்லை என்று பேரோதப் பட்ட

12 ஆக நன்சை குழி எண்ணூறும் புன்சை குழி அஞ்னூறும்

13 (நாச்சி) யார்க்கு குடுத்தேன் இலங்கேசுவரதேவனேன் இது

# 65

*எலவானாசூர்ச் சிவன் கோயில் முதற் பிரகாரத்துத் தெற்குப் பக்கப் படிச் சுவர்—பாண்டியன் ஸ்ரீவல்லபனின் (?) 5ஆவது ஆண்டு (கி. பி. 1137 ?) 136 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீ கோமாறவந்மர் திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ பல தேவர்க்கு யாண்டு 5 வது மகர நாயற்று அமர பக்ஷத்து

2 நவமியும் திங்கட்கிழமையும் பெற்ற சோதி நாள் மலா டாகிய செனனுத வளநாட்டுப் பரனூர்க் கூற்றத்து பிரம்ம தேயம் இறைவானரையூரான ஸ்ரீ

3 சோழகேரளச் சதுவேதி மங்கலத்து உடையார் ஊர் பாகங் கொண்டருளிய நாயினர்க்குத் திருநுந்தா விளக்கு எரிப்பதாகப் பருஊர் உடையார் தேவர் சச்சியார் பிள்ளை

4 களில் காளத்தி நாதர் வைத்த திருநுந்தா விளக்குஇரண் டுக்கு இக்கோயிலித் தானத்தார் சந்திராதித்த வரைக்கு எரிப்பதாகக் கொண்டுவிட்டஇவ்வூர்மேல்

5 பிடாகை விக்கரச்சி மங்கலத்து ஏரிகீழ் நைஞ்சைநிலத்து வதிக்கு தெற்கு பார்க்கவன் ஆண்டபெருமாளான சிவராகபட்டர் ஊர்பாகங் கொ

6 ண்டார் பக்கல் கொண்டுடையேனான பெருவாய்க் காலுக் குக் கிழக்கு புளியஞ் செய் க்ஷக அளவின்படி குழி 343¾ கிணறு மரமும்

7 இதன் வடக்கு தெற்கில் கடம்பன் தடிக்ஷக அளவின்படி குழி 224¾ம் ஆக குழி 568 ம்...சிங்கப்பி

8 ரான்பட்டர் நம்பிள்ளை பக்கல் கொண்டுடையேனான அரைக்கால் க்ஷக அளவின்படி குழி 200ம் கிணறு மோடையும் ஆக மிகுதிக் குறைவு

9 ள்ள பங்கின் குழி 200வும் இன்னிலத்தால் வரும் ஏரிநீர் உரிமை வாய்க்கால் உரிமையும் நா(ன்) கொண்ட படியே சாதனங்களும் கோயிற்பண்டாரத்தே திரு நாமத்துக்காணி

10 யாகக் குடுத்து யிறையிலியாகத் திருமுகம்...வாங்கிக் குடுத்துக் கல்வெட்டிக் குடுத்தேன் காளத்தி நாதனேன் உது பந்மாஹேஸ்வர ரக்ஷை

## 66

*எலவானாசூர்—வாரிக் கொல்லை யிலுள்ள கற்பலகை*
*கி. பி. 14ஆம் நூற்றாண்டு எழுத்துகள் 508 of 1937–38.*

1 ஸ்வஸ்தி சி

2 புத்தூர்க்கால்

3 வெட்டுவித்தாள்

4 பல்லவநாந

5 இராச நாராயணக்

6 காடவராயன் த

7 ம் பிராட்டியாரில் பாந்

8 நரங்கநார்

*எலவானுசூர் — சிவன்கோயில் முதற் பிரகாரத்துத் திருச்சுற்று மாளிகையின் வடக்குச் சுவர் — சகம் 1284 (கி.பி. 1362)–430 of 1937–38.*

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸகாத்தம் 1284ன் மேல் சுபகிருது வருஷத்து தநு நாயற்று பூருவ பக்ஷத்து த்ரயோதஸியும் புதந் கிழமையும்

2 பெற்ற கார்த்திகை நாள் மலாடாகிய ஜனநாய வள நாட்டுப் பரனூர் கூற்றத்து பிரம்மதேயம் இறையா நரையூரான ஸ்ரீ சோ

3 ழ கேரளச் சதுவேதி மங்கலத்து உடையார் ஊர்பாகங் கொண்டருளிய நாயனார் கோயிற் தானத்தார்க்கு ஜயங் கொண்ட சோழ மண்

4 டலத்து செம்பூர்க் கோட்டத்து பட்டினநாட்டுப் பழம் பட்டினத்துச் செம்போதி வில்லவதரையர் மகன் மாணிக்க நாயனார் காங்கேயராயனே (ன்)

5 இன்னாயனார் திருமுன்பே நான்வைத்ததிருநுந்தாவிளக்கு இரண்டுக்கும் சந்திராதித்த வரையும்...எரிவதாக விட்ட நிலமாவது குறுக்

6 கைக் கூற்றத்துச்சிக்காட்டுப்பற்றுஅதகூரில்நல்லூருடையான் கூத்தன் அதியமான் மகன் சேவகனானநரசிங் கமுனையதரையர் பக்கல் நான்

7 கொண்ட சாதனப்படி இவ்வூர் ஏரிகீழ் நன்செய் நிலங் களான தடிகுழி 300ம் வடமேற்கடைந்த கிணறும் தென்மேற்கு மேலை மாங்குண்டு 400ம் இங்கு

8 விட்டு வடக்குமேலை ஆத்தி வடமதக்கு 100ம் ஆககு(ழி) 500ம் கிணறும் இவ்வூர் பிடாகை நக்கம்பூண்டியில் புளியஞ்செய் தடிக்குழி முன்னூறும் இச்செய்(க்)

9 கு மலையமான் வடகலை கிணறும் இங்கு விட்டு தென் மேற்கு மலையன் மேல் கூறுதடி தடிக் குழி இருநூறும் ஆக தடி இரண்டினுல்

10 குழி அஞ்நூறு(ம்)ஆக மும்கிணறு இரண்டும் திருநாமத் துக் காணி ஆக வைத்தும் பண்ண வகையில் இன் னிலங்களுக்கு திருச்சூல ஸாபனமும்

11 பண்ணிக்கொண்டு காரும் பசானமும் ஒரு புகம் தடி முட்டிப் பயிர் செய்து வாரம் கொண்டு திரிநுந்தா விளக்கு இரண்டும்

12 சந்திராதித்தவரையும் எரிவதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளும்படிக்கு கொப்பணண்கல்...

13 நிருபங் குடுத்த அவைக்கு இம்மரிவாதிதாமுவற்நமத்திக் (?) கொள்ளவும் இந்த திரிநுந்தா விளக்கு பானி பண்ணினுன் உண்டாகில் கெங்கை கரையில்காராம் பசு

14 வைக் கொன்ற பாவத்தை அனுபவிக்கக் கடவர்கள் வன்மாகேஸ்வர ரக்ஷை இந்நிலம் விற்றமைக்கு நல்லூருடையான் அதியமான் சேவகன்

15 ஞயர் எழுத்து காட்டுமயிலூர் பற்றுஞயர் எழுத்து பாணயர்பற்று ஞயர் எழுத்து பிடாகைப்பற்றுஞயர் எழுத்துஆதனூர்பற்றுஞயர் எழுத்து புல்லூர்பற்று ஞயர் எழுத்து

16 பழங்கூர் பற்று ஞயர் எழுத்து வீரசோழபுர பற்றுஞயர் எழுத்து கல்லைக் குறிச்சிஞயர் எழுத்து திருநாம நல்லூர் பற்று ஞயர் :எழுத்து எலும்...பற்றுஞயர் எழுத்து.

# 68

*முதற்பிரகாரத்து திருச்சுற்று மாளிகையின் வடக்குச் சுவர்—இரண்டாம் கம்பண உடையார் கலம் (கி.பி. 1371—1374) 162 of 1906.*

1 ஸவஸ்திஸ்ரீ மனுமண்டலீசுரன் அரி
2 ராச விபாட பாகைக்கு...தப்புவராயர் கண்
3 டஸ்ரீகம்பண உடையாற்கு திருவிராச்சிய
4 ம் செல்லாநின்ற பிற்மாதி வருஷம் உடை
5 யார்உடையார் ஊர்பாகங்கொண்டருளிய நா
6 யனுற்கு பஞ்சதேவிதம் ஆடி அருள பருஹூற்கச்சியரா
7 யர் பிள்ளைகளில் காளத்திநாதந் விட்ட பசு இரண்
8 டும் கன்று தாய்ப் பசு மூன்றும் ஆகப்பசு அஞ்
9 சும் சந்திராதித்தவரையும் ஆடி அருள இது
10 மகேசுவரர் ரக்ஷை.

# 69

*இரண்டாம் பிரகாரத்துக் கிழக்குச் சுவர்—விசயராய மகாராயர்—சகம் 1368 (கி.பி. 1446) 161 of 1906.*

1 ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலீசுர அரியராய விபாடன
பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் மூவராயர்
கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு
கொடாதான்

2 ஸமுத்திராதிபதி கெசவேட்டை கண்டருளி ஸ்ரீவீரப்
பிரதாப விசயராய மகாராயர் பிறுதுவிராச்சியம்
பண்ணி அருளாநின்ற ஸகாத்தம் 1368ன்மேல்
செல்லா நின்றக்ஷய...

3 வருஸர்த்து துலா நாயற்று பூறுவ பஷத்து வெள்ளிக்
கிழமையும் தெசமியும் பெற்ற அவிட்டத்து நாள்
வழுதிலம்பட்டுச் சாவடிநாடும் காணிக் கருமபரி
வாரமும்தொண்டைமானுர் கச்சிராயர்கச்சிராயரும்

4 இராயதப்பிற் காணத்து (இந்) நாகரச உடையார்
நிருபப்படி இனவரி இடங்கைவரி கழித்து கல்லு
வெட்டுவித்தபடி இராச்சியத்தில் வலங்கை
இடங்கை இந்த இரண்டு வகையில் குடிகளையும்
பிறதானிகள்மன மாதங்கள்தோறும் காணிக்கைகொ

5 ண்டு இந்தாலே குடிகள்உள்ளதுநலங்கபுறஇராச்சியமே
ஓடிப்போய் இத்தாலே தேவதானங்கள் பூசை
திருநாளும் குலைந்து இராச்சியம் வியாதியும்
ஆய் மனித்தர் உள்ளம்செத்து நலங்கினபடி ஆலே
இந்தச்செய்தி இராயர் திருவுள்ளம் பற்றி அருளி

6 வலங்கையில் யிடங்கையில் உண்டு ஆன குடிகளுக்கும்
காணிக்கை கொள்ளக்கடவதல்லஎன்று அண்ணப்ப
உடையார்க்கு இராயர் இராயர்தம் திருவுள்ளம்பற்றி
அருளின அளவில் இந்த இனவரியும் இடங்கை
வரியும் கழித்து அண்ணப்ப உடையார் சிலசில இட

7 த்துக்குக் கல்வெட்டுவித்து சிலசில இடத்துக்குக் கல்லு
வெட்டுவியாதபடியாலே இந்தச் செய்தி நாகரச
உடையார்க்கு விண்ணப்பம் செய்தபடியாலேஇம்மதி
இ(ந்)நாகரச உடையார்நிருபம்த நகையில்இன்றுள்
முதலுக்கு வலங்கை

8 இடங்கையில் பல குடிகளுக்கும் இனவரி இடங்கைவரி
என்று கொள்ளக்கடவதல்லவாகவும் இதுக்கு
இராசதரத்துக்கு உடகுடுத்து கலை அவிசாரித்த
வன் சிவத்து இராதி இராசத்து இராதிநாட்டு
இராதருனத்து இராதிப்படதும்பட்டு

9 கெங்கைக் கரையில் கபிலவதை பண்ணின பாபத்திலே
போகக் கடவர்கள் ஆகவும்

# 70

*இரண்டாம் பிரகாரத்து மேற்குச் சுவர்—சகம் 1432 (கி பி. 1510)—485 of 1937—38*

1 ஸ்வஸ்திஸ்ரீமந் ஸகாத்தம் 1432 மேற் செல்லாநின்ற
பிரமாதூதஸ்ரீ புரட்டாதி மீ 2 உ உடையார்
ஊர்பாகங் கொண்டருளிய தம்பிரானார்
ஸ்ரீகாரியம் ஆதிசண்டேசுரர் திருவாய் மலர்ந்
தருளினபடி மெய்கண்ட சன்தாநத்து
திருவண்ணாமலை

2 சத்தியஞான தெரிசினிகள் சிஷாபுராணம்
திருமலைநயிநார் சந்திரசேகர் இறைசை
புராணம் செய்து வருகையிற் சன்னதியிற்
திருச்செவிசாத்தி ஆனந்த தாண்டவன்
திருவீதி தென்கிழக்கில் மனையொன்றரை மடமும்

3 திருநாமத்துக்காணி ஆன நல்லரசூரில் நஞ்செய்
றம்பே கிணறும் புன்செய்...தமக்கு விட்ட
மனை ஒன்றரையில் மனைஒன்று நீக்கி நின்ற
பாதிமனை சொக்க நயினார்க்குமாகச் செய்தத—
(சர்வ) சுதந்திரமும் திருக்கண் சாத்தும் சந்தி

4 ராதித்தவரையும் சந்திரன் பரம்பரையாக அனுபவித்
துக்கொள்ளக் கடவாராகவும் ஸ்ரீகாரியம் குத்த
னூராப்பன் பொற்கோயில் னம்பி நானூற்றுவப்
பண்டி(தன்) இறைசை...

# 71

*இராசகோபுரத்துக் கிழக்குப் பக்கக் குமுதப்படை—கிருஷ்ணதேவராயர்—சகம் **1442** (கி.பி. **1520**)—**494** of **1937—38.***

1 ஸ்வஸ்திஸ்ரீ விஜயாது...சாலிவாகந சகாத்தம் 1442
யிதின்மேற் செல்லாநின்ற விக்கிறதி வருஷத்து
கடக ஞயிற்று பூறுவ பஷத்து தெசமியும் ஸோம
வாரமும் கார்த்திகையு(ம்) பெற்ற

2 ஸ்ரீமந் ராசர்திராசநாந பரமேசுரந் ஸ்ரீவீரபிரதாப ஸ்ரீவீர
கிறிட்டிணதேவமகாராயர் வாசல் மல்லப்பநாயக்கர்
புத்திரந்திம்மப்ப நாயக்கர் யிறைவான்னூரூர்
நயினுர் உரோபாகம் கொண்ட அருளிய நாயனுர்

3 கோயிலில் ஆதகண்டேசுரர் தேவர் ஸ்ரீபண்டாரத்துக்கு
குடுத்த தருமசாதநப்பட்டயம் நம்முனுய்
நாயநாயகத் தானத்துக்குச் செல்லும்வழுதிலம்பட்டு
உசாவடி புவனேகவீரந்பட்டணசீமைகெடிலத்துக்கு

4 தெர்க்கு திருமுனைப்பாடி நாடு பன்னிரண்டு பற்றில்
ஸ்வாமி கிருஷ்ணதேவ மஹாராயற்கு யம்மமாக
காவேரி நெதி தீரத்தில் சிரஸானம்...காலத்தில்
பிடாகைப் பற்று

5 செம்பியன்மாதேவி பூறுவதேவதானம் ஆனது கொண்டு
செய்த கிராமமாந இந்த க்ராமம்...ணுக்கு
உண்டான நான்கெல்லைக்கு உட்பட நஞ்செய்
புஞ்(செ)ய் நத்தம் செய்தலைத் திடல் மாவடை

6 மரவடை குளவடை சாற்கல்லாயம் கருவிபணம்
செக்காயம் திரிகை ஆயம்...மாதாரிகம் தலை
ஆரிக்கம் செக்கோட்டு போகம் கடமை தற்கடமை
உட்ப்பட செத்த க்ராமம் ஒன்றுக்கு நடப்பினபடி

7 ளதுமாந வகை உதையம் கண்டுகொண்டு இன்னுய
றுற்கும் காபூசை இருப்பணி திருக்கோபுரம்
திருப்பணி நடத்தவும் இந்தப் பொந் உள்ளதுக்கும்
இந்த கிருமம் செம்பியந்மாதேவி நான் கெல்லையும்ப

8 மூய சூலக்கல்லும்ஆய் குமுதப் படையிலே கல்வெட்டும்
ஆனபடி ஆலே சுவாமி தந்மமாக சந்திராதித்த
வரையுசறுவ மானியம் ஆக அனுபவித்துக்கொண்டு
திருப்பணி நடத்தவும் இந்த தருமத்துக்கு அதிதம்
பண்ணிநவர்கள் கெங்கை க

9 ரையிலே காராம்பசுவைக் கொன்ற பாவத்திலே போக
கடவார்களாகவும் திம்மப்ப நாயக்கர்...

# 72

*இராச கோபுரத்து மேற்குப் பக்கக் குமுதப்படை—கிருஷ்ணதேவராயர்—சகம் 1449 (கி.பி. 1527) -495 of 1937—38.*

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன்மஹாமண்டலீஸ்வரன் மேதின
மீசுரகண்டன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன்
துலுக்கர் ஒட்டியர்கள் விபாடன் எம்மண்டலமு

2 ம் கொண்ட இராசாதிராசன் இராசபரமேசுரன்
உத்ததிரியும் கொண்டு இராகுத்தராயனையும்
செதுக்கொண்டு கொண்டவீடு கொண்டப்
பள்ளியும்கொண்டு பிறதாபருத்தறராய குமாரரனை

3 பத்திற இராயனையும் செதுக்கொண்டு கட்டணடுவன்
நதியிலே சென்றும் சரதாநமும் பண்ணிபட்டனுர்

சங்கராத்திறிய் இல் செய தம்பமும் நாட்டி அருளிய
கிட்டணதேவ மகாராயர் பிதி

4 விராச்சியம் பண்ணி அருளானின்ற சகாத்தம் 1449
இதன்மேல் செல்லானின்ற பிற்மாதிஸம் வற்சத்து
மகர நாயற்று பூறுவ பக்ஷத்து திறதியையும் சோம
வாரமும் பெற்ற அத்த ந(ா)ள் ஷகுத்து (?)

5 நாள் ஸ்ரீமது சன்னப்ப நாயக்க அய்யன் சூரிய—வாசவ
நாயக்கர் மகன் இராமையர் என்னட சுவாமி வாசல்
மல்லப்ப நாயக்கர் அய்யனது மக்கள் திம்மப்ப
நாயக்கர் அய்யன் ஆதி அப்ப நாயக்கர் அய்ய

6 ன் சன்னப்ப நாயக்கர் அய்யனுக்கும் மல்லப்ப நாயக்கர்
அய்யனுக்கும் த்ன்மமாக என்னிடைய . ஆனபன்னி
ரண்டு பற்றுக்குள் படாகைப் பற்றில் இறைவா
நாதர் உடையவர் ஊர்பாகங் கொ

7 ண்டருளிய தம்பிரானுற்கு பூறுவம் தேவதானம் திரு
நாமத்துக்காணி ஆன சூற்றியன் குறிச்சிக்குகுமுதப்
படையிலே கல்வெட்டும் திருச் சூலக்கல்லும் இரு
காயிலே பூறுவம் நடந்து பின்பு திறந்து கொண்டு
பண்...

8 டாநவானு ஆய் வருகையில் தம்மப்ப நாயகர் அய்யன்
சீமை ஆண்டாற்கு பூறுவம் நடந்த தேவதானம்
திருவிடை ஆட்டம் உண்டானது எல்லாம் கல்
வெட்டுப் படியும்...விடுகையில் பூறுவ

9 கல்வெட்டும் குமுதப்படையிலே கல்வெட்டும் பாத்து
விடுவிக்கையில் திருக்கோபுரம் திருப்பணிக்கும் மகர
பூசைக்கு(ம்) மல்லப்ப நாயக்கர் அய்யன் தம்மப்ப
நாயக்கர் அய்யன் ஆதிஅப்ப நாயக்கர் அய்யன் சன்

10 னப்ப நாயக்கர் அய்யனுக்கும் தன்மமாக பூறுவம் கல்
வெட்டுப் படியிலே சந்திராதித்த வரையும் நடத்தக்

கடவாராகவும் இந்தத் தன்மத்தை மேலே மேலே பரிபால

11 னம்பண்ணி நடத்தினவர்கள் கெங்கைக் கரையிலே ஆயிரம் அஸ்வமேதியாகம் பண்ணின பல(ன்) பெறக் கடவர்கள் ஆகவும் கெங்கைக் கரையிலே ஆயிரம் பசுவைத் தானம் பண்ணின புண்ணியங் கள் பெறக்கட

12 வர்கள் ஆகவும் கெங்கைக் கரையிலே கோடி கன்னியா தானம் புண்ணின புண்ணியம் பெறக்கடவர்கள் ஆகவும் இந்தப் பட்டையப் படிக்கு குமுதப்படை யிலே கல்லும் வெட்டிக் குடுத்துப் பட்டையமும் குடுத்தபடி

13 யாலே சந்திராதித்தவரையும் நடக்கக் கடவதாகவும் இந்தப் பட்டையப் படிக்கு பன்னிரண்டுபற்றுநாட் டவரும் ஒப்பி முன் தேவதானம் ஆன சூரியங் குறிச்சி பூறுவம் கல்வெட்டுப் படியாலே தவம் தம்மப்ப நாய

14 க்கர் ஐயன் விடுவிக்கயில் நாங்களும் இடப்பி நாட்டுக் கணக்கப்பிள்ளை மை எழுத்து இட்டுக் குடுக்க சொல்லி கட்டளை இடுகையில் நாட்டுக்காக பிள்ளை வல்லவரா(ய)ன் எழுத்து இவை தென்வவரா(ய)ன்

15 எழுத்து உ.

# 73

*இராஜகோபுர வாயிலின் இடப்பக்கச் சுவர்—அச்சுத தேவ மஹாராயர்—சகம் 1453 (கி. பி. 1531)*

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன் மகா மண்டலேஸ்வரன் அரியராய விபாட

2 ணபாஷைக்குத் தப்புவராயர் கண்டன் மூவார் கண்டன் கண்ட

3 ஞுகொண்டு கொண்ட நாடு கொடாதான் மேதினீ மீசுர கண்டன் கட்டாரி

4 சாளுவன் துலுக்கர் ஒட்டியர் தளவிபாடன எம்மண்ட லமும் கொண்ட ரா

5 சாதிராசன் ராச பரமேசுரன் ஸ்ரீவீறப்பிறதாபன் வீர சேகரி பூறுவ தெக்ஷிண

6 பச்சம் உத்திரத்து சமுத்திருதிபதி கேச வேட்டைகண்ட ருளிய ஸ்ரீ அச்சிந்த

7 தேவ மஹாராயர் பிறுத்திவி இராச்சியம் பண்ணிஅருளா என்ற சகாப்தம் 14

8 53 இதன்மேல் செல்லா நின்ற கர வற்சர்த்து தனு நாயற்று பூறுவ

9 பக்ஷத்து துதியையும் பானுவாரமும் பெற்ற உத்தி ராடத்தி நாள் மலா

10 டான ஜனநாத வளநாட்டுப் பரனூற் கூற்றத்து பிரம்ம தேயம் இறைவா

11 நரையூரில் பன்னிரண்டு பற்றில் நாட்டவரும் திருக் கோவலூர் உடையார் திரு

12 நரசிங்கமுடையார் நயினர் கோயிலில் ஸ்ரீ சண்டேசுர நயினர் ஸ்ரீபண்டாரத்துக்கு

13 தறும சாசனப்பட்டயம் குடுத்தபடி இன்னயினர் திருநாமத்துக் காணியான பழ

14 ங்கூர் பற்றில் குமிழி சேரசோழ பாண்டிய புரத்தில் குதிரைக் காணிக்கை ஆக எ

15 ங்கள் சீர்மையிலே ரேகை பதிஞ்ச ௵ 3645½ இந்தப் பொன் முப்பத்தாறும் ப

16 ணம் அஞ்சேகாலும் கழித்துக் கொண்டு இன்னயினுற்கு பூசைத் திரு

17 ப்பணி நடத்தவேண்டி நரசிங்கமுணையதரையர் பெருமாள் நயினுரை...

18 ம் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு தானத்தாரும் பரி(வார)முமாக இறைவா நரை

19 யூரிலே வருகையில் ஸ்ரீமன் மண்டலேசுரன் திம்மயராசாவின் வீரபுத்திரன் போ

20 கையதேவமகாராசனின் முன்பாக பன்னிரண்டு பற்றில் நயினுர் கச்சிராய

21 ரும் நாட்டவர்களும் இந்த ரேகை பொன் முப்பத்தாறுய பணம் அஞ்சேகா

22 லும் பன்னிரண்டு பற்றிலும் நாங்கள் இறுப்பதாக பதிஞ்சு கொ...எ

23 ங்கள் நயினுர் நரசிங்கமுடைய நயினுற்கு சறுவமானிம்மாக திருப்புண்(ணியத்து)

24 க்குத் தாரை வாத்து இந்தக் குதிரைக் காணிக்கை கழித்துக் குடுத்தோம் இந்த

25 சறுவ மானியம் சந்திருதித்தவரையும் நடக்கக் க(ட)வதாகவும் இந்தப்படிக்கு

26 க்குமுதப்படையிலும் கல்வெட்டிக் குடுத்தோம் இந்த சறுவ மானியத்துக்கு அ

27 விதம் பண்ணினவன் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாவ

28 த்திலே போகக் கடவதாகவும் தன்மாதா பிதாவுக்கு இரண்டு நினைத்த பாவத்தி

29 லே போகக் கடவநாகவும் இவை கச்சிராயன் எழுத்து இவை சவுந்தர பாண்டிய மலைய

30 ன்னுயந் எழுத்து காட்டுமயிலுடையார் எழுத்து இவை கொங்கராயர் எழுத்து வீரச

31 ம்பாவண்டாயர் எழுத்து இவை திருமுடிக்காரியார் எழுத்து குருகுலத்தரையர் எ

32 ழுத்து முடிகொண்ட வேளார் எழுத்து குருகுலராயர் எழுத்து ரா(ஜ)ரா(ஜ) வேளார் எழுத்து இவை

33 பன்னிரண்டு பற்று நாட்டுக் கணக்கப்பிள்ளை எழுத்து பழங்கூற் பற்று நாட்டுக் க

34 ணக்குப் புகழ்விளைப் பெருமாள் எழுத்து ஸ்ரீபரமேசுரர் ரக்ஷை உ.

# 74

*இராசகோபுரவாயிலின் இடப்பக்கச் சுவர்—அச்சுத தேவமகாராயர்—சகம் 1457 (கி. பி. 1535)*

1 உ...ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன்மஹாமண்டலேஸ்வரர் ராஜாதி ராஜபரமேஸ்வர ஸ்ரீமயிஸ்வர நரஸி

2 வற் தேவகுமரர் ஸ்ரீவீரப்பிறதாபஸ்ரீமது அச்சுதப்ப தேவ மஹாராயர் பிறுதிவிராச்

3 சியம் பண்ணி அருளாநின்ற ஸகாப்தம் 1457 பதி(ன்) மேல்ச் செல்லாநின்ற

4 மன்மத சம்வர்ஷரத்து மிதுந நாயற்று பூறுவ பக்ஷத்து துதியையும் பிரகெஸ்பதி

5 வாரமும் பெற்ற...த்ததெது நாள் ஸ்ரீமன் மஹாமண்ட
லஸ்வரர்

6 கர் சலக்கைய தேவமஹாராஜ குமரர் ஸ்ரீ திருமலையதேவ
மஹாராஜர் ஸ்ரீ அச்சுதைய தேவ

7 மஹாராயர்குப் புண்ணியமாக ஸ்ரீமன் மகாமண்டலேஸ்
வரர் சோளகுல இலக உறையூர் புரவாதிஸ்வர

8 திப்பயதேவ மஹாராஜ குமாரர் ஸ்ரீமாபோகையதேவ
மஹாராஜர் திருமலையதேவ மஹாராஜா

9 வின் ஆப்பிணைப்படிக்கு மலாடாகிய ஜநநாதவள
நாட்டுப் பரநூற் கூற்றத்து பிரம்மதே

10 சம் இறைவாநரையூராந ஸ்ரீசோளகேரள சதுர்வேதி
மங்கலத்து உடையார் போகீசுரமு

11 டைய தம்பிராநாற்கு திருப்பணி மஹாபூசை அங்காங்
கவை போகங்களுக்கும் முன்

12 பிடாகை பற்றிந் சீயமங்கலம் கிருமம் ஒன்று இந்த
கிருமம் ஒன்றும் நன்செய் புன்செய் நாற்

13 பாற்கெல்லையும் அட்டி போக...மாகப்

14 பண்ணிக் குடுத்தோம் இந்த நயினுர் ஊர்பாகம்
கொண்டருளிய நயிநாற்கும் உடையார்

15 போகீசுரமுடைய நயினுநாற்கும் இந்த கிருமம்
சீயமங்கலம் தேவதாநம்மாகச் சந்திராதித்த

16 வரையும் நடக்கக் கடவதாகவும் இந்த தன்மத்துக்கு
யாதொரு பாவுதம் பண்ணிநவர்கள்

17 கம்கைக் கரையிலே...பண்ணினுரைக் கொன்ற
பாவத்திலே போகக் கடவராகவும்...

18 இவை சவுந்திரபாண்டிய...பொன்னயினுர் எழுத்து
இவை கொங்கராயர் செம்புளுதர் எழுத்து.

## 75

எலவானூருக்கு அண்மையில் உள்ள குஞ்சரம் என்னும் சிற்றூர்—ஸ்ரீசைலேசுவரர் கோயிலின் தெற்குச் சுவர்—சதாசிவதேவர்—சகம் *1478* (கி.பி. *1556*) கற்பலகைகள் இடம்மாறி அமைந்துள்ளன. இறுதி கிடைக்கவில்லை.

1 இராசாதிராசராச பரமேசுவரன்...

2 பூறுவ தெஷண பத்திம... ஸ்ரீவீரப்பிறதாப ஸ்ரீசதா
சிவதேவமகாராயர்

3 பித்தி ஊர்ச்சிதம் அருளாநின்ற சாலிவாகன
சகாத்தம் 1478...நள வருசர்த்து மகர நாயற்று

4 துவாதெசியும் சோம வா

5 ரமும் பெற்ற மகத்து...திலே மலாடாகிய செனநா

6 தவளநாட்டு பரனூற் கூற்றத்து இறை

7 வானரையூரில் பிடாகை

8 ப்பற்று குஞ்சிரத்து திரு

9 மலையம்மான் புரத்து உடையார்

10 திருக்குன்றீசுர முடையார்...

11 காளத்தியப்பர் உடையார் திருகுன்றீசுரமுடை...
அமுற்தவல்லியம்மை

12 திருவிளக்குப் புறமாக...

## 76

எலவானூர்ச் சிவன் கோயிலின் இராசகோபுரத்துக் கிழக்குப் பக்கக் குமுதப்படை—சதாசிவதேவர்—சகம் *1495* (கி.பி. *1573*)—இறுதி காணப்படவில்லை. *493* of *1937—38.*

1 ஸ்வஸ்திஸ்ரீஸ்ரீமன்மகாமண்டலேசுரன் அரியராயவிபாடன
பாசைக்கு தப்புவராயர் கண்ட கண்டநாடுகொண்டு

கொண்டநாடு குடாதான் பூறுவ தக்கண பச்சிம
உத்தரா ஸமுத்திராதிபதி ஸ்ரீவீரப்பிரதாப

2 சதாசிவதேவ மகாராயர் பித்தி ஊர்ச்சிதம் பண்ணி
அருளாநின்ற சகாப்பிதம் 1495 இதன்மேல் செல்லா
நின்ற ஆங்கிர(சு) வருஷம் சித்திரை 10உ ராயசம்
திருமலையர் பண்டாரத்துக்கு அரியலூர் அரசு

3 நிலையிட்ட கிருஷ்ணப்ப மாலவராய நாயிநாற்கும் பன்னி
ரண்டு பற்று நாட்டார் குறும்பியூர் வாணப்பநயினர்
ஆசனூர் வெங்கப்ப முதலியாரும் பரணையூர்
கொங்குராய பண்டாரமும்

4 நெசலூர் காட்டுமெல்லுடையாரும் உளுந்தூர் பிழை
பொறுத்த நாயினரும் செங்குறிச்சி பெருமாள்
நயினரும் பாதூர் ஸஞ்சராயரும் நடுவிப்பட்டு
வன்னிம நாயக்கரும் மற்றுமுண்டான நாயாரும்...

## 77

*முதற்பிரகாரத்துத் திருச்சுற்று மாளிகையின் வடக்குச் சுவர்—கொப்பண உடையார் 481 of 1937—38.*

1 உடையார் ஊர்பாகங் கொண்டருளிய நாயனுற்கு
2 சுபசிருது வருஷம் பங்குனி மாதம் 15உ கொப்பண்ண
3 உடையார் நிருபப்படிக்கு சிக்காட்டுப்பற்றில் சீதேவியில்
4 வாணதராயன் ஏந்தலில் பிறை உடையான் திருவேகம்
5 பம்உடையான் திருமுடிக்காரிக்கும் நீங்காத திருவிளக்கு
6 ப்புறஇறையிலி ஆகவிட்ட திருநுந்தா விளக்கு ஒன்றுக்கு
7 வாணதராயன் தடி ஒன்று குழி 330ம் பிறை உடையான்

8 தடி ஒன்று குழி 220ம் வடமேலைமூலை கிணறும் விட்டேன்
9 திருமுடிக்காரியேன் பன்மாஹேஸ்வர ரக்ஷை.

# 78

*முதற்பிரகாரத்துத் திருச்சுற்று மாளிகையின் வடக்குச் சுவர்—481* of *1937—38.*

1 சுபகிருது வருஷம் பங்குனி மாதம் 16உ உடையார்
2 ஊர் பாகங் கொண்டருளிய நாயினார்க்கு
3 குடிநீங்காத திரிநுந்தா விளக்கு ஒன்றுக்கு அதகூர்
4 நல்லுடையான் சேவகன் இராசநாராயண
5 நரசிங்க முனையதரையன் உடையா(ர்) திருப
6 ப்படிக்கு சிக்காட்டுப் பற்றில் அதகூரில் விட்ட
7 குசப்பட்டி தடி ஒன்றும் நாவல் குண்டு தடி ஒன்றும்
8 வேப்பங் குண்டுதடி ஒன்றும் புளியங்குண்டு தடி ஒன்றும்
9 ஆகதடி 4ம் விட்டேன் இராசநாராயண நரசிங்க
10 முனைய தரையனேன் இது பந்மாஹேஸ்வர ரக்ஷை.

# 79

*இராசகோபுரத்து வலப்பக்கச் சுவர்—கல்வெட்டுப் பாடல்—உரைநடைபோல் பொறிக்கப்பட்டிருப்பினும், இங்குப் பாடல் அமைப்பில் தந்துள்ளேன். 497* of *1937—38.*

ஸ்வஸ்திஸ்ரீ பராந்தகன் தாமோதரபட்டர்
பாண்டவ தூதனுயன் கவி உ

"விதியா ரெழுத்தையும் வெற்றெழுத் தாக்கித்தெவ்
வேந்தர் தங்கள்
பதியா னதுகொண் டிளவர சர்க்கும் பராந்தை வந்து
மதியால் வளங்கொண்ட பாண்டவ தூதன் மறையவர்
சொன்
சதியா விளங்கிய தாமோதரன் உத்தம...மே"

# 80

*எலவானாசூருக்கு அண்மையில் உள்ள* **புகைப்பட்டி** *என்னும் சிற்றூர்*—**பிடாரி கோயில் நடுகல்**—*இது முடிவு பெறவில்லை. 359 of 1937—38.*

1 ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம்

2 சித்ரபானு ஸு பங்குனி மாதம்

3 13உ சித்தமனு

4 யனி அண்ணுமலைனுய

5 கரைய்யன்னுக்கு புண்

6 ணியம்மாக செப்பிவி

7 எல்லப்ப நாயகர் குமா

8 ரர் ராம னுயக்கர் பண்

9 ண படாகைப் பற்றில்

10 சேந்த புகமப் பெட்டியி

11 ல் பிடாரியார் திருனுளு

12 க்கும் சந்திக்குமாக புஞ்

13 ஷைசயில் மலையன்னூர்

14 எல்லைத் தருவாய்

15 க் கொல்லையில் 100 ம்

16 யிந்தப் புண்ணியம்

17 (சந்திரா)தித்த வரையும்

18 நடக்கக் கடவதா

19 கவும் யிந்த பு

20 ண்ணியத்துக்

21 கு............

மேற்கண்ட எண்பது கல்வெட்டுகளையும் படிக்கும் போது அவ் அக்காலத்திய செயல்முறைகள் புலனுகின்றது அன்றே? முற்காலம் பொற்காலம் என்று எண்ணி நாம் பெருமை கொள்ளலாம் அல்லவா!






புதுவை மாநிலத்தின் மேதகு ஆளுநர் உயர்திரு **சேத்திலால்** அவர்கள்
நூலாசிரியருக்குப் பொன்னாடைப் போர்த்திப் பாராட்டுகிறார்.